583

583

4-57

UNIVERSITY OF MADRAS

B. Sc. DEGREE EXAMINATION

Home Science

389

PART II – TAMIL

SELECTIONS IN POETRY

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 DEC 1957
MADRAS

DOCTRINA VIM PROMOVET INSITAM

O-,1x
N57
112029

Price Re. 1·50

UNIVERSITY OF MADRAS

B. Sc. DEGREE EXAMINATION

Home Science

PART II—TAMIL

SELECTIONS IN POETRY

O-,½
N57

PRINTED AT
THE KESARI PRINTING WORKS,
MADRAS-1.

TAMIL NADU ARCHIVES LIBRARY
MADRAS
112029

பொருளடக்கம்

பக்கம்

1. திருக்குறள் 1
பதினைந்து அதிகாரங்கள்

2. மணிமேகலை 13
மலர்வனம் புக்க காதை

3. கம்பராமாயணம் 20
கைகேசி சூழ்வினைப் படலம்

4. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 41
வருகைப் பருவம், ஊசற் பருவம்

குறிப்புரை

1. திருக்குறள் 46

2. மணிமேகலை 70

3. கம்பராமாயணம் 79

4. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 88

1. திருக்குறள்

திருக்குறள் என்பது, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என மூவகைப்படுத்துக் கூறும் நூல் தொகையுள், பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்ததும், அதில் தலையாயதும் ஆகும். இதனோடு அடுத்து ஒருங்கு சேர்த்து எண்ணப்படும் தகுதி வாய்ந்தது, நாலடியார். "ஆலும் வேலும் பல்லுக் குறுதி ; நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என வழங்கும் பழமொழியில், 'இரண்டு' என்ற சொல்லால் குறிக்கப்படுவது, இரண்டு அடிகளால் இயன்ற குறள் வெண்பாக்களால் ஆகிய திருக்குறளேயாகும்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் உயிர்க்கு அளிக்கும் மொழித் திட்பம் வாய்ந்த தாதல்பற்றிச் சொல்லுக்குறுதி எனப் பட்டது. இதை யடுத்து, நாலடியாரும் அத் தகையதே யாகும்.

உறுதிப் பொருள்கள் நான்கனையும் அளிக்கவல்ல தெனப் படும் திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளே உடையது. எனினும், சிறப்பாக அறத்துப்பாலும், பொதுவாக ஏனைய பால்களும் வீடுணர்த்தும் உண்மை காணலாம். 'இவை மூன்றும் விட்டதே பேரின்ப வீடு' என்ற வாக்கைப் பின்பற்றுபவர்கள், திருக்குறள், வீடுபற்றிய உண்மைகளை, உணர்த்தாமல் உணர்த்தியிருக்கின்ற தென்பர். உறுதிப் பொருள்களைப் பற்றிய கருத்து யாதாயினும், தமிழ்நாட்டினரே யன்றி ஏனைய நாட்டினரும் தத்தம் மொழியிற் பெயர்த்துப் பாராட்டியிருத்தல் கொண்டு, இதனை உலகப் பொதுமறை என்று கூறி அமையலாம். எந் நாட்டினர்க்கும், எக் காலத்திற்கும் ஏற்புடைய, திட்பமான பொருள்களைத் தன்னகத்தே யுடையது திருக்குறள். 'எல்லாப் பொருளும் இதன் பால் உள; இதன்பால் இல்லாத எப் பொருளும்இல்லை' என்பது இதன் தனிச்சிறப்பு.

அதிகாரம் ஒன்றுக்குப் பத்துக் குறட்பாக்களாக, 133 அதிகாரங்களாக வகுக்கப்பெற்ற 1330 குறட்பாக்கள், திருக்குறளில் உள்ளன. 133 அதிகாரங்களுள், அறத்துப்பாலில் உள்ளவை, பாயிரம் உட்பட 38 அதிகாரங்கள்; பொருட்பாலில் உள்ளவை 70 அதிகாரங்கள்; காமத்துப்பாலில் உள்ளவை 25 அதிகாரங்கள். அறத்துப்பாலிலிருந்து 12 அதிகாரங்களும், பொருட்

பாலிலிருந்து 3 அதிகாரங்களும் இங்கே பாடமாகத் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குறள்வெண்பாவும் இரண்டடி உடையதெனப் பொதுவாகக் கூறப்படுவதெனினும், உண்மையில் ஒன்றே முக்கால் அடியே உடையது. ஏழு சீர்கள் கொண்ட ஒன்றே முக்கால் அடிச் சிறுமையுடைய ஒவ்வொரு குறள் வெண்பாவும் "அணுவைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" எனப்படும் பெரும் பொருளைத் தன்னகத்தே கொண்டது.

இத்தகைய சிறப்பெலாம் வாய்ந்த திருக்குறள் என்னும் நூலை இயற்றிய பெருமை உடையவர், திருவள்ளுவர் என்னும் பெயரினர். திரு என்னும் சிறப்படையொடு வழங்கும் வள்ளுவர் என்னும் பெயர், ஆசிரியர்க்குக் குலம் பற்றி வந்ததென்பர் ஒரு சாரார்; தொழில் பற்றி வந்ததென்பர் மற்றொரு சாரார்; பிறர் பிறவாறும் உரைப்பர். ஆதி என்பவர் இவர்க்குத் தாயார் எனவும், பகவன் என்பவர் இவர்க்குத் தந்தையார் எனவும், வாசுகி என்பவர் இவர்க்கு மனைவியார் எனவும் கூறுவர். இவர் பிறந்த பெருமையையுடைய இடம் மதுரை என்று சிலரும், சென்னை மயிலாப்பூர் என்று பலரும் இயம்புவர். மயிலையில், இவர்க்கெனத் தனியே ஒரு கோயிலும் உண்டு. இவர் இருந்த காலம், கடைச் சங்க காலத்திற்கு முற்பட்டதென்றும், கடைச் சங்க காலம் என்றும், அதற்குச் சிறிது பிந்திய காலம் என்றும் கூறுவர். வரலாற்று நெறி நிற்பார்க்கு, இவையெல்லாம் சுழலில் அகப்பட்ட மரக்கலம்போல் திகைப்பையே உண்டாக்குவன. எனினும், இவர் அறவாழ்வில் கடைப்பிடி உடையவர் என்பதும், அரசியலறிவிற் சிறந்தவர் என்பதும், உலகோர் யாவரும் கேளிரெனக்கொண்டு வாழும் வாழ்க்கையே சிறந்ததெனக் கொள்பவர் என்பதும், அதற்குரிய வழி வகுத்தவர் என்பதும் உண்மைச் செய்திகளாக ஏற்றற்கு உரியனவாகும்.

திருக்குறள்

1. கடவுள் வாழ்த்து

1. அகரம் முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

9. கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

2. வான்சிறப்பு

1. வானின் றுலகம் வழங்கி வருதலான்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

4. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது.

7. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

9. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

10. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

3. நீத்தார் பெருமை

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

3. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

4. உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

5. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

7. சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தன்
வகைதெரிவான் கட்டே உலகு.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

9. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

10. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

4. அறன்வலியுறுத்தல்

1. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு.

2. அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

5. அழுக்கா றவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.

6. அன்றறிவாம் என்னு தறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை.

7. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

9. அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

10. செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி.

5. இல்வாழ்க்கை

1. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை.

2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை.

4. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

8. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

9. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

6. வாழ்க்கைத் துணைநலம்

1. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

3. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.

4. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

5. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

6. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

7. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

8. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

10 மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு.

7. புதல்வரைப் பெறுதல்

1. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

3. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

4. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

5. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

6. குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

7. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

8. தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

9. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

10. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்.

8. அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

3. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

4. அன்பீனும் ஆர்வம் உடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்தும் சிறப்பு.

6. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

8 அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

9. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

10. அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

9. விருந்தோம்பல்

1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

5. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

7. இனைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

8 பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

10. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

10. இனியவை கூறல்

1 இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.

3. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம்.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

11. செய்ந்நன்றி அறிதல்

1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றல் அரிது.

2. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

5. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

12. ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

4. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

10. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

13. கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

2. எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

3. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

7. யாதானும் நாடாமால் ஊராமல் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து.

9. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

14. சுற்றம்தழால்

1. பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

2. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

3. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

4. சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

5 கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

6. பெருங்கொடையான் பேணன் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

7. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

9. தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்.

15. மருந்து

1. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின்.

3. அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

4. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

5. மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு.

6. இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

7. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

8. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

9. உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

10. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து.

2. மணிமேகலை

மணிமேகலை என்பது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவனாகிய கோவலனுடைய மகள் மணிமேகலையின் வரலாறு கூறுவதாதலின், இது சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்புடையது. இக்காப்பியத்திற்கு **மணிமேகலை துறவு** என்ற பெயரும் உண்டு. இது, காப்பியச் சுவைகள் நிரம்பப் பொருந்தி, எளிய இனிய மொழிவளம் பெற்றுக் கற்போர் உள்ளத்தைப் பிறிதிடம் செல்லாதவாறு பிணிக்கும் சிறப்புடையது; 'கதை பொதி பாட்டு' எனப்படும் காதை முப்பது உடையது. அவற்றுள், **மலர்வனம் புக்க காதை** என்பது மூன்றாவதாகும். மாதவியின் ஏவல் கேட்டுப் பூப் பறித்து வருவதற்காகச் சுதமதியோடு மணிமேகலை உவவனம் என்னும் மலர் வனத்திற்குள் புகுந்த செய்தி இக்காதையில் விரித்துக் கூறப்படும்.

மணிமேகலைக் காப்பியம் இயற்றிய ஆசிரியர் **சீத்தலைச் சாத்தனார்** என்பவர் ஆவர். இவரைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் என்பர். **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்** என்று இவரைப் புலவர் போற்றுவர். வணிக மரபில் தோன்றிச் சாத்தனார் என்ற இயற்பெயர் பெற்றுக் கற்பவை கசடறக் கற்றுத் தெளிவுற்று, மதுரையில் கூலவாணிகம் செய்து பொருளீட்டித் தம் வாழ்க்கையை நடாத்தி வருங்கால், சங்கத்தில் அரங்கேற்றுவித்தற் பொருட்டு வரும் நூல்களில் பிழைகள் காணப்படுந்தோறும், அவற்றை இயற்றிய ஆசிரியர்களைக் குற்றம் கூறுதற்குத் துணிவு மேற்கொள்ளாராய், 'இப் பிழைகளைக் காணும் தீயூழ் ஏற்பட்டதே' என்று மனம் வருந்தித் தம் தலையில் குத்திக்கொள்வாரென்றும், அதனால், தலை, புண்பட்டுச் சீயோடிருந்தது என்றும், மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என இப் புலவர் பெயர் அமைந்ததற்குக் காரணம் கூறுவர். ஆசிரியர் இளம் பூரணர் முதலியோர், சினைமுதற்பெயருக்கு உதாரணமாகச் **சீத்தலைச் சாத்தன்** என்னும் இவர் பெயரைக் காட்டியிருத்தலை, அவர் தம் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டுவர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருக்கும் சீத்தலை என்ற ஊரிலுள்ள ஐயனார் பெயராகிய சீத்தலைச் சாத்தனார் என்பது இவரது இயற்பெயரென்று ஒரு சாரார் கூறுவர். **தண்டமிழ்ச் சாத்தன்** என்றும், **தண்டமிழ் ஆசான் சாத்தன்** என்

றும், **நன்னூற் புலவன்** என்றும் சிலப்பதிகாரத்தில் இவர் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர். இவர், கண்ணகியைப் பற்றிய வரலாற்றை இளங்கோ வடிகட்குக் கூற, அவர் சிலப்பதிகாரம் இயற்றினர் என்பது அந் நூலால் தெரிகின்றது.

இவர், இளங்கோவடிகள்-சேரன் செங்குட்டுவன் காலத்தவர் என்பது உறுதி. செங்குட்டுவன், இலங்கை மன்னன் கயவாகு என்பவன் காலத்தில் இருந்தவன் என இலங்கை வரலாற்று நூலான மகாவமிசம் கூறுவதுகொண்டு, அவன் கி. பி. இரண்டாம் நூற்ருண்டினன் என முடிவு செய்வர். அப்படியானல், சீத்தலைச் சாத்தனுர் காலமும் கி. பி. இரண்டாம் நூற்ருண்டு எனலாகும்; சிலர் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டு என்பர்.

மணிமேகலை

மலர்வனம் புக்க காதை

வயந்த மாலைக்கு மாதவி உரைத்த
உயங்குநோய் வருத்தத் துரைமுன் தோன்றி,
மாமலர் நாற்றம் போல்மணி மேகலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துள தாதலின்,
தந்தையும் தாயும் தாம்நனி உழந்த
வெந்துயர் இடும்பை செவியகம் வெதுப்பக்
காதல் நெஞ்சம் கலங்கிக் காரிகை,
மாதர் செங்கண் வரிவனப் பழித்துப்
புலம்புநீர் உருட்டிப் பொதியவிழ் நறுமலர்
இலங்கிதழ் மாலையை இட்டுநீ ராட்ட,
மாதவி மணிமே கலைமுகம் நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையின் கண்ணீர் மாற்றித்
தூநீர் மாலை தூத்தகை இழந்தது
நிகர்மலர் நீயே கொணர்வாய் என்றலும்,
மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்கும்
சுதமதி கேட்டுத் துயரொடும் கூறும் :
குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டுத்
தணியாத் துன்பம் தலைத்தலை எய்தும்
மணிமே கலைதன் மதிமுகந் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய்மலர் ஓட்டிய
கடைமணி உகுநீர் கண்டன னாயின்
படையிட்டு நடுங்கும் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்
ஆங்கனம் அன்றியும் அணியிழை கேளாய்
ஈங்கிந் நகரத் தியான்வரும் காரணம்
பாரா வாரம் பல்வளம் பழுநிய
காராளர் சண்பையில் கௌசிகன் என்போன்
இருபிறப் பாளன் ஒருமகள் உள்ளேன்
ஒருதனி அஞ்சேன் ஓரா நெஞ்சமோடு
ஆரா மத்திடை அலர்கொய் வேன்றனை

மாருத வேகனென் பானோர் விஞ்சையன்
திருவிழை மூதூர் தேவர்கோற் கெடுத்த
பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன்
தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்
எடுத்தனன் எற்கொண் டெழுந்தனன் விசும்பில்
படுத்தனன் ஆங்கவன் பான்மையேன் ஆயினேன்
ஆங்கவன் ஈங்கெனை அகன்றுகண் மாறி
நீங்கினன் தன்பதி நெட்டிடை ஆயினும்
மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
தனித்தலர் கொய்யும் தகைமையள் அல்லள்
பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையின் எயிற்புறம் போகின்
உலக மன்னவன் உழையோர் ஆங்குளர்
விண்ணவர் கோமான் விழாக்கொள் நன்னாள்
மண்ணவர் விழையார் வானவ ரல்லது
பாடுவண் டிமிரா பன்மரம் யாவையும்
வாடா மாமலர் மாலைகள் தூக்கலின்
கைபெய் பாசத்துப் பூதம் காக்குமென்று
உய்யா னத்திடை உணர்ந்தோர் செல்லார்
வெங்கதிர் வெம்மையின் விரிசிறை இழந்த
சம்பாதி இருந்த சம்பாதி வனமும்
தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை
கவேர னாங் கிருந்த கவேர வனமும்
மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய
யாப்புடைத் தாக அறிந்தோர் எய்தார்
அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும்
ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பின்
பகவன தாணையின் பன்மரம் பூக்கும்
உவவனம் என்பதொன் றுண்டதன் உள்ளது
விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டதன் உள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண் டாங்கிடின்
அரும்பவிழ் செய்யும் அலர்ந்தன வாடா
சுரும்பினம் மூசா தொல்யாண்டு கழியினும்
மறந்தேன் அதன்திறம் மாதவி கேளாய்

கடம்பூண் டோர்தெய்வம் கருத்திடை வைத்தோர்
ஆங்கவர் அடிக்கிடின் அவரடி தான்உறும்
நீங்கா தியாங்கணும் நினைப்பில ராயிடின்
ஈங்கிதன் காரணம் என்னை என்றியேல்
சிந்தை இன்றியும் செய்வினை உறுமெனும்
வெந்திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்
செய்வினை சிந்தை இன்றெனின் யாவதும்
எய்தா தென்போர்க் கேது வாகவும்
பயம்கெழு மாமலர் இட்டுக் காட்ட
மயன்பண் டிழைத்த மரபின ததுதான்
அவ்வனம் அல்லது அணியிழை நின்மகள்
செவ்வனம் செல்லும் செம்மை தானிலள்
மணிமே கலையொடு மாமலர் கொய்ய
அணியிழை நல்லாய் யானும் போவலென்று
அணிப்பூங் கொம்பர் அவளொடும் கூடி
மணித்தேர் வீதியில் சுதமதி செல்வுழிஇச்
சிமிலிக் கரண்டையன் நுழைகோல் பிரம்பினன்
தவலருஞ் சிறப்பின் அராந்தா ணத்துளோன்
நாணமும் உடையும் நன்கனம் நீத்துக்
காணா உயிர்க்கும் கையற் றேங்கி
உண்ணா நோன்பொடு உயவ லியானையின்
மண்ணா மேனியன் வருவோன் தன்னை
வந்தீர் அடிகள்நும் மலரடி தொழுதேன்
எந்தம் அடிகள் எம்உரை கேண்மோ
அழுக்குடை யாக்கையில் புகுந்த நும்உயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தாது
இம்மையும் மறுமையும் இறுதியில் இன்பமும்
தன்வயின் தரூஉம்என் தலைமகன் உரைத்தது
கொலையும் உண்டோ கொழுமடல் தெங்கின்
விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
உண்டு தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டால் எம்மையும் கையுதிர்க் கொண்மென
உண்ணா நோன்பி தன்னொடும் சூளுற்று
உண்மென இரக்குமோர் களிமகன் பின்னரும்
கணவிர மாலையின் கட்டிய திரள்புயன்
குவிமுகிழ் எருக்கின் கோத்த மாலையன்
சிதவல் துணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத்

ததர்வீழ்பு ஒடித்துக் கட்டிய உடையினன்
வெண்பலி சாந்தம் மெய்ம்முழுது உரீஇப்
பண்பில் கிளவி பலரொடும் உரைத்தாங்கு
அழூஉம் விழூஉம் அரற்றும் கூஉம்
தொழூஉம் எழூஉம் சுழலலும் சுழலும்
ஓடலும் ஓடும் ஒருசிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடு மறலும்
மையல் உற்ற மகன்பின் வருந்திக்
கையறு துன்பம் கண்டுநிற் குநரும்
சுரியல் தாடி மருள்படு பூங்குழல்
பவளச் செய்வாய்த் தவள வாள்நகை
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்
காந்தளஞ் செங்கை ஏந்திள வனமுலை
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணிலம் அளந்தோன் மகன்முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்
வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்
விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியில்
பொன்நாண் கோத்த நன்மணிக் கோவை
ஐயவி அப்பிய நெய்அணி முச்சி
மயிர்ப்புறம் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறு மழலை
சிந்துபு சின்னீர் ஐம்படை நனைப்ப
அற்றம் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
தொடுத்தமணிக் கோவை உடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூண் புதல்வரைப்
பொலம்தேர் மீமிசைப் புகர்முக வேழத்து
இலங்குதொடி நல்லார் சிலர் நின்று ஏற்றி
ஆலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்

காண்மி னோவெனக் கண்டுநிற் குநரும்
விராடன் பேரூர் விசயனும் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமே கலைதனை வந்துபுறம் சுற்றி
அணிஅமை தோற்றத்து அருந்தவப் படுத்திய
தாயோ கொடியள் தகவிலள் ஈங்கிவள்
மாமலர் கொய்ய மலர்வனம் தான்புகின்
நல்லிள வன்னம் நாணுது ஆங்குள
வல்லுந கொல்லோ மடந்தை தன்நடை
மாமயில் ஆங்குள வந்துமுன் நிற்பன
சாயல்கற் பனகொலோ தையல் தன்னுடன்
பைங்கிளி தாமுள பாவைதன் கிளவிக்கு
எஞ்சல கொல்லோ இசையுந அல்ல
என்றிவை சொல்லி யாவரும் இனைந்துகச்
செந்தளிர்ச் சேவடி நிலம்வடு வுறுமல்
குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கால் அசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம் தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர்கொய்யப் புகுந்தனள் மணிமே கலைஎன்.

3. கம்பராமாயணம்

கம்பராமாயணம் என்பது கம்பரால் இயற்றப்பெற்ற ஒரு பெருங்காப்பியம்; வால்மீகி ராமாயண கதையை அடிப் படையாகக் கொண்டு, ஆழ்வார்கள் பாசுரங்களிலும், சங்க நூல்களிலும், பிறவற்றிலும் காணப்படும் இராமன் பற்றிய செய்திகளெல்லாம் விரித்துரைப்பது; உலக மகாகாவியங் களுள் ஒன்றெனப் பாராட்டப்படும் சிறப்புடையது; சொற் சுவை, பொருட்சுவை இரண்டும் செறிந்து, கற்போர்க்குத் தெவிட்டாத இன்பம் தரும் எழிலுடையது; தமிழ் மொழி யில் முதல் நூலாகவே பிறந்த தென்னும் அளவிற்கு ஒன்று போல் எல்லாப் பாடல்களும் விழுமிய தெள்ளிய நடை திகழப் பெற்றிருப்பது.

கம்பராமாயணத்தில் உள்ள ஏழு காண்டங்களுள், முதலாறு காண்டங்கள் கம்பரால் பாடப்பெற்றவை. இறுதிக் காண்ட மாகிய உத்தர காண்டம் ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்ற தென்பர். பாடமாக இங்கே தரப்பட்டுள்ள கைகேயி சூழ் வினைப்படலம், இரண்டாம் காண்டமாகிய அயோத்தியா காண்டத்தில் உள்ளது. கம்பராமாயணத்தின் உயிர் நாடியாகத் திகழ்வது அயோத்தியா காண்டமே. அயோத்தியா காண்டத் தின் உயிர் நாடியாகத் திகழ்வது கைகேயி சூழ்வினைப் படலமே. கைகேயியின் சூழ்வினையால் இராமன் காடேகி யிராவிட்டால், இராவணவதை நேரிட்டிராது. அஃதின்றேல், இராமாயணமும் தோன்றி யிராது. எனவே, அயோத்தியா காண்டம் இராமா யணத்தின் உயிர் நாடி யென்பதும், அதன் உயிர் நாடி கைகேயி சூழ் வினைப் படலம் என்பதும் அனைவராலும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

கம்பராமாயணத்தைப் பாடிய கம்பருடைய வரலாறு இருள் சூழ்ந்ததாகவே இன்றும் உள்ளது. அவர் பெற்ற கம்பர் என்னும் பெயர், இயற்பெய ரென்றும், ஏகாம்பர நாதராகிய ஏகம்பருடைய முதற் குறை என்றும், கம்பங் கொல்லையைக் காத்துவந்ததால் ஏற்பட்ட பெயரென்றும், அரசன்முன் கம் போடு தோன்றியதால் பெற்ற பெயரென்றும் பலரும் பலவாறு உரைப்பர். ஆனல், அவருடைய பாடல்களை ஆராய்ந்தால், அவர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர் என்பதும், பெரும் புலமையும் உலகிய லனுபவமும் உடையவர் என்பதும் தெளிய உணரலாம்.

கம்பர் காலம் கி. பீ. 12-ஆம் நூற்ருண்டின் பிற் பகுதி என் பர் சிலர். 9-ஆம் நூற்ருண்டு என்பர் வேறு சிலர். கம்பர் பாடி யனவாக வழங்கும் பாடல்கள் 10500.

கம்பராமாயணம்

கைகேசி சூழ்வினைப் படலம்

தசரதன் கைகேயியை அடைந்து, நிகழ்ந்தது கூறுமாறு கேட்டல்

1. நாழிகை கங்குலின் நள்அடைந்த பின்றை
யாழிசை அஞ்சிய அஞ்சொலேழை கோயில்
வாழிய என்றயில் மன்னர்துன்ன வந்தான்
ஆழி நெடுங்கை மடங்கலாளி அன்னான்.

2. வாயலில் மன்னர் வணங்கிநிற்ப வந்தாங்
கேயின செய்யும் மடந்தைமாரோ டேகிப்
பாயல் துறந்த படைத்த டங்கண் மென்றோள்
ஆயிழை தன்னை அடைந்த ஆழி மன்னன்.

3. அடைந்தவண் நோக்கி அரந்தைஎன்கொல் வந்து
தொடர்ந்த தெனத்துயர் கொண்டுசோரும் நெஞ்சன்
மடந்தையை மானை எடுக்குமானை யேபோல்
தடங்கைகள் கொண்டு தழீஇஎடுக்க லுற்றான்.

4. நின்று தொடர்ந்த நெடுங்கைதம்மை நீக்கி
மின்துவள் கின்றது போலமண்ணில் வீழ்ந்தாள்
ஒன்றும் இயம்பலள் நீடுயிர்க்க லுற்றாள்
மன்ற லருந்தொடை மன்னனாவி அன்னாள்.

5. அன்னது கண்ட அலங்கல்மன்னன் அஞ்சி
என்னை நிகழ்ந்ததிஞ் ஞாலமேழில் வாழ்வார்
உன்னை இகழ்ந்தவர் மாள்வருற்ற தெல்லாம்
சொன்னபின் என்செயல் காண்டிசொல்லி டென்றான்.

கைகேயி வரம் கேட்டல்

6. வண்டுளர் தாரவன் வாய்மைகேட்ட மங்கை
கொண்டல் நெடுங்கணின் ஆலிகொங்கை கோப்ப
உண்டுகொ லாமருள் உன்கணென்கண் ஒக்கின்
பண்டைய இன்று பரிந்தளித்தி என்றாள்.

7. கள்ளவிழ் கோதை கருத்துணர்ந்த மன்னன்
வெள்ளம் நெடுஞ்சுடர் மின்னின்மின்ன நக்கான்
உள்ளம் உவந்துள செய்வெனொன்றும் லோவேன்
வள்ளல் இராமனுன் மைந்தனாணை என்றான்.

8. ஆன்றவன் அவ்வுரை கூறஐயம் இல்லாள்
தோன்றிய பேரவ லந்துடைப்ப துண்டேல்
சான்றிமை யோர்குல மாகயன்ன நீஅன்
றேன்ற வரங்கள் இரண்டுமீதி என்றாள்.

9. வரங்கொள இத்துணை மன்னுமல்லல் எய்தி
இரங்கிட வேண்டுவ தில்லைஈவன் என்பால்
பரங்கெட இப்பொழு தேபகர்ந்தி டென்றான்
உரங்கொள் மனத்தவள் வஞ்சமோர்கி லாதான்.

10. ஏய வரங்க ளிரண்டிலொன்றி னாலென்
சேயர சாள்வது சீதைகொண்கன் ஒன்றால்
போய்வனம் ஆள்வ தெனப்புகன்று நின்றாள்
தீயவை யாவையி னுஞ்சிறந்த தீயாள்.

தசரதன் உற்ற வருத்தம்

11. நாகம் எனும்கொடி யாடனுவின் ஈந்த
சோகவி டந்தொட ரத்துணுக்கம் எய்தா
ஆகம டங்கலும் வெந்தழிந்த ராவின்
வேகம டங்கிய வேழமென்ன வீழ்ந்தான்.

12. பூதல முற்றத னிற்புரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர்சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்துவெந்து கொல்லன்
ஊதுலை யிற்கனல் என்னவெய்து யிர்த்தான்.

13. உலர்ந்தது நாவுயிர் ஓடலுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் பொடித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்கதென்கொல் என்றென்
றலந்தலை யுற்ற அரும்புலன்கள் ஐந்தும்.

14. மேவி நிலத்தி லிருக்குநிற்கும் வீழும்
ஓவியம் என்ன உயிர்ப்படங்கி ஓயும்
பாவியை உற்றெதிர் பற்றிஎற்ற எண்ணும்
ஆவி பதைக்க அலக்கணெய்து கின்றான்.

15. பெண்ணென உற்ற பெரும்பழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொ டுயிர்த்துயிர்த்து லாவும்
கண்ணினீ ரேக்கும் மயர்க்குமிக்க கைவேல்
புண்ணுழை தைக்க உழக்குமானை போல்வான்.

கைகேயியின் கலங்கா நிலை

16. கம்ப நெடுங்களி யானையன்ன மன்னன்
வெம்பி விழுந்தழும் விம்மல் கண்டு வெய்துற்
றும்பர் நடுங்கினர் ஊழிபேர்வ தொத்த
தம்பன கண்ணவள் உள்ளமன்ன தேயால்.

17. அஞ்சிலள் ஐயன தல்லல்கண்டும் உள்ளம்
நஞ்சிலள் நாணிலள் என்னநாணம் ஆமால்
வஞ்சனை பண்டு மடந்தைவேடம் என்றே
தஞ்சென மாதரை உள்ளலார்கள் தக்கோர்.

மனமாற்றத்தின் காரணம் யாதென மன்னன் கைகேயியை வினவுதல்

18. இந்நிலை நின்றவள் தன்னைஎய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவன் நீதிசைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்தவஞ்சம் உண்டோ
அந்நிலை சொல்லென தாணையுண்மை என்றான்.

கைகேயியின் கடுமொழி

19. திசைத்ததும் இல்லை எனக்குவந்து தீயோர்
இசைத்ததும் இல்லைமுன் ஈந்தஇவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரின் இன்றுகொள்வென் அன்றேல்
வசைத்திறன் நின்வயின் வைத்துமாள்வென் என்றாள்.

தசரதன் மூர்ச்சை

20. இந்த நெடுஞ்சொலவ் வேழைகூறு முன்னே
வெந்த கொடும்புணில் வேல்நுழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்தயர்ந்து வீழ்ந்தான்
மைந்தன் அலாதுயிர் வேறிலாத மன்னன்.

தசரதன் தடுமாற்றம்

21. ஆகொடி யாய்எனும் ஆவிகாலும் அந்தோ
ஓகொடி தேஅறம் என்னுமுண்மை ஒன்றும்
சாகவெ னுவெழும் மெய்தளாடி வீழும்
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான்.

22. நாரியர் இல்லைஇஞ் ஞாலமேழும் என்னக்
கூரிய வாள்கொடு கொன்றுநீக்கி யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வனென்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கநின்ற வேலான்.

23. கையொடு கையைப் புடைக்கும்வாய் கடிக்கும்
மெய்யுரை குற்றம் எனப்புழுங்கி விம்மும்
நெய்எரி உற்றென நெஞ்சழிந்து சோரும்
வையகம் முற்றும் நடந்தவாய்மை மன்னன்.

தசரதன் கைகேயியின் காலில் விழுந்து இரந்து வேண்டுதல்

24. ஒறுப்பினும் அந்தரம் உண்மையொன்றும் ஓவா
மறுப்பினும் அந்தரம் என்று வாய்மை மன்னன்
பொறுப்பினும் இங்கிலை போகிலாளை வாளால்
இறுப்பினும் ஆவ திரப்பதென்றெ ழுந்தான்.

25. கோல்மேற் கொண்டும் குற்றம கற்றிக் குறிகொண்டார்
போல்மே லுற்ற துண்டெனின் நன்றும் பொறை என்னுக்
கால்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் களிமன்னர்
மேல்மேல் வந்து முந்திவ ணங்கி மிடைதாளான்.

26. கொள்ளான் நின்சேய் இவ்வர சன்னான் கொண்டாலும்
நள்ளா திந்த நானிலம் ஞாலங் தனிலென்றும்
உள்ளார் எல்லாம் ஒத உவக்கும் புகழ்கொள்ளாய்
எள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றான்.

27. வானோர் கொள்ளார் மண்ணவர் உய்யார் இனிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீஇவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள இசைந்தான் முறையாலே
தானே நல்கும் உன்மக னுக்கும் தரைஎன்றான்.

28. கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன்என்
உண்ணே ராவி வேண்டினும் இன்றே உளதன்றோ
பெண்ணே வண்மைக் கைகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மறஎன்றான்.

29. வாய்தந் தேனென் றேனினி யானோ அதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை இரந்தால் தழல்வெங்கண்
பேய்தந் தீயும் நீஇது செய்தால் பிழையாமோ.

கைகேயி தசரதனை இழித் துரைத்தல்

30. இன்னே இன்னே பன்னிஇ ரந்தான் இகல்வேந்தன்
தன்னேர் இல்லாத் தீயவ ளுள்ளம் தடுமாறாள்

முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய் முனிவாயேல்
என்னே மன்னு யாருளர் வாய்மைக் கினிஎன்றாள்.

தசரதன் மூர்ச்சித்துத் தெளிந்து பின்னும் வேண்டல்

31. அச்சொற் கேளா ஆவிபு ழுங்கா அயர்கின்றான்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன் பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு அன்றோ எனநாணு
முச்சற் றார்போல் பின்னும்இ ருந்தே மொழிகின்றான்.

32. நின்மகன் ஆள்வான் நீஇனி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வயம் ஆமே ஆளுதி தந்தேன் உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்உயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிற வாமை நயவென்றான்.

33. மெய்யே என்றன் வேர் அற நூறும் வினை நோக்கி
நையா நின்றேன் நாவுமு லர்ந்தேன் நளினம் போல்
கையான் இன்றென் கண்எதிர் நின்றும் கழிவானேல்
உய்யேன் நங்காய் உன்னப யம்என் உயிரென்றான்.

தந்த வரத்தைத் தவிர்கென்றல் அறமோ எனக் கைகேயி கூறுதல்

34. இரந்தான் சொல்லும் இன்னுரை கொள்ளாள் முனி
[வெஞ்சாள்
மரந்தான் என்னும் நெஞ்சினள் நாணாள் வசைபாராள்
சரந்தா வில்லாய் தந்தவ ரத்தைத் தவிர்கென்றல்
உரந்தான் அல்லால் நல்லறம் ஆமோ உரைஎன்றாள்.

தசரதன் மண்ணில் வீழ்தல்

35. கொடியாள் இன்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமல் வெம்பரல் மொய்கா னிடைமெய்யே
நெடியான் நீங்க நீங்குமென் ஆவி இனிஎன்னு
இடியே றுண்ட மால்வரை போல்மண் ணிடைவீழ்ந்தான்.

தசரதன் வருத்தம்

36. வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தான் ஆழா அக்கட லுக்கோர் கரைகாணான்
சூழ்ந்தாள் துன்பம் சொற்கொடி யாள்சொற்
[கொடுநெஞ்சம்
போழ்ந்தாள் உள்ளப் புன்மையை நோக்கிப் புலர்கின்றான்.

தசரதன் கைகேயியைப் பழித்துரைத்தல்

37. ஒன்று நின்ற ஆருயி ரோடும் உயர் கேள்வர்
பொன்று முன்னம் பொன்றினர் என்னும் புகழல்லால்
இன்றோர் காறும் எல்வளை யார்தம் இறையோனைக்
கொன்றார் இல்லை கொல்லுதி யோநீ கொடியாளே.

38 ஏவம் பாராய் இன்முறை நோக்காய் அறமெண்ணாய்
ஆவென் பாயோ அல்லைம னத்தால் அருள்கொன்றாய்
நாவம் பாலென் ஆருயிர் உண்டாய் இனி ஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் படுகின்றாய்.

39. ஏண்பால் ஓவா நாண்மடம் அச்சம் இவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பால் ஓரா நங்கையர் தம்பால் நணுகாரே
ஆண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா.

40. மண்ணாள் கின்றா ராகிவ லத்தால் மதியால்வைத்
தெண்ணா நின்றார் யாரையும் எல்லா இகலாலும்
விண்ணோர் காறும் வென்றஎ னக்கென் மனைவாழும்
பெண்ணால் வந்த தந்தரம் என்னப் பெறுவேனோ.

41. என்றென் றுன்னும் பன்னிஇ ரக்கும் இடர்தோயும்
ஒன்றொன் றொவ்வா இன்னல்உ ழக்கும் உயிருண்டோ
இன்றின் றென்னும் வண்ணம யங்கும் இடியும்பொற்
குன்றொன் றொன்றோ டொன்றிய தென்னக்
[குவிதோளான்.

'நீ உரை தப்பினால் நான் உயிர் மாய்வேன்' எனக் கைகேயி கூறுதல்

42. ஆழிப் பொற்றேர் மன்னவன் இவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றோள் முற்றும டங்கப் புரள்போழ்தில்
ஊழிற் பொய்த்தா லென்னுரை இன்றே உயிர்மாய்வேன்
பாழிப் பொற்றார் மன்னவ என்றாள் பசைஅற்றாள்.

வரம் தந்துவிட்டு வருந்துதல் தகாதெனக் கைகேயி கூறல்

43. அரிந்தான் முன்னோர் மன்னவன் அன்றே அருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மைவ ளர்ப்பான் வரம்நல்கிப்
பரிந்தா லென்னும் என்றனள் பாயும் கனலேபோல்
எரிந்தா றாதே இன்னுயிர் உண்ணும் எரியன்னாள்.

தசரதன் வரம் தரல்

44. வீந்தா ளேஇவ் வெய்யவள் என்னு மிடல்வேந்தன்
ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனம்ஆள
மாய்ந்தே நான்போய் வானுல காள்வென்
[வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னேடுநெ டிதென்றான்.

தசரதன் மூர்ச்சையும் கைகேயியின் துயிலும்

45. கூறு முன்னம் கூறுப டுக்கும் கொலைவாளின்
ஏறும் என்னும் வன்துய ராகத் திடைமூழ்கத்
தேறு னுகிச் செய்கைம றந்தான் செயல் முற்றி
ஊறு நின்ற சிந்தையி னாளும் துயில்வுற்றாள்.

இரவு கழிதலின் புனைந்துரை

46. சேணு லாவிய நாளெ லாமுயிர் ஒன்று போல்வன
[செய்துபின்
ஏணு லாவிய தோளி னானிட ரெய்த வொன்றும்
[இரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்முன்
[நிற்கவும்
நாணி னாளென ஏகி னாள்நளிர் கங்குல் ஆகிய நங்கையே.

கோழி கூவுதலின் புனைந்துரை

47. எண்ட ருங்கடை சென்ற யாமமி யம்புகின்றன
[ஏழையால்
வண்டு தங்கிய தொங்கல் மார்பன்ம யங்கிவிம்மிய
[வாறெலாம்
கண்டு நெஞ்சுக லங்கி யஞ்சிறை யான காமர்து ணைக்கரம்
கொண்டு தம்வயி றெற்றி ஏற்றிவி ளிப்ப போன்றன
[கோழியே.

புட்கள் ஒலியின் புனைந்துரை

48. தோய்க யத்தும ரத்து மென்சிறை துள்ளி மீதெழு
[புள்ளெலாம்
தேய்கை ஒத்தம ருங்குல் மாதர்சி லம்பின் நின்றுசி லம்புவ
கேக யத்தர சன்ப யந்தவி டத்தை இன்னதொர்
[கேடுசூழ்
மாக யத்தியை உட்கொ தித்தும னத்து வைவன
[போன்றவே.

யானை துயிலெழலின் புனைந்துரை

49. சேம மென்பன பற்றி அன்புதி ருந்த இன்துயில்
[செய்தபின்
வாம மேகலை மங்கை யோடுவ னத்துள் யாருமி றக்கிலா
நாம நம்பிர டக்கு மென்றுந டுங்கு கின்றம னத்தவாய்
யாமும் இம்மணி றத்தும் என்பன போலெ ழுந்தன
[யானையே.

மீன் ஒளித்தலின் புனைந்துரை

50. சிரித்த பங்கயம் ஒத்த செங்கணி ராம னைத்திரு மாலையக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துயர் காப்பு நாணணி
[தற்குமுன்
வரித்த தண்கதிர் முத்த தாகியிம் மண்ண னைத்துநி
[ழற்றமேல்
விரித்த பந்தர்பி ரித்த தாமென மீனொ ளித்தது வானமே.

மண முரசு ஒலிக்க மாதர் எழுதலின் புனைந்துரை

51. நாம விற்கைஇ ராம னைத்தொழு நாள டைந்தந
[மக்கெலாம்
காம விற்குடை கங்குல் மாலைக ழிந்த தென்பது கற்பியாத்
தாமொ லித்தன பேரி அவ்வொலி சாரல் மாரித ழுங்கலா
மாம யிற்குலம் என்ன முன்னம லர்ந்தெ ழுந்தனர் மாதரே.

கன்னியர் கனவிடை மயங்கல்

52. இனம லர்க்குலம் வாய்வி ரித்திள வாச மாருதம் வீசமுன்
புனைது கில்கலை சோர நெஞ்சபு ழுங்கி னூர்சில பூவைமார்
மனம னுக்கம்வி டத்த னித்தனி வள்ள லைப்புணர்
[கள்ளவன்
கனவி னுக்கிடை யூற டுக்கம யங்கி னூர்சில கன்னிமார்.

குமுதம் குவிதலின் புனைந்துரை

53. சாய டங்கந லங்க லந்துத யங்கு தன்குல நன்மையும்
போய டங்கநெ டுங்கொ டும்பழி கொண்ட ரும்புகழ்
[சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல் கண்டு சீரிய நங்கைமார்
வாய டங்கின என்ன வந்துகு விந்த வண்குமு தங்களே.

பண் கனிந்தெழு பாடல்

54. மொய்ய ராகசி ரம்ப ஆசைமு ருங்கு தியின்மு ழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும் வானி லாநெடு வாடையும்
மெய்ய ராவிட ஆவி சோரவெ தும்பு மாதர்தம்
[மென்செவிப்
பைய ராநுழை கின்ற போன்றன பண்க னிந்தெழு
[பாடலே.

மைந்தர் துயிலெழல்

55. ஆழி யான்முடி சூடு நாளிடை ஆன பாவியி தோரிரா
ஊழி ஆயின வாறெ னுவுயர் போதின் மேலுறை
[பேதையும்
ஏழு லோகமும் எண்த வம்செய்த கண்ணும் எங்கள்ம
[னங்களும்
வாழு நாளிதெ னுவெ ழுந்தனர் மஞ்சு தோய்புய மஞ்சரே.

மாதர் துயிலெழல்

56. ஐயு றுஞ்சுடர் மேனி யானெழில் காண மூளும வாவினுல்
கொய்யு றுங்குல மாம லர்க்குவை நின்றெ ழுந்தனர்
[கூர்மைகூர்
செய்யு றுஞ்சுடர் வேனெ டுங்கண்மு கிழ்த்து நெஞ்சினி
[னைப்பொடும்
பொய்யு றங்கும டந்தை மார்குழல் வண்டு பொம்மென
[விம்மவே.

ஊடல் நிலை

57. ஆட கந்தரு பூண்மு யங்கிட வஞ்சி அஞ்சிஅ னந்தரால்
ஏட கம்பொதி தார்பொ ருந்திட யாம பேரிஇ
[சைத்தலால்
சேட கம்புனை கோதை மங்கையர் சிந்தை யிற்செறி
[திண்மையால்
ஊடல் கண்டவர் கூடல் கண்டிலர் நையு மைந்தர்கள்
[உய்யவே.

பல ஒலிகள்

58. தழையொ லித்தன வண்டொ லித்தன தாரொ லித்தன
[பேரியாம்
முழவொ லித்தன தேரொ லித்தன முத்தொ லித்தன
[மல்குபே

ரிழையொ லித்தன புள்ளொ லித்தன யாழொ லித்தன
[எங்கணும்
மழையொ லித்தன போல்க லித்தம னத்தின் முந்துறு
[வாசியே.

தீப ஒளி மழுங்கலின் புனைந்துரை

59. வைய மேழுமொ ரேழும் ஆருயி ரோடு கூடவ மூங்குமம்
மெய்யன் வீரருள் வீரன் மாமகன் மேல்வி ளைந்ததொர்
[காதலால்
நைய நையஙு லேம்பு லன்கள விந்த டங்கிந டுங்குவான்
தெய்வ மேனிப டைத்த சேயொளி போல்ம ழுங்கின
[தீபமே.

பாடற் கருவிகளின் ஒலி

60. வங்கி யம்பல தேன்வி ளம்பின வாணி முந்தின பாணியின்
பங்கி அம்பர மெங்கும் விம்மின பம்பை பம்பின
[பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நாபு ரங்கள்பு லம்பவெண்
சங்கி யம்பின கொம்ப லம்பின சாம கீதநி ரம்பவே.

ஞாயிறு தோன்றுதலின் புனைந்துரை

61. தூபம் முற்றிய காரி ருட்பகை துள்ளி ஓடிட உள்ளமூம்
தீபம் முற்றவும் நீர்த்த கன்றெனச் சேய தாருயிர்
[தேய்தலால்
பாபம் முற்றிய பேதை செய்தப கைத்தி றத்தினில்
[வெய்யவன்
கோபம் முற்றிமி கச்சி வந்தனன் ஒத்த னன்குண
[குன்றிலே.

தாமரை மலர்தலின் புனைந்துரை

62. மூவ ராய்முத லாகி மூலம தாகி ஞாலமும் ஆகிஅத்
தேவ தேவர்பி டித்த போர்விலொ டித்த சேவகர்
[சேணிலம்
காவல் மாமுடி சூடு பேரெழில் காண லாமெனும்
[ஆசைகூர்
பாவை மார்முகம் என்ன முன்னம லர்ந்த பங்கய ராசியே.

கவியின் கூற்று

63. இன்ன வேலையின் ஏழு வேலையும் ஒத்த போலவி
[ரைத்தெழுந்
தன்ன மாநகர் மைந்தன் மாமுடி சூடும் வைகலி
[தாமெனத்
துன்னு காதல்து ரப்ப வந்தவை சொல்ல லாம்வகை
[எம்மனோர்க்
குன்ன லாவன அல்ல என்னினும் உற்ற பெற்றிஉ
[ணர்த்துவாம்.

மகளிர் தம்மை அலங்கரித்தல்

64. குஞ்சரம் அனையார் சிந்தைகொள் இளையார்
பஞ்சினை அணிவார் பால்வளை தெரிவார்
அஞ்சனம் எனவாள் அம்புகள் இடையே
நஞ்சினை இடுவார் நாள்மலர் புனைவார்.

நகரத்தவர் மகிழ்ச்சி

65. பொங்கிய உவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையில் முகத்தார் நம்பி தம்பியர் அனையர் ஆனார்
செங்கயல் நறவம் மாந்திக் களிப்பெனச் சிவக்கும்
[கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோள் குமரர் எல்லாம்.

66. மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வதிட்டன் ஒத்தார் வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார் அன்னாள் திருவினை ஒத்தாள் அவ்வூர்ச்
சாதுகை மாந்தர் எல்லாம் தயரதன் தன்னை ஒத்தார்.

முடிசூட்டு விழாக் காண அரசவெள்ளம் திரளுதல்

67. இமிழ்திரைப் பரவை ஞாலம் எங்கணும் வறுமை கூர
உமிழ்வதொத் துதவு காதல் உந்திட வந்த தன்றே
குமிழ்நகில் சீதை கொண்கன் கோமுடி புனைதல்
[காண்பான்
அமிழ்துணக் குழுவு கின்ற அமரரின் அரச வெள்ளம்.

மைந்தர் மகளிர் கூட்டத்தின் தேக்கம்

68. பாகியல் பவளச் செவ்வாய்ப் பணைநகில் பரவை அல்குல்
தோகையர் குழாமும் மைந்தர் சும்மையும் துவன்றி
[எங்கும்

ஏகுமின் ஏகும் என்றென் றிடையிடை நிற்றல் அல்லால்
போகில மீள வில்லா பொன்னகர் வீதி எல்லாம்.

எது பெரிது ?

69. வேந்தரே பெரிதென் பாரும் வீரரே பெரிதென் பாரும்
மாந்தரே பெரிதென் பாரும் மகளிரே பெரிதென் பாரும்
போந்ததே பெரிதென் பாரும் புகுவதே பெரிதென் பாரும்
தேர்ந்ததே தேரின் அல்லால் யாவரே தெரியக் கண்டார்.

மகளிர் குழாத்தின் புனைந்துரை

70. குவளையின் எழிலும் வேலின் கொடுமையும் குழைத்துக் [கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் [தீட்டித்
தவளவொண் மதியுள் வைத்த தன்மைசால் தடங்கண் [நல்லார்
துவளுநுண் ணிடையார் ஆடும் தோகையங் குழாத்தின் [தொக்கார்.

முடி சூட்டு விழாவிற்கு வாராதவர்

71. நலம்கிளர் பூமி என்னும் நங்கையை நறுந்து ழாயின்
அலங்கலான் புணரும் செல்வம் காணவந் தடைந்தி [லாதார்
இலங்கையின் நிருத ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலும் ஆசை நின்ற விடாமத விலங்க லேயால்

மன்னவர் மௌலி சூட்டும் மண்டபத்துள் புகுதல்

72. சந்திரர் கோடி என்னத் தரளவெண் கவிகை ஓங்க
அந்தரத் தன்னம் எல்லாம் ஆர்ந்தெனக் கவரி துன்ன
இந்திரற் குவமை சாலும் இருநிலக் கிழவர் எல்லாம்
வந்தனர் மௌலி சூட்டும் மண்டபம் அதனில் புக்கார்.

அந்தணர் வருகை

73. முற்பயந் தெடுத்த காதல் புதல்வனை முறையி னேடும்
இற்பயன் சிறப்பிப் பாரின் ஈண்டிய உவகை தூண்ட
அற்புதன் திருவைச் சேரும் அருமணம் காணப் புக்கார்
நற்பயன் தவத்தின் உய்க்கும் நான்மறைக் கிழவர் [எல்லாம்.

திரண்டவர் நிகழ்ச்சியின் புனைந்துரை

74. விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை உடுத்த கோல
மண்ணவர் திசைகள் தூர்த்தார் மங்கலம் இசைக்கும்
[சங்கம்
கண்ணகல் முரசின் ஓதை கண்டவர் செவிகள் தூர்த்த
எண்ணருங் கனக மாரி எழுதிரைக் கடலும் தூர்த்த.

75. விளக்கொளி மறைத்த மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பின் ஊரும் சுடரையும் மறைத்துச்
[சூழ்ந்த
அளக்கர்வாழ் முத்தம் மூரல் முறுவலார் அணியின் சோதி
வளைக்கலாம் என்றவ் வானோர் கண்ணையும் மறைத்த
[தன்றே.

வசிட்டன் வருகை

76. ஆயதோர் அமைதி யின்கண் ஐயனை மகுடம் சூட்டற்
கேயுமங் கலங்கள் ஆன யாவையும் இயையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்கள் நெருக்கம் நீங்க மாதவக் கிழவன் வந்தான்.

முடிசூட்டுச் சடங்கிற்கு வசிட்டன் சித்தம் செய்தல்

77. கங்கையே முதல வாகக் கன்னியா றுன தீர்த்த
மங்கலப் புனலும் நாலு வாரியின் நீரும் பூரித்
தங்கியின் வினையிற் கேற்ற யாவையும் அமைத்து வீரச்
சிங்கவா தனமும் வைத்துச் செய்வன பிறவும் செய்தான்.

வசிட்டன் ஏவச் சுமந்திரன் தசரதனை அழைத்துவரச் செல்லல்

78. கணிதநூல் உணர்ந்த மாந்தர் காலம்வந் தடுத்த தென்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவின் ஏகி
மணிமுடி வேந்தன் தன்னை வல்லையிற் கொணர்தி என்னப்
பணிதலை நின்ற காதல் சுமந்திரன் பரிவின் சென்றான்.

கைகேயியின் ஏவல் கேட்டுச் சுமந்திரன் இராமனை அடைந்து அழைத்தல்

79. விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன்
[தன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயி கோயில்
[நண்ணித்

தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவரும்
[சொல்லப்
பெண்டிரில் கூற்றம் அன்னாள் பிள்ளையைக் கொணர்க
[என்றாள்.

80. என்றனள் என்னக் கேட்டான் எழுந்தபே ருவகை பொங்கப்
பொன்றிணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்
தன்றிரு உள்ளத் துள்ளே தன்னையே நினையும் மற்றக்
குன்றிவர் தோளி னானைத் தொழுதுவாய் புதைத்துக்
[கூறும்.

81. கொற்றவர் முனிவர் மற்றும் குவலயத் துள்ளார் உன்னைப்
பெற்றவன் தன்னைப் போலப் பெரும்பரி வியற்றி நின்றார்
சிற்றவை தானும் ஆங்கே கொணர்கெனச் செப்பி னாளப்
பொற்றட மகுடம் சூடப் போதுதி விரைவின் என்றான்.

இராமன் தேரில் வருகை

82. ஐய னும் அச்சொல் கேளா ஆயிரம் மௌலி யானைக்
கைதொழு தரச வெள்ளம் கடலெனத் தொடர்ந்து
[சுற்றத்
தெய்வகீ தங்கள் பாடத் தேவரும் மகிழ்ந்து வாழ்த்தத்
தையலார் இரைத்து நோக்கத் தாரணி தேரில் சென்றான்.

தையலார் இரைத்து நிரைத்து மொய்த்தல்

83. திருமணி மகுடம் சூடச் சேவகன் செல்கின் றானென்
றொருவரின் ஒருவர் முந்திக் காதலொ டுவகை உந்த
இருகையும் இரைத்து மொய்த்தார் இன்னுயிர் யார்க்கும்
[ஒன்றாய்ப்
பொருவருந் தேரிற் செல்லப் புறத்திடைக் கண்டார்
[போல்வார்.

84. துண்எனும் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தூய
மண்எனும் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம்
[வள்ளல்
பண்எனும் சொல்லி னார்தம் தோளெனும் பணைத்த
[வேயும்
கண்எனும் கால வேலும் மிடைநெடுங் கானம் புக்கான்.

85. சுண்ணமும் மலரும் சாந்தும் கனகமும் தூவ வந்து
வண்ணமே கலையும் நாணும் வளைகளும் சிந்து வாரும்

புண்ணுற அனங்கன் வாளி புழைத்ததம் புணர்மென்
[கொங்கை
கண்ணுறப் பொழிந்த காம வெம்புனல் கழுவு வாரும்.

86. அங்கணன் அவனி காத்தற் காமிவன் என்ன லாமோ
நங்கணன் பிலனென் றுள்ளம் தள்ளுற நடுங்கி நைவார்
செங்கணும் கரிய கோல மேனியும் தேரும் ஆகி
எங்கணும் தோன்று கின்ருர் எனைவரோ இராமன் என்பார்.

கவியின் கூற்று

87. இனையராய் மகளிர் எல்லாம் இரைத்தனர் நிரைத்து
[மொய்த்தார்
முனைவரும் நகர மூதூர் முதியரும் இளைஞர் தாமும்
அனையவன் மேனி கண்டார் அன்பினுக் கெல்லை காணுர்
நினைவினர் மனத்தால் வாயால் நிகழ்ந்தது நிகழ்த்தல்
உற்ருரும்.

முனைவர் முதலியோர் கூறியவை

88. உய்ந்ததிவ் வுலகம் என்பார் ஊழிகாண் கிற்பாய் என்பார்
மைந்தநீ கோடி எங்கள் வாழ்க்கைநாள் யாவும் என்பார்
ஐந்தவித் தரிதின் செய்த தவமுனக் காக என்பார்
பைந்துழாய்த் தெரிய லாய்க்கே நல்வினை பயக்க என்பார்.

89. உயரருள் ஒண்கண் ஒக்கும் தாமரை நிறத்தை ஒக்கும்
புயல்பொழி மேகம் என்ன புண்ணியம் செய்த என்பார்
செயலருந் தவங்கள் செய்திச் செம்மலைத் தந்த செல்வத்
தயரதற் கென்ன கைம்மா றுடையம்யாம் தக்க தென்பார்.

90. வாரணம் அரற்ற வந்து கராவுயிர் மாற்றும் நேமி
நாரணன் ஒக்கும் இந்த நம்பிதன் கருணை என்பார்
ஆரணம் அறிதல் தேற்ரு ஐயனை அணுகி நோக்கிக்
காரணம் இன்றி யேயும் கண்கணீர் கலுழ நிற்பார்.

91. நீலமா முகில னுன்றன் நிறைவினே டறிவு நிற்க
சீலமார்க் குண்டு கெட்டேன் தேவரின் அடங்கு வானே
காலமாய்க் கணிக்கும் நுண்மைக் கணக்கையும் கடந்து
[நின்ற
மூலமாய் முடிவி லாத மூர்த்திஇம் முன்பன் என்பார்.

92. ஆர்கலி அகழ்ந்தோர் கங்கை அவனியில் கொணர்ந்தோர்
[முந்தை
போர்கெழு புலவர்க் காகி அசுரரைப் பொருது
[வென்ருேர்

பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்ப தையன்
தார்கெழு திரடோள் தந்த புகழினைத் தழுவி என்பார்.

93. சந்தமிவை தாவில்மணி ஆரமிவை யாவும்
சிந்துரமும் இங்கிவைசெ றிந்தமத வேழப்
பந்திகள்வ யப்பரிப சும்பொனின்வெ றுக்கை
மைந்தவறி யோர்கொளவ மூங்கெனநி ரைப்பார்.

94. மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில்
தன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்
கன்புருகு சிந்தையொடும் ஆஉருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி நஞ்சுருகி நிற்பார்.

95. சத்திரம்நி மூற்றநிமிர் தானையொடு நானு
அத்திரம்நி மூற்றஅரு ளோடவனி ஆள்வார்
புத்திரர் இ னிப்பெறுதல் புல்லிதென நல்லோர்
சித்திரம்ஏ னத்தனிதி கைத்துருகி நிற்பார்.

96. கார்மினெடு லாயதென நூல்களுலும் மார்பன்
தேர்மிசைநம் வாயில்கடி தேகுதல்செய் வானே
கூர்கனக ராசியொடு கோடிமணி யாலும்
தூர்மினெடு வீதியினை என்றுசொரி வாரும்.

97. தாய்கையில்வ ளர்ந்திலன்வ ளர்த்ததுத வத்தால்
கேகயன்ம டந்தைகிளர் ஞாலமிவன் ஆள
ஈகையில்உ வந்தனள்இ யற்கைஇது என்றால்
தோகைஅவள் பேருவகை சொல்லலரி தென்பார்.

98. பாவமும ருந்துயரும் வேர்பரியும் என்பார்
பூவலயம் இன்றுதனி அன்றுபொது என்பார்
தேவர்பகை உள்ளனஇவ் வள்ளல்தெறும் என்பார்
ஏவல்செயும் மன்னர்தவம் யாவதுகொல் என்பார்.

மன்னவன் கோயிலில் இராமன் புகுதல்

99. ஆண்டினைய ராயினைய கூறஅடல் வீரன்
தூண்டுபுர விப்பொருவில் சுந்தரம ணித்தேர்
நீண்டகொடி மாடநிரை வீதிநிறை யப்போய்
பூண்டபுகழ் மன்னனுறை கோயில்புக லோடும்.

மன்னவன் அங்கே காணுமை

100\. ஆங்குவந் தடைந்த அண்ணல் ஆசையின் கவரி வீசப்
பூங்குழல் மகளிர் உள்ளம் புதுக்களி ஆட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமல பீடத்
தோங்கிய மகுடம் சூடி உவகைவீற் றிருப்பக் காணுன்.

கைகேயியின் அரண்மனையில் இராமன் புகுதல்

101\. வேத்தவை முனிவ ரோடு விருப்பொடு களிக்கும்
[மெய்ம்மை
ஏத்தவை இசைக்கும் செம்பொன் மண்டபம் இனிதின்
[எய்தான்
ஓத்தவை உலகத் தெங்கும் உள்ளவை உணர்ந்தார்
[உள்ளம்
பூத்தவை வடிவை ஒப்பான் சிற்றவை கோயில் புக்கான்.

அதுகண்டு அனைவரும் பாராட்டுதல்

102\. புக்கவன் தன்னை நோக்கிப் புரவலர் முனிவர் யாரும்
தக்கதே நினைந்தான் தாதை தாமரைச் சரணம் சூடித்
திக்கினின் நிமிர்த்த கோலச் செங்கதிர்ச் செல்வன் ஏய்ந்த
மிக்குயர் மகுடம் சூட்டச் சூடுதல் விழுமி தென்றுர்.

கைகேயி தன் வரத்தைக் கூற இராமன் எதிரில் வருதல்

103\. ஆயன நிகழும் வேலை அண்ணலும் அயர்ந்து தேருத்
தூயவன் இருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி
நாயகன் உரையான் வாயால் நானிது பகர்வென் என்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள்
[வந்தாள்.

கைகேயியை வணங்கி எழுந்து இராமன் பணிவுடன் நிற்றல்

104\. வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையின் புதைத்து
[மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றுன்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டஆன் கன்றின்
[அன்னுன்.

தசரதன் கட்டளையைத் தெரிவிக்கலாமா எனக் கைகேயி இராமனிடம் கூறுதல்

105\. நின்றவன் தன்னை நோக்கி இரும்பினுன் இயன்ற
[நெஞ்சின்
கொன்றுழல் கூற்றம் என்னும் பெயரின்றிக் கொடுமை
[பூண்டாள்

இன்றெனக் குணர்த்த லாவ தேயதே என்னில் ஆகும்
ஒன்றுனக் குந்தை மைந்த உரைப்பதோர் உரையுண்
[டென்றாள்.

'பணிமின்' என இராமன் கூறல்

106. எந்தையே ஏவ நீரே உரைசெய இயைவ துண்டேல்
உய்ந்தனன் அடியேன் என்னின் பிறந்தவர் உளரோ
[வாழி
வந்ததென் தவத்தின் ஆய வருபயன் மற்றென் றுண்டோ
தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின் என்றான்.

பரதன் நாடாள இராமன் கானம் அடையவேண்டும் என்பது தசரதன் கட்டளை எனக் கைகேயி கூறுதல்

107. ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்
[கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணிய நதிகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாஎன் றேவினன் அரசன் என்றாள்.

இராமன் அடைந்த மகிழ்ச்சி

108. இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதோ யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

109. தெருளுடை மனத்து மன்னன் ஏவலின் திறம்ப அஞ்சி
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக் கியைந்து
[நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரே
றருளுடை ஒருவன் நீக்க அப்பிணி அவிழ்ந்த தொத்தான்.

இராமன் கைகேயிக்கு இறுத்த விடை

110. மன்னவன் பணிஅன் றாகில் நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்னிதின் உறுதி அப்பால் இப்பணி தலைமேற்
[கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும்
[கொண்டேன்.

4. மீநாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

கடவுளரையேனும், ஆசிரியரையேனும், வள்ளல்களையேனும் குழந்தையாக வைத்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்களை யமைத்துப் பாராட்டிப் பாடும் பிரபந்த வகையே **பிள்ளைத் தமிழ்** எனப்படும். அம் முறையில் மீநாட்சியம்மையைக் குழந்தையாக வைத்துப் பாராட்டிப் பாடியிருக்கும் இது, **மீநாட்சியம்மை பிள்ளைத் தமிழ்** எனப்பட்டது. இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும்.

ஆண்பாற்பிள்ளைத் தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. ஆண்பாற் பிள்ளைத் தமிழில், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன பருவங்களாக வரும். பெண்பாற் பிள்ளைத் தமிழில், இறுதி மூன்று பருவங்களுக்குப் பதிலாக, அம்மானை நீராடல் ஊசற் பருவங்கள் வரும்.

ஈண்டுப் பாடமாகத் தரப்பட்டுள்ளவை, வருகைப் பருவத்தில் ஐந்து பாடல்களும், ஊசற் பருவத்தில் ஐந்து பாடல்களும் ஆகும்.

மீநாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றியவர் **ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்** என்பவர். இவர், தாமிரவர்ணி நதியின் வட கரையில் ஸ்ரீ வைகுண்டம் என வழங்கும் திருப்பதியின் வடக்கேயுள்ள **ஸ்ரீ கைலாசம்** என்ற பகுதியில் தோன்றியவர். இவருடைய தந்தையார் **சண்முகசிகாமணிக் கவிராயர்**; தாயார் **சிவகாம சுந்தரியார்**.

குமர குருபரர், ஐந்து வயது வரையில், பேச்சின்றி, ஊமை போல இருந்துவந்தனர். அதுகண்டு நடுங்கிய பெற்றோர்கள் இவரைத் திருச்செந்தூருக்கு எடுத்துச்சென்று, செந்திலாண்டவர் திருமுன்பு வளர்த்திவிட்டுத் தாமும் பாடு கிடந்தனர். முருகப் பெருமான் திருவருளால், குமர குருபரர், பேசும் ஆற்றல் பெற்றுக் கல்வியிலும் கவிபாடுதலிலும் ஆற்றல் உற்றனர்; பின்னர், இலக்கண இலக்கியங்களையும், ஞான சாத்திரங்களையும் திருவருளாலேயே விரைவில் கற்றுத் தேர்ந்தனர். பக்தி ஞான வைராக்கியங்கள் இயல்பிலேயே இவர்பால் தோன்றி வளரத் தொடங்கின.

இந்த மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், இவரால் பாடப் பெற்று, அக் காலத்தில் மதுரையில் அரசாண்டிருந்த **திருமலை நாயக்கர்** முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. அதனை அரங் கேற்றுகையில், ஸ்ரீ மீனாட்சியம்மையே குழந்தை உருவாக எழுந் தருளி வந்து, கேட்டு, மகிழ்ந்தனர் என்றும், முத்தப் பருவத்தைக் குமரகுருபரர் அரங்கேற்றிக்கொண்டிருக்கையில் தம் திருக்கழுத்தி லிருந்த முத்துமாலை ஒன்றை எடுத்து இவர் கழுத்தில் போட்டு மறைந்தனர் என்றும் கூறுவர். பிள்ளைத் தமிழைக் கேட்டு மனமுவந்த திருமலை நாயக்கர் குமரகுருபரர்க்கு அளவற்ற பொருள் உதவிச் சிறப்பித்தனர்.

குமரகுருபரர்க்குக் குரு மூர்த்தியாக விளங்கியவர் தருமபுர ஆதீன 4-ஆம் பட்ட ஞானாசிரியர் **ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்** ஆவர். ஆசிரியர் கட்டளை பெற்றுக் காசிக்குச் சென்று சகலகலாவல்லி மாலை பாடிக் கலைமகளருளால் டில்லி பாதுஷாவின் மொழியாகிய ஹிந்துஸ்தானியில் சிறந்த அறிவு பெற்று, அம் மொழியில் பாதுஷாவோடு பேசி, இடம்பெற்றுக் காசிமடம் இவர் கட்டினர். அங்கேயே வாழ்ந்திருந்த இவர், இறுதியாக, ஒரு முறை தரும புரம் வந்து ஞானாசிரியரைத் தரிசித்துவிட்டு, மீண்டும் காசிக்கே சென்று வாழ்ந்து, ஒரு வைகாசி மாதத்தில் கிருஷ்ணபட்சத் திரு தியையிலே சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்தனர். இவர் இயற்றிய பிரபந்தங்கள் அனைத்தும் **குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு** எனத் திருப்பனந்தாள் காசிமடத்தாரால் வெளியிடப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியது.

இவருடைய காலம் திருமலை நாயக்கர் காலம் என்பது வெளிப்படை ; அஃதாவது கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

வருகைப் பருவம்

1. அஞ்சிலம் போலிடஅ ரிக்குரற் கிண்கிணிஅ
ரற்றுசெஞ் சீறடிபெயர்த்
தடியிடுந் தொறுநின்அ லத்தகச் சுவடுபட்
டம்புவிஅ ரம்பையர்கடம்
மஞ்சுதுஞ் சளகத்தி ளம்பிறையும் எந்தைமுடி
வளரிளம் பிறையும்நாற
மணிநூபு ரத்தவிழும் மென்குரற் கோவசையும்
மடநடைக் கோதொடர்ந்துன்
செஞ்சிலம் படிபற்று தெய்வக்கு மாத்திநெடு
சிறையோதி மம்பின்செலச்
சிற்றிடைக் கொல்கிமணி மேகலைஇ ரங்கத்தி
ருக்கோயில் எனவெனெஞ்சக்
கஞ்சமும் செஞ்சொற்ற மிழ்க்கூட லுங்கொண்ட
காமர்பூங் கொடிவருகவே
கற்பகா டவியிற்க டம்பா டவிப்பொலி
கயற்கண யகிவருகவே.

2. குண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங்
கோதையும் மதுரமொழுகும்
கொழிதமிழ்ப் பனுவற்று றைப்படியும் மடநடைக்
கூந்தலம் பிடியுமறுகால்
வண்டுபடு முண்டகம னைக்குடிபு கச்சிவம
ணங்கமழ விண்டதொண்டர்
மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட
மாணிக்க வல்லிவில்வேள்
துண்டுபடு மதிநுதற் ரேகையொடும் அளவில்பல்
தொல்லுருள டுத்தமர்செயும்
தொடுசிலைஎ னக்ககன முகடுமுட் டிப்பூந்து
ணர்த்தலைவ ணங்கிநிற்கும்
கண்டுபடு கன்னல்பைங் காடுபடு கூடற்க
லாபமா மயில்வருகவே
கற்பகா டவியிற்க டம்பாட விப்பொலி
கயற்கண யகிவருகவே.

3. முயல்பாய்ம திக்குழவி தவழ்கூல டிப்பலவின்
முட்பொதிகு டக்கனியொடு
முடவுத்த டந்தாழை முப்புடைக் கனிசிந்த
மோதிநீர் உண்டிருண்ட
புயல்பாய்ப டப்பைத்த டம்பொழில்கள் அன்றியேழ்
பொழிலையுமொ ருங்கலைத்துப்
புறமூடும் அண்டச்சு வர்த்தலமி டித்துப்பு
றக்கடல்ம டுத்துழக்கிச்
செயல்பாய்க டற்றானை செங்களங் கொளவம்மை
திக்குவிச யம்கொண்டநாள்
தெய்வக்க யற்கொடிகள் திசைதிசைஎ டுத்தெனத்
திக்கெட்டும் முட்ட வெடிபோய்க்
கயல்பாய்கு ரம்பணைபெ ரும்பணைத் தமிழ்மதுரை
காவலன் மகள்வருகவே
கற்பகா டவியிற்க டம்பாட விப்பொலி
கயற்கண்ணி யகிவருகவே.

4. வடம்பட்ட நின்துணைக் கொங்கைக்கு டம்கொட்டு
மதுரவமு துண்டு கடைவாய்
வழியும்வெள் ளருவியென நிலவுபொழி கிம்புரிம
ருப்பிற்பொ ருப்பிடித்துத்
தடம்பட்ட பொற்றூது சிந்துரங் கும்பத்த
லத்தணிவ தொப்ப அப்பிச்
சலராசி ஏழுந்த டக்கையின்மு கந்துபின்
தானநீ ரால்நிரப்பி
முடம்பட்ட மதியங்கு சப்படைஎ னக்ககன
முகடுகை தடவியடுமீன்
முத்தம்ப தித்திட்ட முகபடாம் எனவெழுமு
கிற்படாம் நெற்றிசுற்றும்
கடம்பட்ட சிறுகட்பெ ருங்கொலைய மழவிளங்
களிறீன்ற பிடிவருகவே
கற்பகா டவியிற்க டம்பாட விப்பொலி
கயற்கண்ணி யகிவருகவே.

5. தேனொழுகு கஞ்சப்பொ லன்சிற டிக்கூட்டு
செம்பஞ்சி யின்குழம்பாற்
றெள்ளமுதி றைக்கும்ப சுங்குழவி வெண்டிங்கள்
செக்கர்மதி யாக்கரைபொரும்

வானெழுகு துங்கத்த ரங்கப்பெ ருங்கங்கை
வாணிநதி யாச்சிவபிரான்
மகுடகோ டீரத்த டிச்சுவட ழுத்தியிடு
மரகதக் கொம்புகதிர்கால்
மீனெழுகு மாயிருவி சும்பிற்செ லுங்கடவுள்
வேழத்தின் மத்தகத்து
வீற்றிருக் குஞ்சேயி ழைக்கும்ப சுங்கமுகு
வெண்கவரி வீசும்வாசக்
கானெழுகு தடமலர்க் கடிபொழில் கூடல்வளர்
கவுரியன் மகள்வருகவே
கற்பகா டவியிற்க டம்பா டவிப்பொலி
கயற்கண் யகிவருகவே.

ஊசற் பருவம்

1. ஒள்ளொளிய பவளக்கொ ழுங்கான்மி சைப்பொங்கும்
ஒழுகொளிய வயிரவிட்டத்
தூற்றும்செ ழுந்தண்ணி லாக்கால்வி ழுந்தனைய
ஒண்டரள வடம்வீக்கியே
அள்ளிடவ ழிந்துசே யொளிதுளும் புங்கிரண
அருணரத் நப்பலகைபுக்
காடுநின் றேற்றமப் பருதிமண் டலம்வளர்அ
ரும்பெருஞ் சுடரையேய்ப்பத்
தெள்ளுசுவை அமுதம்க னிந்தவா னந்தத்தி
ரைக்கடல்ம டுத்துழக்கும்
செல்வச்செ ருக்கர்கள்ம னக்கமலம் நெக்கபூஞ்
சேக்கையிற் பழையபாடல்
புள்ளொலியெ ழக்குடிபு குந்தசுந் தரவல்லி
பொன்னூசல் ஆடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூசல் ஆடியருளே.

2. விற்பொலிய நிலவுபொழி வெண்ணித்தி லம்பூண்டு
விழுதுபட மழகதிர்விடும்
வெண்டரள வூசலின்மி சைப்பொலிவ புண்டரிக
வீட்டிற்பொ லிந்துமதுரச்
சொற்பொலிப ழம்பாடல் சொல்லுகின் றவளுநின்
சொருபமென் பதுமிளநிலாத்

தோற்றுமதி மண்டலத் தமுதமய மாயம்மை
தோன்றுகின் றதும்விரிப்ப
எற்பொலிய ஒழுகுமுழு மாணிக்க மணிமுகப்
பேறிமழை முகிறவழ்வதவ்
வெறிசுடர்க் கடவுடிரு மடியிலவன் மடமகள்இ
ருந்துவிளை யாடலேய்க்கும்
பொற்புரிசை மதுராபு ரிப்பொலிதி ருப்பாவை
பொன்னூசல் ஆடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூசல் ஆடியருளே.

3. உருகியப சும்பொன்ன சும்பவெயில் வீசுபொன்
ஊசலையு தைந்தாடலும்
ஒண்டளிர டிச்சுவடு றப்பெறும சோகுநற
வொழுகுமலர் பூத்துதிர்வதுன்
திருபுனுரு வங்கரந் தெந்தையார் நிற்பதுதெ
ரிந்திடந மக்கிதுவெனச்
செஞ்சிலைக் கள்வனெரு வன்றேடைம டக்காது
தெரிகணைகள் சொரிவதேய்ப்ப
எரிமணிகு யின்றபொற் செய்குன்று மழகதிர்ஏ
றிப்பவெழு செஞ்சோதியூ
டிளமதியி மைப்பதுன் றிருமுகச் செவ்விவேட்
டெழுநாத்த லைத்தவமவன்
புரிவதுக டுக்குமது ராபுரிம டக்கிள்ளை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே.

4. கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந் தாடக்க
லந்தாடு பொன்னூசலக்
கடவுடிரு நோக்கத்து நெக்குருகி யிடநின்க
டைக்கணேக் கத்துமற்றச்
செங்கண்விடை யவர்மனமு மொக்கக்க ரைந்துருகு
செய்கையவர் சித்தமேபொற்
றிருவூச லாவிருந் தாடுகின் றுயெனும்
செய்தியையெ டுத்துரைப்ப
அங்கணெடு நிலம்விடர்ப டக்கிழித் தோடுவேர்
அடியிற்ப ழுத்தபலவின்

அளிபொற் சுளைக்குடக் கனியுடைந் தூற்றுதேன்
அருவிபில மேழுமுட்டிப்
பொங்கிவரு பொழில்மதுர மதுரைநா யகிதிருப்
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே.

5. சேர்க்குஞ்சு வைப்பாட லமுதொழுக வொழுகுபொற்
றிருவூசல் பாடியாடச்
சிவபிரான் றிருமுடிய சைப்பமுடி மேற்பொங்கு
செங்கணர வரசகிலம்வைத்
தார்க்கும்ப ணுடவிய சைப்பச்ச ராசரமும்
அசைகின்ற தம்மனையசைந்
தாடலா லண்டமும கண்டபகி ரண்டமும்அ
சைந்தாடு கின்றதேய்ப்பக்
கார்க்கொந்த ளக்கோதை மடவியர்கு ழற்கூட்டு
கமழ்நறும் புகைவிண்மிசைக்
கைபரந் தெழுவதரு மாறிரவி மண்டலம்
கைக்கொளவி ருட்படலம்வான்
போர்க்கின்ற தொக்குமது ராபுரிம டக்கிள்ளை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே.

குறிப்புரை

1. திருக்குறள்

(1) கடவுள் வாழ்த்து: அஃதாவது கடவுளை வாழ்த்துதல்.

1 : முதற் கடவுளது இருப்புக் கூறுதல் :

1. எழுத்தெல்லாம்-தமிழ் எழுத்துக்களே அன்றி வட எழுத்துக்களும். அகரம் முதல-அகரமாகிய முதலை உடையன. (அதுபோல). உலகு - உலகமும் அதிலுள்ள உயிர்களும். ஆதி பகவன் முதற்று-ஆதி பகவன் என்னும் கடவுளாகிய முதலை உடையன.

உவமானத்தையும் உவமேயத்தையும் வெவ்வேறு வாக்கியமாக நிறுத்தி, அதுபோல என்னும் உவம உருபு இடையில் கொடாமல் கூறியிருத்தலால், இக் குறள் எடுத்துக்காட்டுவமையணி எனப்படும்.

காணப்பட்ட உலகத்தால், காணப்படாத கடவுட்கு இருப்பைச் சொல்ல, 'ஆதிபகவன் முதற்றே உலகு' என உலகின்மேல் வைத்துக் கூறியிருப்பினும், உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்ளுதற் குரியது.

2 : நூலறிவிற்குப் பயன் இறைவன் அடிகளை வணங்கிப் பிறவியை ஒழித்தல் என்பது கூறுதல்:

2. பயன் என்-பயன் யாது? ஒன்றுமில்லை. கொல் : அசை. வால் அறிவன்-மெய்யுணர்வினை உடைய இறைவன். தொழாஅர் - வணங்கார். பிறவிப் பிணிக்கு மருந்தாதலின், 'நல்தாள்' என்றார்.

3—4: இறைவன் தாளை நினைப்பவர் வீடு பெறுவர் என்பது கூறுதல் :

3. மலர்மிசை-உள்ளமாகிய தாமரை மலரில். ஏகினான்-அன்பால் நினைவார், நினைந்த வடிவோடு விரைந்து வருபவன். விரைவு பற்றி 'ஏகுவான்' என்னாமல், 'ஏகினான்' என இறந்த காலத்தால் கூறியது கால வழுவமைதி. சேர்தல்-இடைவிடாமல் நினைத்தல் (தியானித்தல்). நிலம் மிசை-வீட்டுலகில். நீடுவாழ்வார்-அழிவில்லாமல் வாழ்வார்.

4. வேண்டுதல் வேண்டாமை-விரும்புதலும் வெறுத்தலும். யாண்டும்-எக்காலத்திலும். இடும்பை-பிறவித் துன்பங்கள். இல-உண்டாவன அல்ல.

5 : இறைவனை வாழ்த்துவார் வீடு பெறுவர் என்பது கூறுதல் :

5. இருள்-மயக்கம். இருவினை-நல்வினையும் தீவினையும். பொருள் சேர் புகழ்-மெய்ம்மை சேர்ந்த புகழ். புரிந்தார் மாட்டு-எப்பொழுதும் கூறுபவரிடம்

6 : இறைவனால் சொல்லப்பட்ட ஒழுக்க நெறியில் நிற்பவர் வீடு பெறுவர் என்பது கூறுதல் :

6. பொறி – மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் அறிகருவிகள். வாயில் - வழி. ஐந்து - ஐந்து அவாக்கள். அவித்தான் - அறுத்தவன். நெறி - வழி. நீடு வாழ்வார் - பிறப்பில்லாமல் எக் காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

7—9 : இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யாவிடத்து உண்டாகும் குற்றம் கூறுதல் :

7. உவமை - ஒப்பு. மாற்றல் அரிது - நீக்குதல் உண்டாகாது.

8. அற ஆழி அந்தணன் - அறக் கடலாகிய அந்தணன். தாள் - அடியாகிய மரக்கலம். பிற ஆழி - பொருளும் இன்பமும் ஆகிய கடல்கள். பொருளும் இன்பமும் ஆழியாக உருவகம் செய்ததற்கு ஏற்பத் தாளை மரக்கலம் என உருவகம் செய்யாதபடியால், இஃது ஏகதேச உருவகம் எனப்படும். அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவமாக உடையவ னாதலின், 'அற ஆழி அந்தணன்' என்றார்.

9. கோள்-கொள்ளுதல்: முதல் நிலை நீண்ட தொழிற்பெயர். பொறியின் - இந்திரியங்கள் போல. குணம் இல-பயன் படுதல் உடையன அல்ல. எண் குணத்தான் - எட்டு வகைப்பட்ட குணங்களை உடையவனாகிய இறைவன். எண் குணங்களாவன: தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பன. வணங்காத தலைகள் பயனில என்று கூறினாரேனும், இனம் பற்றி, வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில எனக் கொள்க.

10 : உலகியல்பை நினையாது இறைவன் அடியே நினைப்பார்க்குப் பிறவி அறுதலும், மாறி நினைப்பார்க்குப் பிறவி அருமையும் ஆகிய இரண்டும் உறுதிப் படுத்திக் கூறல் :

10. பிறவிப் பெருங்கடல் - பிறப்பாகிய பெரிய கடல். காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரை [எல்லை] இன்றி வருதலின், 'பிறவிப் பெருங்கடல்' என்றார். நீந்துவர் என்பதற் கேற்பச் சேர்ந்தார் என ஒரு சொல் வருவித் துரைக. இது சொல்லெச்சம் எனப்படும்.

(2) வான்சிறப்பு : மழையினது சிறப்புக் கூறுதல்.

1—7 : மழையானது உலகம் நடைபெறுதற்குத் துணைக்காரணமாதல் கூறுதல் :

1. வான் - மழை: ஆகுபெயர். நின்று - நிற்ப : நிற்ப என்பது நின்று எனத் திரிந்துநின்றது. உலகம் - உயிர்கள். வழங்கி வருத லான் - நிலைபெற்று வருதலினால்: அஃதாவது, பிறப்பு இடையறாமை யின், எந் நாளும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தம் உண் டார், சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை, 'அமிழ்தம் என்று உணரற்பாற்று' என்றார்.

2. துப்பார்க்கு - உண்பார்க்கு. துப்பாய துப்பு - நல்ல உணவுகள். துப்பாயதூஉம் - [தானும்] உணவாய் நிற்பதும். தானும் உணவாத லாவது, தண்ணீராய் உண்ணப்படுதல். துப்பாயதும் என்பது துப் பாயதூஉம் எனக் குறில் நெடிலாகி அளபெடுத்துநின்றது, இன் னிசைப் பொருட்டாம்.

3. விண் - மழை: ஆகுபெயர். இன்று - இல்லாமல்: பெய்ய வேண்டும் காலத்தில் பெய்யாமல். விரிநீர் - கடல். வியன் - அகன்ற. உலகத்துள்-உலகத்தினுள். நின்று - நிலைபெற்று. உடற்றும்-வருத்தும்.

4. உழாஅர்-உழுதலைச் செய்யார். புயல் - மழை. வாரி - வருவாய், குன்றிக்கால் - குறைந்தால் : குன்றியக்கால் என்பது குன்றிக்கால் எனக் குறைந்துநின்றது.

5. சார்வாய் - துணையாய். மற்று: வினைமாற்று: கெடுப்பது என முன் வந்த வினையை மாற்றிக் கெடுக்காது என்னும் பொருள் தந்து நின்றது. எடுப்பது என்னும் தொழிலுக்கு மறுதலையாகிய கெடுப்பது என்னும் தொழிலை, உவமையாக ஆங்கு என்பது (முன் கெடுத்தாற் போல எனக்) குறிப்பித்தலால், ஆங்கு என்பது மறுதலைத் தொழிலுவமத்தில் வந்தது காண்க. கெடுப்பதும் எடுப்பதும் என்பன குறில் நெடிலாகி அளபெடுத்தமையால் இன்னிசை அளபெடையாம்.

6. விசும்பு - மேகம்: ஆகுபெயர். வீழி னல்லால் - வீழின் காண்ப தல்லாமல். மற்று - வீழாதாயின்: வினைமாற்றுப் பொருளில் மற்று வந்தது காண்க. தலை - தலையையும் : இழிவு சிறப்பும்மை விகாரத் தால் தொக்கது.

7. கடலும் : உம்மை, உயர்வு சிறப்பும்மை. தன் நீர்மை குன்றும் - தன் இயல்பு குறையும் : தன் இயல்பு குறைதலாவது, நீர் வாழ் உயிர்கள் பிறவாமையும், பவளம் முத்து முதலியன உண்டாகா மையுமாம். தடிந்து - குறைத்து, முகந்து. எழிலி - மேகம். நல்கா தாகிவிடின் - பெய்யாது விடுமாயின்.

8—10 : அறம் பொரு ளின்பங்கள் நடைபெறுவதற்கு மழையானது துணைக்காரண மாதலைக் கூறுதல் :

8. சிறப்பு - விழா. பூசனை - நாள்தோறும் செய்யும் பூசை. செல்லாது - நடவாது. வானோர்க்கும் : உம்மை, உயர்வு சிறப்பும்மை.

9. தானம் - அறநெறியால் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல். தவம் - மனம், கண் முதலிய பொறி வழியிற் போகாமல் நிற்கும்பொருட்டு உண்டி சுருக்கல் முதலியன. தங்கா - உளவாகா.

10. நீர் இன்று - நீரை இல்லாமல். உலகு - உலகியலாம் பொருளின்பங்கள். ஒழுக்கு - அந் நீர் இடையறுமல் செல்லும் செலவு. நீரை இன்றிப் பொருளின்பங்கள் எவர்க்கும் அமையா என்பது யாவராலும் தெளியப்பட்ட உண்மை. அவ்வாறே, நீரின் இடையறுத ஒழுக்கும் மழையை இன்றி அமையாது என்பது தெளிதற் குரியது. ஒழுக்கு என்பது, ஒழுக்கமாம் என்று உரைப்பாரும் உளர்,

(3) நீத்தார் பெருமை : முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல்.

1—3 : நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்க தென்பது கூறுதல் :

1. நீத்தார் - துறந்தவர். விழுப்பத்து - சிறந்த பொருள்கள் பல வற்றுள்ளும். வேண்டும் - இதுவே சிறந்த பொரு ளென்று விரும்பும். பனுவல் துணிவு - நூல்களது துணிவு : நூல்கள் செய்தாரது துணிவு அந் நூல்கள்மேல் ஏற்றப்பட்டது. ஒழுக்கத்து நின்று நீத்தலாவது, தத்தம் மரபிற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களில் வழுவாது நின்று, அறம் வளரப் பாவம் நீங்கப்பெற்று, அதனல் அறியாமை நீங்க மெய்யுணர்வு வாய்ந்து, புறப்பற்றையும் அகப்பற்றையும் விடுதல்.

2. துணைக் கூறின் - இவ்வளவு என்று எண்ணல் கூறி அறிய லுறின். இறந்தாரை - பிறந்து இறந்தவரை. எண்ணிக்கொண்டற்று - எண்ணி இத்தனை பேர்க ளென்று அறியலுற்றுல் போலும் : முடியா தென்பதாம். **கொண்டால்** அற்று என்பது **கொண்டு அற்று** எனத் திரிந்துநின்றது.

3. இருமை - பிறப்பு வீடு என்னும் இரண்டனுடைய. வகை - துன்ப இன்பக் கூறுபாடுகள். ஈண்டு - இப் பிறப்பில். பிறங்கிற்று உலகு - உலகில் உயர்ந்தது. பெருமையே என்னும் பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது.

4—7 : பெருமைக்குக் காரணங்கள் ஐம் பொறிகளையும் வெல்லுதலும், ஐந்து அவாக்களையும் அறுத்தலும், யோகப்பயிற்சியும், தத்துவ உணர்வும் என்பது கூறுதல் :

4. உரன் - திண்மை : ஈண்டு அறிவுடைமை. தோட்டி - அங்குசம். ஐந்தும் - பொறிகளாகிய யானைகள் ஐந்தும். வரன் என்னும் - எல்லா நிலத்தினும் மிக்கது என்று சொல்லப்படும். வைப்பு - வீட்டு நிலம். உரனைத் தோட்டியாக உருவகம் செய்ததற்கு ஏற்ப, ஐந்து

(பொறிகளையு)ம் யானையாக உருவகம் செய்யாமையின், இஃது ஏக தேச உருவகம் எனப்படும்.

5. ஐந்து அவித்தான் - புலன்களிற் செல்கின்ற ஐந்து அவாக்களை யும் அடக்கினவன் : ஐந்தவித்த கௌதமன் வரலாறு அறிக. விசும் புளார் கோமான் - தேவர் இறைவன். கரி - சான்று. ஐந்தும் என் னும் முற்றும்மையும், ஆற்றற்கு என்னும் நான்காம் வேற்றுமை உரு பும் விகாரத்தால் தொக்கன. தான், ஐந்து அவியாது சாபம் எய்தி நின்று, ஐந்தவித்தவனது ஆற்றல் உணர்த்தினான் ஆதலின், இந்திரனே சாலும் கரி என்றார்.

6. அரிய-அரிய செயல்கள் : அவை, இயமம் முதலிய எண்வகை யோக உறுப்புக்கள். செய்கலாதார் - செய்யமாட்டாதவர். மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளால் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின எளிய செயல்கள் : இவற்றைச் செய்வார் சிறியர் ஆவர்.

7. ஐந்தன் வகை - தன்மாத்திரைகள் ஐந்தனது கூறுபாடு. அவை : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரை கள் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என்னும் பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஞானேந்திரியங்கள் என்னும் அறிகருவிகள் ஐந்தும், வாக்கு, கை, கால், பாயுரு, உபத்தம் ஆகிய கர்மேந்திரியங்கள் என்னும் தொழிற்கருவிகள் ஐந்தும் ஆக இருபத்தைந்தும் ஆகும். இவையே தத்துவங்கள் இருபத்தைந்து எனப்படும். இவற்றைத் தெரித லாவது, இவை யல்லது உலகம் எனப் பிறிதொன்றில்லை என்று ஆராய்ந்தறிதல். அவ்வாறு ஆராய்வானுக்கு, உலகம், அவன் அறிவின் கண்ணதாம்.

8—9 : நீத்தாரது ஆணை கூறுதல் :

8. நிறை மொழி - அருளிற் கூறினும், வெகுண்டு கூறினும் அவ் வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. மறை மொழி - அவர் ஆணை யாகச் சொல்லிய மந்திரங்கள். காட்டிவிடும் - பயனால் உணர்த்திவிடும்.

9. குணம் - துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற் குணங்கள். சலியாமையும் பெருமையும் பற்றிக் குணங்களைக் குன் றாக உருவகம் செய்தார். காத்தல் - தடுத்தல்.

10 : அவ்வாறு ஆணையுடைய ராயினும், உயிர்களிடத்து அருளுடையவர் என்பது கூறுதல் :

10. அறவோர் - துறவறத்தில் நின்றவர். செந்தண்மை - செவ் விய தண்ணருள். பூணுதல் - விரதமாகக் கொள்ளுதல்.

ஒ-/ 1bc N57

(4) அறன் வலியுறுத்தல் : அறம் பொரு ளின்பங்களுள், மற்றைப் பொருளும் இன்பமும்போல் ஆகாமல், அறம், இம்மைப் பயன், மறுமைப் பயன், வீடு என்னும் மூன்றையும் தருதலால், அப் பொருளின்பமென்னும் இரண்டினும் உறுதியுடைய தென்பது கூறுதல்.

1 : அறத்தின் மிக்க உறுதியில்லை என்பது கூறுதல் :

1. சிறப்பு - வீடுபேறு. ஈனும் - தரும். செல்வம் - துறக்கம் முதலிய செல்வம். ஊங்கு - மிக்க. ஆக்கம் தருவதாகிய அறத்தை, ஆகுபெயரால் ஆக்கம் என்று கூறினர். ஆக்கம் - மேன்மேல் உயர்தல்,

2 : அறம் செய்யாதவிடத்துக் கேடு வருதலைக் கூறுதல் :

2. கேடு - கெடுதலைத் தருவது. 'அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை' என மேற்கூறியதனையே மீண்டும் கூறினர், அதனை மறத்தலினல் கேடு வருதலைச் சொல்லுதலாகிய பயன் நோக்கி.

3 : அறம் செய்யும் முறையைக் கூறுதல் :

3. ஒல்லும் வகையான் : கூடும் வகையால். அஃதாவது இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கு ஏற்பவும் செய்தல். ஓவாது - இடைவிடாமல். செல்லும் வாய் எல்லாம் - அது செல்லும் இடங்களிலெல்லாம். செல்லும் இடங்களாவன : மனம் வாக்குக் காயம் என்பன. அவற்றால் செய்யும் அறங்களாவன : முறையே நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலும் ஆம்.

TAMIL NADU ARCHIVES No. 112029

4—5 : அறத்தினது இயல்பு கூறுதல் :

4. மாசு - குற்றம். குற்றமாவது : தீயன சிந்தித்தல். அனைத்து - அவ்வளவே. ஆகுல நீர - ஆரவாரத் தன்மையை உடையனவாம், பிறர் அறிதல் வேண்டிச் செய்கின்றனவாகலின், 'ஆகுலநீர' என்றார். மனத்தில் குற்றமுடையனாகியவிடத்து, அதன் வழியவாகிய மொழி மெய்களால் செய்வன பயனில என்பதும் பெறப்பட்டது.

5. அழுக்காறு - பிறருடைய உயர்ச்சி பொறாமை (சகியாமை). வெகுளி - தணியாக் கோபம். இழுக்கா - கடிந்து ; நீக்கி. இதனால் இவற்றோடு கூடி இயன்றது அறம் எனப்படாது என்பதும் கொள்க.

6 : அறத்தை, நிலையில்லாத வுடம்பு இருக்கின்ற பொழுதே செய்க என்பது கூறுதல்:

6. அன்று - பிறகு ; இறக்கும் நாளில். அறிவாம் - செய்வோம். பொன்றுங்கால் - உடம்பிலிருந்து உயிர் போகும் காலத்தில். பொன்

ருத் துணை - அழியாத துணையாம். மற்று: அசை. ' பொன்றுத் துணை' என்றார், செய்த உடம்பு அழியவும் உயிரோடு கூடி மற்றை உடம்பிலும் அவ்வறம் செல்லுதலால்.

7 : அறம், அழியாத துணையாதல் தெளிவாகக் கூறுதல்:

7. அறத்தாறு - அறத்தின் பயன். இது என - இது என்று ஆகம அளவையால் பொறுத்தானோடு - சுமப்பவனோடு. உணரப் படும் என்பது இறுதியில் சொல்லெச்சம்.

8 : அறம், வீடு பயக்கும் என்பது கூறுதல்:

8. வீழ் நாள் - செய்யாது கழியும் நாள். படாஅமை - உள வாகாமல். நன்று - அறம். வாழ் நாள் - உடலோடு கூடும் நாள். அவிச்சை, அகங்காரம், அவா, விருப்பு, வெறுப்பு என்னும் ஐவகைக் குற்றங்களால் வருகிற நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகளும் உள்ளவரைக்கும், உயிர், உடம்போடும் கூடிநின்று அவ் விரு வகை வினைகளின் பயன்களாகிய சுகதுக்கங்கள் இரண்டையும் நுகரு மாதலால், அக் காலம் முழுவதும் 'வாழ்நாள்' எனப்பட்டது.

9 : அறம் செய்வாரே, இம்மையின்பமும் புகழும் எய்துவர் என்பது கூறுதல்:

9. அறத்தான் வருவதே - இல்லறத்தோடு பொருந்தி வருவதே. புறத்த - துன்பத்துள் சேர்வனவாம். அறத்தான் என்னும் ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இன்பத்தின் புறமாம் எனவே, துன்பமாயிற்று. அறத்தான் வாராதன 'புகழுமில' எனவே, வருவது புகழு முடைத்து என்பது பெற்றாம்,

10 : செய்வதும் ஒழிவதும் நியமித்தல் :

10. உயற்பாலது - ஒழிதல் தன்மையது. அறன் : போலி. பழி - பழிக்கப்படுவது; தீவினை. ஒரும் என்பன இரண்டும் அசைநிலை.

(5) இல்வாழ்க்கை: மனையாளோடு கூடி வாழ்தலின் சிறப்புக் கூறுதல்.

1—2 : இல்வாழ்க்கை, எல்லா உபகாரங்களுக்கும் உரித்தாதல் கூறுதல் :

1. இல் - இல்லறம் : ஆகுபெயர். என்பான் - என்று சொல்லப் படுபவன் : செயப்படுபொருள் எழுவாய்போலச் சொல்லப்பட்டது. இயல்புடைய மூவர் - அற இயல்புடைய ஏனைய மூவர் : பிரம்மசாரி, வானப்பிரத்தன், துறவி. இவருள், பிரம்மசாரி, வானப்பிரத்தன் இரு வரையும் பிறர் மதம் மேற்கொண்டு கூறினர். நல்லாற்றில் - அவர் செல்லும் நல்ல ஒழுக்க வழிகளில். நின்ற துணை - நிலைபெற்ற துணையாம். பசி, நோய், குளிர் முதலியவற்றால் இடையூறு வாராமல், உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவி, அவரை அந் நெறிகளில் வழுவா மல் செலுத்துதலின், ' நல்லாற்றில் நின்ற துணை ' என்றார்.

2. துறந்தார் - ஆதாரமானவரால் கை விடப்பட்டவர். துவ்வாதவர் - வறியர். இறந்தார் - தன்னிடம் வந்து செத்தவர். கை விடப்பட்டவர்க்குப் பாவம் ஒழிய, அவர்க்கு ஆதாரமாய் நின்று வேண்டுவன செய்தலாலும், வறியவர்க்கு உணவு முதலியன கொடுத்தலாலும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலியன செய்து நல்லுலகின்கட் செலுத்தலாலும் 'துணை' என்றார்.

3—5 : இல்வாழ்வான் அறம் செய்யுமாறு கூறுதல் :

3. தென்புலத்தார் - பிதிரர்: படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி. அவர்க்கு இடம் தென் திசை ஆகலின், 'தென் புலத்தார்' என்றார். தெய்வம் - தேவர். விருந்து - புதுமை: ஈண்டு, ஆகுபெயராய்ப் புதியராய் வந்தவரை உணர்த்திற்று. ஒக்கல் - சுற்றத்தார். எல்லா அறங்களும், தான் செவ்வையாய் இருந்துகொண்டு செய்யவேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனாயிற்று. 'என்ற ஆங்கு' என்பதிலுள்ள என்ற என்பதில் அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. ஆங்கு - அசை. 'ஐம்புலம்' என்றார், ஐவகையும் அறம் செய்தற்கு இடனாதலின். ஆறு - அறவழி. ஓம்பல் - வழுவாமல் செய்தல். இந்த ஐந்திடங்களுக்கும் ஐந்து பங்கு வேண்டுதலால், அரசனுக்குப் பகுதிப் பொருள் ஆறி லொரு பங்காயிற்று.

4. பழி அஞ்சி - பழிப்பிற்கு ஏதுவாகிய பாவத்திற்கு அஞ்சி - பழி ; ஆகுபெயர். பாத்து - பகுத்து: மரூஉமொழி. ஊண் - உண்டல் : முதல் நிலை திரிந்த தொழிற்பெயர். எஞ்சல் - அழிதல். எஞ் ஞான்றும் - எந் நாளும். பாவத்தால் வந்த பிறன் பொருளைப் பகுத் துண்ணின், அறம் பொருளுடையான்மேலும், பாவம் தன்மேலுமாய் நின்று சந்ததி அழியு மாதலால், 'பழி அஞ்சி' என்றார்.

5. அன்பும் அறனும் - தன் மனையாளிடம் அன்பும், மற்றவர்க்குப் பகுத்துண்டலாகிய அறமும், இல்லாளுக்கும் கணவனுக்கும் நெஞ்சு ஒன்றாகாதபோது, இல்லறம் கடைபோகாதாகலின், அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனாயிற்று. அன்பையும் அறனையும் முன் வைத்த வரிசையின்படி, அவற்றோடு தொடர்புள்ள பண்பையும் பயனையும் வரிசையாக நிறுத்தினபடியால், இது நிரல் நிறை அணியாகும்,

6—9 : இல்வாழ்க்கையில் நிற்றலே பயனுடைய தென்பது கூறுதல் :

6. புறத்தாறு - மனைவியை விட்டு வனத்திற் செல்லும் நிலை. எவன் - யாது? இல்லை என்றபடி.

7. முயல்வார் - மூன்றும் நிலையில் நின்ற வானப்பிரத்தர் : முற்றத் துறந்தவர் புலன்களை விட்டமையின், அவற்றை விட முயல்வார்

என்றார். தலை - மிக்கவன்: முயலாது வைத்துப் பயனெய்துதலின் அவனைத் தலை என்றார்.

8. ஒழுக்கி - ஒழுகச் செய்து. அறன் இழுக்கா - தன் அறத்தி னின்றும் தவறாத. நோற்பாரின் - தவம் செய்வோர் நிலையினும்: ஆகு பெயர். நோன்மை - பொறுமை.

9. எனப்பட்டது - என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது. ஏகாரம் : பிரிநிலை. அதனை, இல்வாழ்க்கையோடு கூட்டி, ‘இல் வாழ்க் கையே’ என்க. இதனால் பிரிக்கப்பட்டது துறவறமாகலின், அஃது என்னும் சுட்டுப்பெயர் துறவறத்தின்மேல் நின்றது. மனத்தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்க வேண்டாது ஐம்புல இன்பங்களையும் நிரம்பத் துய்க்கும் மேம்பாடு உடைய இல்வாழ்க்கையோடு ஒருங் கே வைத்து, அறமெனத் துறவறத்தை எண்ணுவது, மனத்தையும் பொறிகளையும் ஒறுத் தடக்க வல்ல அருமை உடைத்தாய வழியே என்க.

10 : இல்வாழ்க்கை நிற்றலின் மறுமைப் பயன் கூறுதல் :

10. வாழ்வாங்கு - வாழும் இயல்பினால். வாழ்பவன் - வாழ்கின் றவன், (மண்ணுலகத்தானே ஆயினும்). தெய்வத்துள்-தேவருள் ஒருவ னாக. வைக்கப்படும்-வைத்து நன்கு மதிக்கப்படுவான். பின் தேவ னாய், அவ் வறப்பயன் நுகர்தல் ஒருதலை (நிச்சயம்) ஆதலின், ‘தெய்வத் துள் வைக்கப்படும்’ என்றார். இல்வாழ்வின் இம்மைப் பயன் புகழ். அதனை இல்லற இயலின் இறுதியில் புகழதிகாரத்தில் கூறியிருத்தல் காண்க.

(6) வாழ்க்கைத் துணை நலம். இல் வாழ்க்கைக்குத் துணைவியாகிய மனையாளின் நன்மையைக் கூறுதல்.

1 : மனையாளுக்கு மனைத் தக்க மாண்பும், வருவாய்க்குத் தக்க வாழ்வும் சிறந்தன என்பது கூறுதல் :

1. மனைத் தக்க - மனையறத்திற்குத் தக்க. மாண்பு-நற்குண நற் செயல்கள். தற் கொண்டான் - தன்னைக் கொண்ட கணவன். வளத் தக்காள் - வருவாய்க்குத் தக்க வாழ்க்கை யுடையவள். நற்குணங்க ளாவன: துறந்தார்ப் பேணல், விருந்தயர்தல், வறியாரிடத்து அரு ளுடைமை முதலாயின. நற்செயல்கள் ஆவன: வாழ்க்கைக்கு வேண் டும் பொருள்கள் அறிந்து காப்பாற்றிவைத்தல், உணவுகளைச் சுவை படச் சமைத்தல், தொழில் வன்மை, ஒப்புரவு செய்தல் முதலாயின.

2–3 : இல் வாழ்க்கைக்கு வேண்டுவது மனையாளது மாட்சியே, மற் றவை அல்ல என்பது கூறுதல் :

2. இல்லாயின் - இல்லையானால். எனை மாட்சித்தாயினும் - செல்வத்தால் எவ்வளவு பெருமை யுடையதாயினும். 'இல்' என்றார், பயன்படாமையின்.

3. மாண்பு ஆனல் - நற்குண நற்செயல்களை உடையவள் ஆனல்: மாண்பு என்னும் குணத்தின் பெயர் குணியின்மேல் நின்றது.

4 : மனையாளது கற்பு நலத்தின் சிறப்புக் கூறுதல் :

4. பெண்ணின் - இல்லாளினும். பெருந்தக்க - மேம்பட்ட பொருள்கள். யா - யாவை. கற்பென்னும் திண்மை - கற்பென்னும் கலங்கா நிலைமை. கற்புடையாள் போல, அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற இன்மையின், 'யாவுள' என்றார்.

5 : கற்புடையவளது ஆற்றல் கூறுதல்:

5. தெய்வம் - பிற தெய்வங்கள். தொழாஅள் - வணங்காதவளாய். கொழுநன் தொழுது எழுவாள் - தன் தெய்வமாகிய கணவனைத் தொழாநின்று துயிலெழுவாள். தொழாநின்று என்பது தொழுது எனத் திரிந்துநின்றது. தெய்வம் தொழுதற்கு மனம் தெளிவது, துயிலெழும் காலத்தில் ஆதலால், 'தொழுதெழுவாள்' என்றார். தெய்வமும் கற்புடையவளுக்கு ஏவல் செய்யும் என்பதாம்,

6 : தன்னைப் புகழ்தலின் சிறப்புக் கூறுதல்:

6. தற்காத்து - கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்து. பேணி - உண்டி முதலியவற்றால் உபசரித்து. தகை - நன்மை. சொல்-புகழ் : தான்வாழும் ஊரார் கற்பால் தன்னைப் புகழ்தல். சோர்வு-மறதி.

7 : தற்காத்தலின் சிறப்புக் கூறுதல்:

சிறை - மதிலும், வாயிற் காவலும் முதலான சிறையால். எவன் செய்யும் - என்ன பயனைச் செய்யும் ? நிறை - நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல். தலை - தலையாய காவல். ஏகாரம் : பிரிநிலை.

8 : தம் கணவரைப் பேணிய மகளிர், தேவரால் பேணப்படுவர் என்பது கூறுதல் :

8. பெற்றான் - தம்மைக் கொண்ட கணவனை. பெறின் - வழிபடுதல் பெறுவாராயின். புத்தேளிர் - தேவர். பெறின் என்பதற்கு முன், வழிபடுதல் என்பது சொல்லெச்சம்.

9 : தகை சான்ற சொல் காவாவழிப்படும் குற்றம் கூறுதல் :

9. புரிந்த இல் - விரும்பிய இல்லாளை. புரிந்த என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கது. ஏறு - ஆண்சிங்கம். பீடு நடை-கம்பீரமான நடை.

10 : வாழ்க்கைத் துணைக்கு ஆவதோர் அணிகலம் கூறுதல்:

மங்கலம் - நன்மை. என்ப - என்று சொல்லுவர். மற்று - அசை. மக்கட்பேறு - புதல்வரைப் பெறுதல்.

(7) புதல்வரைப் பெறுதல்: தென்புலத்தார் கடன் இறுத்தற்கென நன் மக்களைப் பெறுதலைக் கூறுதல்:

1 : மக்களைப் பெறுதலின் சிறப்புக் கூறுதல் :

1. பெறுமவற்றுள் - ஒருவன் பெறும் கல்வி, புகழ், ஆற்றல், நன்மக்கள் முதலான பேறுகளுள் (பாக்கியங்களுள்). யாம் அறிவதில்லை - யாம் நன்கு மதிப்பதில்லை. அறிவு-அறியவேண்டுவன : பண்பு, தொழில்மேல் நின்றது. துணிவு பற்றி அறிந்த என இறந்தகாலத்தாற் கூறியது காலவழுவமைதி. அறிந்த - அறிவதற்கு உரிய.

2—3 : நன்மக்களைப் பெற்றார் அடையும் மறுமைப்பயன் கூறுதல்:

2. எழு பிறப்பும் - தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் பிறப்பு ஏழிலும். தீயவை - துன்பங்கள். தீண்டா - சென்றடையா. பழி பிறங்கா - பிறரால் பழிக்கப் படாத. பண்பு உடை - நற்குணங்களை உடைய. பண்பு என்னும் காரணப் பெயர், ஈண்டு, அதன் காரியமாகிய தானதருமங்களின்மேல் நின்றது, தந்தைதாயர் தீவினை தேய்தற்பொருட்டு, அவரை நோக்கிப் புதல்வர் செய்யும் தானதருமங்கட்கு, அவர் நற்குணம் காரணமாகலின்.

3. பொருள் செய்த மக்களைப் பொருளென உபசரித்தார்.

4—6 : இம்மைப் பயன் கூறுதல் :

4. ஆற்ற - மிக. கூழ் - சோறு.

5. மெய் - உடல். மற்று - வினைமாற்று, தீண்டல் என்னும் வினையை மாற்றிக் கேட்டல் என்றும் வினையைக் கூறவந்தமையின். தீண்டல் கேட்டல் என்னும் காரணப் பெயர்கள் அவற்றின் காரியங்களாகிய இன்பங்கள்மேல் நின்றன.

6. குழல் - குழலிசை. யாழ் - யாழிசை. குழல், யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர், அவற்றினும் மழலைச் சொல் இனிதென்பர்

என்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி, மழலைச் சொல்லைச் சிறப்பு வகையானும் கூறினர்.

7 : தந்தை கடன் கூறுதல் :

7. மகற்கு - மகனுக்கு. ஆற்றும் - செய்யத்தகும். முந்தி இருப்பச் செயல் - கற்றோர் அவையில் அவரினும் மேம்பட்டிருக்கும் படி கல்வியறிவுடையவன் ஆக்குதல்.

8 : தாய்தந்தையரினும் அவையத்தார் உவப்பர் என்பது கூறுதல்:

8. அறிவு : ஈண்டு, இயற்கை யறிவோடு கூடிய கல்வியறிவு. மா - பெரிய. மன் உயிர் - நிலை பெற்ற உயிர்கள் : ஈண்டு, அறிவுடையார்கள். தம்மின் இனிதென்க.

9 : தாய் உவகையினைப் பிரித்துக் கூறுதல்:

9. சான்றோன் - கல்வி கேள்விகளால் நிறைந்தோன். கேட்ட தாய் - அறிவுடையார் கூறக்கேட்ட தாய்.

10 : புதல்வன் கடன் கூறுதல்:

10. உதவி - கைம்மாறு. என் நோற்றான்கொல் - இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ ? எனும் சொல் - என்று சொல்லும் சொல்லை நிகழ்த்துதல்.

(8) அன்புடைமை : மனைவி, புதல்வர் முதலிய தொடர்பு உடையாரிடத்தில் காதலுடையனாதல்.

1 : அன்பினது உண்மை உணர்த்துதல் :

1. அன்பிற்கும் : உம்மை, உயர்வு சிறப்பும்மை. ஆர்வலர் - அன்புடையார். புன் கணீர்-புல்லிய கண்ணீர் : அன்புடையாரது புன்மை, அவரது கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. பூசல் தரும் - தூற்றும்.

2—6 : அன்பினது சிறப்புக் கூறுதல் :

2. எல்லாம் - எல்லாப் பொருளாலும். என்பு - உடம்பாலும் : ஆகு பெயர். என்பும் உரியராதல், புறாவிற்காகத் துலைபுக்க சிபி முதலாயினாரிடத்துக் காண்க.

3. ஆர் உயிர்க்கு - பெறுதற்கரிய மக்களுயிர்க்கு. என்போடு - உடலோடு : ஆகு பெயர். உடலோடு கூடியல்லது அன்பு செய்தல் கூடாமையால், அவ் வன்பு செய்தற்பொருட்டு இத் தொடர்ச்சி உண்டாயிற்று என்பதாம். ஆகவே, இத் தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை என்றாயிற்று.

4. ஆர்வம் - விருப்பம் நாடாச் சிறப்பு - அளவிறந்த சிறப்பு.

5. வழக்கு - நெறியின் பயன்: ஆகுபெயர். சிறப்பு - பேரின்பம், தவத்தால் துன்புற்று எய்தும் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புற்று எய்துதல் அன்பா லன்றி இல்லை என்பதாம்,

6. அன்பு சார்பு - அன்பு துணையாவது. மறத்திற்கும் - மறம் நீக்குதற்கும். மறம், ஈண்டுச் சினம்.

7—10 : அன்பில்லாத விடத்து உண்டாகும் குற்றம் கூறுதல்:

7. என்பிலது - என்பில்லாத உடம்பு. வெயில்போல - வெயில் காய்ந்தாற்போல. அன்பிலதனை - அன்பில்லாத உயிரை. 'அல்லவை செய்தார்க்கு அறங் கூற்றம்' என நான்மணிக்கடிகை கூறுவது ஈண்டு நினைத்தற் குரியது.

8. வாழ்க்கை - இல்லறத்தில் கூடி வாழ்தல். வன்பால் - கடின மாகிய பூமி. வற்றல் மரம் - உலர்ந்த மரம். வன்னிலத்தில், வற்றல் மரம் தளிர்த்தல் கூடாததுபோல, அன்பில்லாதவன், இல்லறத்தோடு கூடி வாழ்தல் கூடாதது என்பதாம்.

9. புறத்து உறுப்பு - இடம், பொருள், ஏவல் செய்வோர் முதலா யின. இவை, உறுப்புப் போறலின் உறுப்பு எனப்பட்டன.

10. உயிர்நிலை - உயிர் நின்ற உடம்பாம். என்பு தோல் போர்த்த - எலும்பைத் தோலினுற் போர்த்தனவாம் ; உயிர் நின்றன ஆகா. இல்லறத்தின் பயனைத் தாராமையின் அப்படிப்பட்ட உடம்புகள் ஆயின,

(9) விருந்தோம்பல்: விருந்தினரை வரவேற்று உபசரித்தல்.

1—2 : விருந்தோம்புதலின் சிறப்புக் கூறுதல்:

1. ஓம்பி - பொருள்களைக் காப்பாற்றி. விருந்து ஓம்பி - விருந் தினரை உபசரித்து. வேளாண்மை - உபகாரம். வேளாண்மை செய் யாத விடத்து, இல்லில் இருத்தலும், பொருளைச் சம்பாதித்துக் காப்பாற் றலும் காரணமாக உண்டாகின்ற துன்பச் செயல்களுக் கெல்லாம் பயனில்லையாம்.

2. சாவாமருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து : அமிர்தம். உண்ணப்படும் பொருள் அமிர்தமே யெனினும், தன்னை நோக்கிவந்த விருந்து, தன் இல்லின் புறத்ததாகத் தானே அதனை யுண்டல் விரும்புதல், முறைமை உடையதன்று. இனி, விருந்தின்றியே

ஒருகால் தான் உண்டலைச் சாவாமருந் தென்பார் உளராயினும், அதனை ஒழிக என்று உரைப்பினும் அமையும்.

3—5 : விருந்து ஓம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறுதல்:

3. வைகலும் - நாள்தோறும். பருவந்து - வருந்தி, நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனால் பொருள் தொலையாது மேல்மேல் கிளைக்கும் என்பதாம்.

4. அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து. செய்யாள் - திருமகள். நல்விருந்து - தக்க விருந்து. தகுதி, ஞான ஒழுக்கங்களால் உயர்தல். தன் செல்வம் நல்வழிப்படுதல் நோக்கிச் செய்யாள் மனமகிழ்வாள். இதனால் பொருள் கிளைத்தற்குக் காரணம் கூறியவாறு.

5. மிச்சில் - மிகுந்த உணவு. மிசைவான் - உண்பவன். கொல் : அசைநிலை.

6 : மறுமைக்கண் எய்தும் பயன் கூறுதல்:

6. நல்விருந்து - எய்தா விருந்து; கிடைத்தற் கரிய விருந்து.

7 : இருமையும் பயத்தற்குக் காரணம் கூறுதல்:

7. இனை துணைத்து - இன்ன அளவினது. துணை - அளவு. ஐம் பெரு வேள்வியில் விருந்தோம்பலும் ஒன்றாகலின், அதனை வேள்வி என்றார்.

8—9 : விருந்து ஓம்பாவழிப் படும் குற்றம் கூறுதல்:

8. பரிந்து - வருந்தி. வேள்வி - வேள்விப் பயன்: ஆகுபெயர்.

9. உடைமையுள் இன்மை - பொருள் உடையனும் காலத்து வறுமையாவது. விருந்தோம்பல் ஓம்பா - விருந்தோம்பலை இகழும். மடமை - பேதைமை. மடவார்கண் - பேதையாரிடம். பேதைமை யால் விருந்தோம்பலை இகழின், பொருள் நின்றவழியும் அதனால் பய னில்லை என்பதாம்.

10 : விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டும் என்பது கூறு தல்:

10. அனிச்சம் - அனிச்சப்பூ: ஆகுபெயர். விருந்து குழையும் - விருந்தினர் குழைவர். சேய்மைக்கண் கண்டவிடத்து முகமலர்ச்சி யும், அது பற்றி நெருங்கியவழி இன்சொல்லும், அது பற்றி உடன் பட்ட வழி நன்றாற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக் கண்ணே வாடி

நீங்குதலின், தீண்டியவழி அல்லது வாடாத அனிச்சப் பூவினும் விருந் தினர் மெல்லிய ரென்பதாம்.

(10) இனியவை கூறல் : மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத் துவனவான இனிய சொற்களைச் சொல்லுதல்.

1: இன்சொற்கு இலக்கணம் கூறுதல் :

1. ஆல்-அசை. ஈரம்அளைஇ - அன்போடு கலந்து. படிறு - வஞ் சனை. இலவாம் - இலவாயிருக்கின்ற. செம்பொருள் கண்டார் - அறத் தினை உணர்ந்தார். மெய்யுணர்ந்தார்க்கெல்லாம் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், அறம், 'செம்பொருள்' எனப்பட்டது, இலவாம் சொல் என இயையும். 'வாய்' என வேண்டாது கூறினர்; தீய சொற்களைக் கூறுதன என்பது அறிவித்ததற்கு.

2—3: இன்முகத்தோடு கூடிய இன்சொல், முன்னரே விருந்தினரைப் பிணித்துக்கொள்ளுதலினால், விருந்தோம்புதலில் சிறந்த தென்பது கூறுதல் :

2. அகன் அமர்ந்து - நெஞ்சு உவந்து. முகன் அமர்ந்து - முகம் இனியனாய்.

3. அமர்ந்து - விரும்பி. அறமானது இன்சொலினிடத்து உண் டாவ தன்றி, ஈகையினிடத் துண்டாவ தன்று என்பதாம்.

4—5: இனியவை கூறுவார்க்கு இம்மைப் பயன் கூறுதல் :

4. துன்பு உறூஉம் - துன்பத்தை மிகுவிக்கும். துவ்வாமை வறு மை. யார்மட்டும் - எல்லாரிடத்தும். இன்பு உறூஉம் - இன்பத்தை மிகுவிக்கும்.

5. பணிவுடையன் - தன்னால் பணியப்படும் பெரியோரிடத்துப் பணிவுடையவனாய். ஒருவற்கு - ஒருவனுக்கு. மற்று:அசை.

6: மறுமைப்பயன் கூறுதல்:

6. அல்லவை - பாவங்கள். பாவங்கள் தேய்தலாவது, தம் பகை யாகிய அறம் வளர்தலின், தமக்கு நிலையின்றி மெலிதல். நல்லவை (நன்மை பயக்கும் சொற்கள்) நாடிச் சொல்லுங்காலும், கடியவாகச் சொல்லின், அறமாகா தென்பதாம்.

7—8: இருமைப் பயனும் ஒருங்கு எய்துதல் வலியுறுத்திக் கூறுதல்:

7. நயன் ஈன்று - இம்மைக்கு நீதியையும் உண்டாக்கி. நன்றி பயக்கும் - மறுமைக்கு அறத்தையும் தரும். நீதியாவது, உலகத்தோடு பொருந்துதல். பயன் ஈன்று - பொருளால் பிறர்க்கு நன்மையைக்

கொடுத்து. தலைப்பிரியா - நீங்காத. தலைப்பிரிதல் : ஒரு சொல் நீர்மையை உடையது.

8. சிறுமை - நோய். இம்மை யின்பமாவது, உலகம் தன் வயத்த தாகலான் நல்லன எய்தி இன்புறல்.

9—10 : இன்னாத கூறலின் குற்றம் கூறுதல்:

9. காண்பான் : அனுபவித்து அறிகின்றவன். வழங்குவது - சொல்லுவது. எவன் - என்ன பயன் கருதி ? கொல், ஓ : அசை. கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாதாகலின், அது கூறலாகாதென்பது கருத்து.

10 இனிய - இனியசொற்கள். இன்னாத - கடுஞ்சொற்கள். கூறல் என்பதனால், சொற்கள் என்பது பெற்றாம். இனிய கனி இன்னாத காய் எனக் கூட்டுக. இனிய கனிகள் என்றது, ஔவை யுண்ட நெல்லிக்கனிபோல அழியாதனவற்றை. இன்னாத காய்களென்றது, காஞ்சிரங்காய்போல நஞ்சானவற்றை. கடுஞ் சொற் சொல்லுதல், முடிவில் தனக்கே இன்னாது என்பதாம்.

(11) செய்ந் நன்றி அறிதல் : தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாமை.

1—3 : காரணமில்லாமல் செய்ததும், காலத்தினால் செய்ததும், பயனை ஆராயாதவராய்ச் செய்ததும் அளவில்லாதனவாதல் கூறுதல்:

1. செய்யாமல் - தான் முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க. கைம்மாறுகளெல்லாம் காரணம் உடையன ஆதலின், காரணம் இல்லாத உதவிக்கு அவை ஒப்பாகா வாயின. செய்யாமைச் செய்த உதவி என்று பாடம் ஓதி, மறித்து உதவமாட்டாமை உள்ளவிடத்துச் செய்த உதவி என்று உரைப்பாரும் உளர்.

2. காலத்தினால் - ஆபத்துக் காலத்தில்: வேற்றுமை மயக்கம். சிறிது எனினும் - உதவியை நோக்கச் சிறிதா யிருந்ததாயினும். ஞாலத்தின் மாணப் பெரிது - (அக் காலத்தை நோக்க) நிலவுலகத்தினும் மிகப் பெரிது.

3. தூக்கார் - ஆராய்தல் இலராய். நயன் - அன்புடைமை.

4—5 : முன்கூறிய மூன்றும் அல்லாத உதவிமாத்திரமும், அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாம் என்பது கூறுதல்:

4. தினைத்துணை - தினையளவு. கொள்வர் - கருதுவர். பயன் தெரிவார் - அக் கருத்தின் பயனை அறிபவர். அக் கருத்தின் பயனாவது அங்ஙனம் கருதுவார்க்கு வரும் பயன்.

5. சால்பு - தகுதி. வரைத்து - அளவினது.

6—7: நன்றி செய்தாரது நட்பு விடலாகா தென்பது கூறுதல்:

6. மாசற்ருர் - குற்ற மற்றவர். கேண்மை - கேளாந்தன்மை நட்பாம் தன்மை. துப்பு ஆயார் - பற்றுக்கோடு ஆயினர்,

7. எழுமை எழுபிறப்பும் - வினைப்பயன் தொடரும் எழு பிறப் பினையுடைய தம் எழுவகைப் பிறப்பிலும். விழுமம் - துன்பம். துடைத்தவர் - நீக்கினவர். விரைவு தோன்றத் துடைத்தவர் என்ருர்.

8: நன்மையும் தீமையும் ஒருவனுல் செய்யப்பட்டவிடத்து: அவ் விரண்ட னுள் மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறுதல்:

8. நன்றன்று - அறமன்று. நன்றல்லது - தீமை.

9: நன்றல்லது அன்றே மறக்கும் வகை கூறுதல்:

9. கொன்றன்ன - கொன்ருல் ஒத்த. ஒன்று நன்று - நன்மை ஒன்றனையும். உள்ள - நினைக்க.

10: செய்ந்நன்றியை மறத்தலின் கொடுமை கூறுதல்:

10. உய்வு உண்டாம் - பாவத்தினின்றும் நீங்கும் வழி உண் டாம். மகற்கு - மனிதனுக்கு.

(12) ஒழுக்க முடைமை: தத்தம் மரபிற்கும் நிலைக்கும் ஏற்ற ஒழுக்கத் தினை உடையராதல்.

1—2: ஒழுக்கத்தினது சிறப்புக் கூறுதல்:

1. விழுப்பம் - சிறப்பு. ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும். உயிர், எல்லாப் பொருளினும் சிறந்ததாயினும், ஒழுக்கம்போல விழுப்பம் தாராமையின், 'உயிரினும் ஓம்பப்படும்' என்ருர்.

2. பரிந்து - வருந்தியும்: உம்மை விகாரத்தால் தொக்கது. ஓம்பி - ஒன்ருனும் அழிவுபடாமல் பேணி. தெரிந்து - ஆராய்ந்து. ஓம்பி - மனம் அடக்கி. தேரினும் - தேர்ந்தாலும்.

3—7: ஒழுக்கம் உள்ளவிடத்து உண்டாகும் குணமும், அ∴து இல்லாத விடத்து உண்டாகும் குற்றமும் கூறுதல்:

3. குடிமை-உயர்ந்த பிறப்புடைமையாம். இழுக்கம் - ஒழுக்கத்தி னின்று தவறுதல். உள் வழிப்படும் குணத்தினும் இல்வழிப்படும் குற்றம் பெரிது என்றவாறு.

4. ஓத்து - ஓதப்படும் வேதம். மறந்த வழி இழிபிறப்பினனும் ஆதலின், மறக்கலாகா தென்னும் கருத்தால், 'மறப்பினும்' என்ருர்.

சிறப்புடைய அந்தணர்க்கு மொழிந்தமையின், ஏனைய மரபினர்க்கும் கொள்ளப்படும்.

5. ஆக்கம் - செல்வம். உயர்வு - உயர்குலமாதல். உவமையால், ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சி இல்லை என்பது பெற்றும்.

6. ஒல்கார் - சுருங்கார். உரவோர் - மனவலியுடையவர். ஏதம் - குற்றம். படுபாக்கு - உண்டாதல்.

7. எய்தாப் பழி - அடைதற்கு உரிய தல்லாத பழி.

8 : பின்விளைவு கூறுதல்:

8. நன்றிக்கு - அறத்திற்கு. வித்தாகும் - காரணமாகும். இடும்பை - துன்பம். 'நன்றிக்கு வித்தாகும்' என்றதனால், தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், 'இடும்பை தரும்' என்றதனால், நல்லொழுக்கம் இன்பம் தருதலும் பெற்றும்.

9—12 : சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவகையால் தொகுத்துக் கூறுதல்:

9. ஒல்லா - முடியா. தீய - தீயசொற்கள்: பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்ம்முதலியனவும், மரபிற்கு உரிய அல்லனவுமாம். வழுக்கியும் - மறந்தும். 'சொலல்' எனவே, 'வாய்' என்பது தானே அமைந்திருக்க, 'வாயால்' என்று வேண்டாது சொல்லினர்; அவ் வாய், நற்சொற்களைப் பேசிப் பழகியதென்று தாம் வேண்டியதன் சிறப்பை முடித்தற் பொருட்டு.

10. ஒட்ட - பொருந்த. உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது, உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றால் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக் காலத்திற்கு ஏலாதன ஒழிந்து, சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான், அவையும் அடங்க, 'உலகத்தோடு ஒட்ட' என்றும், கல்விக்குப் பயன்அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆதலின், அவ் வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதார் என்றும் கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது, அடிப்படுதல்; மேற்கொண்டு ஒழுகுதல்.

(13) கல்வி: கற்றற்கு உரிய நூல்களைக் கற்றல்.

1 : கற்றல் வேண்டப்படுவது என்பதும், கற்கப்படும் நூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனால் பயனும் கூறுதல் :

1. கற்க - கற்கக் கடவன். கசடு அற - குற்றம் ஒழிய. கசடறக் கற்றலாவது, ஐயம் திரிபு நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும்

பலகாலும் பழகுதல். கற்பவை - கற்றற்குரிய நூல்கள். 'கற்பவை' என்றதனால், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை உணர்த்தும் நூல்களல்லாமல் வேறு பொருள் உணர்த்தும் நூல்கள், சில வாழ்நாளையும், சிற்றறிவையும் உடைய மக்களுக்கு ஆகா என்பது பெற்றும். கற்றபின் - கற்றால். நிற்க - அந்த நூல்கள் சொல்லுகின்ற வழியிலே நிற்கக்கடவன். நிற்றலாவது, இல்வாழ்க்கையில் நின்றவிடத்துக் கருமங்களைச் செய்து இன்பத்தை அனுபவித்துத் தக்காருக்குத் தருமஞ் செய்தலினும், துறவறம் மேற்கொண்டவிடத்துத் தவத்தால் மெய்யுணர்ந்து அவா அறுத்தலினும் தவறாமை. அதற்குத் தக -அக் கல்விக்குத் தகுதியாக.

2: கற்கப்படும் நூல்களுக்குக் கருவி ஆவனவும், அவற்றது இன்றியமையாமையும் கூறுதல்:

2. எண் - கணிதம்; தருக்கம். எழுத்து - எழுத்திலக்கணமும் அதனோடு ஒற்றுமையுடைய சொல்லிலக்கணமும். இவற்றை, அறியாதார், 'எண் எழுத்து' எனக் கூறுவர்; அறிந்தார், 'கண்' எனச் சிறப்பித்துக் கூறுவர் என்க. இவை, நால்வகைப் பொருளையும் ஐயம் திரிபின்றி உணர்ந்துகொள்வதற்குக் காரணமா யிருத்தலால், 'கண்' எனச் சிறப்பிக்கப்படும்: எனவே, இவை இன்றியமையாதன ஆயின,

3: பொருள் நூல்களையும், கருவிநூல்களையும் கற்றாரது உயர்வும், கல்லாதாரது இழிவும் கூறுதல்:

3. என்பவர் - என்று உயர்த்துச் சொல்லப்படுவார். எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் உள்ளவற்றைக் காணும் ஞானக்கண் ணுடைமையால், கற்றோரைக் 'கண்ணுடையர்' என்றும், அந்த 'ஞானக்கண்' இல்லாமல் நோய் முதலியவற்றால் துன்பம் செய்யும் ஊனக் கண்ணே உடைமையால், கல்லாதவரைப் 'புண்ணுடையர்' என்றும் கூறினார்.

4: கற்றாரது உயர்வு வகுத்துக் கூறுதல்:

4. தலைக்கூடி - சேர்ந்து. உள்ள - இனி இவரை எவ்வாறு கூடுவோம் என்று நினைக்கும்படி. தாம் நல்வழி ஒழுகுதல், பிறர்க்கு உறுதி கூறல் என்பன இரண்டும் தொழிலென ஒன்றாய் அடங்குதலின் 'அனைத்து' என்றார்.

5: கற்றாரது உயர்வும், கல்லாதாரது இழிவும் கூறுதல்:

5. உடையார் - செல்வர். இல்லார் - வறியர். உடையார், இல்லார் என்பன உலகவழக்கு. ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல். 'கடையரே கல்லாதவர்' என்பதற் கேற்பக் கடையார்க்கு மறுதலைப் பெய

ரான தலையாயினர் என்பது வருவித்துக் 'கற்றூர் தலையாயினர்' என்க. பொய்யாகிய மானம் நோக்கி, மெய்யாகிய கல்வி யிழந்தார், பின்னெரு நாளும் அறிவுடையவ ராகாமையால் 'கடையரே' என்றூர்.

6-10 : கல்வியது சிறப்புக் கூறுதல் :

6. தொட்ட அனைத்து - தோண்டிய அளவு: அகரம் தொகுத்தல் விகாரம். ஊறும் - சுரக்கும். ஈண்டுக் கேணி என்றது, அக் கேணியில் உள்ள நீரை. சிறிது கற்ற அளவினல், கற்றது போதும் என்று விடாமல், மேலும் மேலும் கற்றல் வேண்டும் என்பதாம்.

7. யாதானும் - யாதாயினும் ஒரு நாடும். சாந் துணையும் - இறக் கு மளவும். இறந்த பிறகும், கல்வி, உயிரோடு செல்லுதலால், 'சாந் துணையும்' என்றூர். ஆல் - அசைகள்.

8. ஒருமைக்கண் - ஒரு பிறப்பில். எழுமையும் - ஏழு பிறப்பி லும். ஏமாப்பு - உதவுதல். உதவுதலாவது, நல்வழியிற் சேர்த்தல். வினைகள்போல் உயிரினிடத்துப் பொருந்தி, அவ் வுயிர் சென்றவிடத்துச் செல்லு மாதலால், 'எழுமையும் ஏமாப்புடைத்து' என்றூர்.

9. இன்புறுவது - இன்பம் அடைவதற்குக் காரணமான கல் விக்கு. தாம் இன்புறுதலாவது (கல்வியால்) நிகழ் காலத்தில் சொற் பொருள்களின் சுவையை அனுபவித்தலாலும், புகழும், பூசையும் பெறுதலாலும், எதிர் காலத்தில் அது (கல்வி) அறத்தையும், வீட்டை யும் தருதலாலும், அதனல் இடையரூத இன்பத்தை அடைதல். உலகு இன்புறுதலாவது, 'இப் பெரியவரோடு கூடி அறியாதவற்றையெல் லாம் அறியப்பெற்றேம் என்றும், யாண்டுகள் பலவாக நரை இல்லா மல் ஆயினேம் என்றும்' மகிழ்தல். காமுறுவர் - விரும்புவர்.

10. கேடு இல் விழுச் செல்வம் - அழிவில்லாத சீரிய செல்வம். மற்றையவை - பொன், மணி முதலியவை. மாடு - செல்வம். அழி வின்மையாவது, தாயத்தார், வலியர், அரசர் என இவரால் கொள்ளப் படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்த விடத்துக் குறையாமையு மாம். சீர்மை - தக்காரிடத்தில் நிற்றல். பொன், மணி முதலியவற் றிற்கு, இவை இரண்டும் இல்லாமையின் அவற்றை 'மாடல்ல' என்றூர்.

(14) **சுற்றம் தழால் : தன் சுற்றத்தார் தன்னைவிட்டு நீங்காதிருக்குமாறு தழுவுதல்.**

1 : சுற்றத்தினது சிறப்புக் கூறுதல் :

1. பற்று அற்ற கண்ணும் - செல்வம் தொலைந்து வறியவன் ஆனவிடத்தும். பாராட்டுதல் - எடுத்துக் கொண்டாடும் இயல்புகள்.

2-4 : சுற்றத்தைத் தழுவுதல், முறையே செல்வத்திற்குக் காரணமும், அரணும், பயனும் ஆமாறு கூறுதல் :

2. விருப்பு அறா - அன்பு நீங்காத. அருப்பு அறா - கிளைத்தல் நீங்காத : 'அரும்பு' என்பது, எதுகைத்தொடை நோக்கி, 'அருப்பு' என விகாரம் ஆயிற்று. ஆக்கம் - செல்வங்கள் : ஆகுபெயர்.

3. அளவளா இல்லாதான் - நெஞ்சு கலத்தல் இல்லாதவன். அளவளாதல் என்பது, அளவளா என நிற்றல், முதனிலைத் தொழிற் பெயர் என்க. அளவளாதல் - உசாதல், விசாரித்தல், சம்பாஷித்தல் : ஈண்டு, நெஞ்சு கலத்தல் என்னும் பொருளில் நிற்றலால், ஆகு பெயர் என்க. வாழ்க்கை : அதற்கு ஏதுவாய செல்வங்கள் : ஆகுபெயர். குள வளா - குளத்தின் பரப்பு. கோடு - கரை. சுற்றத்தார் இல்லாதவனுடைய செல்வங்கள், தாங்குவார் இல்லாமையால் வெளியே போய் விடும் என்க.

4. சுற்றப்பட - சூழப்பட. 'பெற்ற' என்பதில் அகரமும், 'அதனால்' என்பதில் அன் சாரியையும், தொடை நோக்கி விகாரத்தால் தொக்கன. பெற்ற அதனால் என விரித் துரைக்க.

5—8 : சுற்றம் தழுவும் உபாயம் கூறுதல் :

5. ஆற்றின் - செய்ய வல்லனாயின். அடுக்கிய - தொடர்ந்த. சுற்றப்படும் - சூழப்படும். கொடுத்தலையும் இன்சொற் கூறுதலையும் வடநூலார் முறையே தானமும், சாமமும் என்பர்.

6. பேணான் - விரும்பான். அவனின் - அவன்போல. மருங்கு உடையார் - சுற்றம் உடையவர். பெருங் கொடையாவது, ஒன்றானும் வறுமை அடையாதவாறு கொடுத்தல்.

7. கரவா - மறையாது. கரைந்து - அழைத்து. ஆக்கமும் - பகை யின்மையும், பெருஞ் செல்வ முடைமையும் முதலாயின. எச்ச உம்மையால், அறமும் இன்பமுமே யன்றிப் பொருளும் வந்தடையும் என்பது பெற்றாம். அன்ன நீர்மையாவது, தாம் நுகர்வன எல்லாம் சுற்றத்தாரும் நுகருமாறு வைத்தல்.

8. வரிசை - தகுதி.

9-10: பிரிந்துபோன சுற்றத்தாருள் தழுவுதற்கு உரியவரைத் தழுவும் முறைமை கூறுதல் :

9. தமராகி - முன்னே சுற்றத்தாராயிருந்து. தன் துறந்தார் - தன்னை விட்டுப் பிரிந்துபோனவர். சுற்றம் - பின்னும் வந்து சுற்றத்தார் ஆகுதல். அமராமைக் காரணம் - அப் பொருந்தாமையின் காரணம். இன்றி - இல்லையாக. வரும் - தானே உண்டாகும். சுற்றம் என்ற சொல்லின் பின், ஆதல் என்ற ஆக்கச் சொல் வருவித் துரைக்க.

10. உழை - தன் இடத்தினின்றும். வாளா 'உழை' என்றமை யின், பிரிதற்குக் காரணம் இல்லாமை பெறப்பட்டது. காரணத்தின் - ஒரு நிமித்தத்தால். இழைத்திருந்து - அந்த நிமித்தத்தைச் செய்து வைத்து. எண்ணி - ஆராய்ந்து. கொளல் - தழுவிக்கொள்க.

(15) மருந்து : பழவினை ஒழித்து, ஏனைய காரணங்களால் வரும் பிணி களைத் தீர்க்கும் மருந்தின் திறம் கூறுதல்.

1 : உடம்பிற்கு இயல்பாகிய நோய் மூன்று வகைப்படும் என்பதும், அவை துன்பம் செய்தற்குக் காரணம் இரண்டு வகைப்படும் என்பதும் கூறுதல் :

1. மிகினும் குறையினும் - உணவும் செயல்களும் ஒருவன் இயற்கைக்கு ஒத்த அளவின அன்றி மிகுமாயினும் குறையுமாயினும். நோய் செய்யும் - துன்பம் உண்டாக்கும். நூலோர் - ஆயுள் வேத முடையார். வளி முதலா எண்ணிய மூன்று-வாதம் முதலாக எண்ணப் பட்ட மூன்று நோயும்: முற்றும்மை விகாரத்தால் தொக்கது. யாக்கைகட்கு இயல்பாய நோய்கள் வாதப் பகுதி, பித்தப் பகுதி, ஐப் பகுதி என மூன்றும். அவை துன்பம் செய்தற்குக் காரணம் உணவும் செயலும் என இரண்டாம்: இவை மிகினும் குறையினும், அம் மூன்றும் தத்தம் நிலையில் நில்லாது வருத்தும் என்க.

2-5: உண்ணப்படுவனவும், அவற்றது அளவும், காலமும், பயனும் கூறுதல் :

2. அருந்தியது - முன் உண்ட உணவு அற்றது - சீரணித்த படியை. போற்றி - குறிகளால் தெளிய அறிந்து. குறிகளாவன: உடலின் நொய்ம்மை, நோக்கின் தூய்மை, கரணங்கள் தொழிற்கு உரியவாதல், பசி மிகுதல் என இவை முதலாயின. 'உணின்' என் பது அதனது அருமை தோன்ற நின்றது.

3. அற்றால் - முன் உண்ட வுணவு அற்றால். அளவு அறிந்து - பின் உண்பதனை அறும் அளவு அறிந்து. உய்க்குமாறு - செலுத்தும் வழி. இம்மை மறுமை வீடுபேறுகள் எய்துதற்கு உரியது, இம்

மானுட உடம் பொன்றுமே யாதலால் 'உடம்பு பெற்ருன்' என்ருர். அது நெடுங்காலம் நின்ற விடத்து அவற்றைப் பெருகச்செய்து கொள்ளலா மாதலால், 'நெடிது உய்க்குமாறு' என்ருர்.

4. கடைப்பிடித்து - குறித்துக்கொண்டு. குறித்துக்கொள்ளலாவது, மாறல்லவற்றை ஆராய்ந்துகொண்டு உண்ணுதல். அவற்றைக் குறித்துக்கொள்ளாது, மனம் விரும்பிய வழியால் உண்டால், அதனுலே நோயும் மரணமும் வருதலால், 'கடைப்பிடித்து' என்ருர். மாறு கொள்ளாமையாவது, உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், கால வியல்போடு மாறு கொள்ளாமையும், சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளாமையும் ஆம். துய்க்க - உண்க. துவரப் பசித்து - மிகப்பசித்து. உண்டது அற்ருலும், அதன் பயனுகிய இரதம் அருதாதலால் அதுவும் அறல் வேண்டும் என்பார், 'துவரப்பசித்து' என்ருர். பசித்து என்னும் வயிற்றின் (சினையின்) வினை, அப் பசியை உடையான்மேல் (முதலின்மேல்) நின்றது.

5. மாறுபாடு - மேற்கூறிய மூவகை மாறுபாடுகளும். மறுத்து - தன் மனம் வேண்டிய அளவை மறுத்துக் குறைத்து. ஊறுபாடு - துன்பம். துன்பம் உறுவது உயிரே யாதலின் அதன்மேல் வைத்துக் கூறினுர். உணவு, மாறுபாடில்லாதவிடத்தும் குறைதல் நன்று என்பதாம்.

6-7: அவ்வகை உண்ணுத விடத்து உண்டாகும் இழுக்குக் கூறுதல் :

6. இழிவு அறிந்து - அக் குறைதலே நன்றென்று அறிந்து. கழிபேரிரையான்கண் - மிகப் பெரிய இரையை விழுங்குபவனிடம். இழிவறிந்துண்பான்கண் இன்பமாவது, வாதம் முதலிய மூன்றும் தத்தம் நிலையின் திரியாமையின், மனமொழிமெய்கள் அவன் வயத்தவாதலும், அதனுல் அறம் முதலிய நான்கும் எய்தலுமாம். இரையை அளவின்றி எடுத்து அதனுல் வருந்தும் விலங்கோடு ஒத்தலின், 'இரையான்' என்ருர், விதி எதிர்மறைகளை உவமமும் பொருளும் ஆக்கியது, உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் முறையே, மாறுபாடில்லாத உணவை உண்ணலா மளவிற் சிறிது குறைய உண்டால் இன்பம் உண்டாதலும், மிருகம்போல் அளவு கடந்து மிகப் பெரிய இரையை விழுங்கினுல் நோயுண்டாதலும் பெறுதற் கென்க.

7. தீ அளவன்றி - வயிற்றுத் தீ யளவு அல்லாமல். தெரியான் - ஆராயாது. தெரியான் என்ற வினைக்குத் தன் சரீர சுபாவமும், அதற்கேற்ற உணவும், காலமும் எனச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தால் வருவித்துக்கொள்க. படும் - வளரும்.

8-9: இழுக்குப்பட்டவிடத்து மருத்துவன் தீர்க்கும் வழி கூறுதல் :

8. நோய் நாடி - நோயினை அதன் குறிகளால் இன்னதென்று துணிந்து. நோய் முதல் - நோய் வருதற்குக் காரணத்தை . நாடி - ஆராய்ந்து தெளிந்து. காரணம் - உணவு செயல் என முற்கூறிய இரண்டும். அவை நாடுதற் பயன் : நோயினையும், தீர்க்கும் உபாயத் தினையும் ஐயமறத் துணிதல். தணிக்கும் வாய் - தீர்க்கும் உபாயம். மருந்து செய்தல், உதிரம் களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்க ளெல்லாம் அடங்குதற்கு, ' அது தணிக்கும் வாய் ' என்றார். கழுவாயும் உள என்பர். வாய்ப்பச் செயல் - பிழையாமற் செய்யக்கடவன். பிழையாமையாவது, பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறையில் தப்பாமை.

9. உற்றான் - நோயாளி. கற்றான் - மருத்துவன். உற்றான் அளவு - சரீர சுபாவம், பருவம், வேதனை, வலி இவற்றின் அளவு. பிணி அளவு - தீர்க்கத் தக்தது, தீர்க்கத் தகாதது, பெரும்பான்மை தீர்க்கத் தக்கது, சிறுபான்மை தீர்க்கத் தகாதது என்ற சாதி வேறு பாடும், தொடக்கம், நடு, ஈறு என்னும் அதன் பருவ வேறுபாடும், வன்மை மென்மைகளும் முதலாயின. காலம் - பெரும்பொழுது, சிறுபொழுது என்பன. உற்றான் அளவு, பிணியளவு, காலம் இம் மூன்றும் பிழையாமல் நூல் நெறியாலும், உணர்வு மிகுதியாலும் ஆராய்ந்து செய்க என்பார் ' கற்றான் கருதிச்செயல் ' என்றார்.

10: அதனைத் தீர்த்தற்கு வேண்டுவன எல்லாம் தொகுத்துக் கூறல் :

10. உழைச்செல்வான் - மருந்தினைத் தப்பாமல் இயற்றுபவன். அப்பால் நாற் கூற்று - நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தது. நான்கு என்னும் எண், நாற் கூற்றே எனப் பின் வருகின்றமையின் அது நோக்கி, அப்பால் என்று சுட்டிக் கூறி நீங்கினார். **உற்றவன் வகை நான்காவன** : பொருளுடைமை, மருத்துவன் வழி நிற்றல், நோய் நிலையை அறிவித்தல் வன்மை, மருந்தின் துன்பம் பொறுத்தல் என இவை. **தீர்ப்பான் வகை நான்காவன :** நோய் கண்டு அஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டு ஓதி யடைந்த கல்வியும் நுண்ணறிவும் உடைமை, பலகாலும் தீர்த்து வருதல், மனமொழி மெய்கள் பரிசுத்த மாதல் என இவை. **மருந்தின் வகை நான்காவன :** பல பிணிகளுக்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவு ஆற்றல்களால் மேம்படுதல், எளிதில் பெறப்படுதல், சரீர சுபாவத்தோடு பொருந்துதல் என இவை. **இயற்று வான் வகை நான்காவன :** நோயாளியினிடத்து அன்புடைமை, மன மொழி மெய்கள் பரிசுத்தமாதல், சொல்லியவற்றைச் சொல்லியபடியே செய்தல் வல்லமை, அறிவுடைமை என இவை. இவையெல்லாம் கூடியவழி யல்லது, பிணி தீராமையின் இத் தொகுதியையும் ' மருந்து ' என்றார்.

2. மணிமேகலை

மலர்வனம் புக்க காதை

1-2. வயந்த மாலை - மாதவியின் தோழி. மாதவி உரைத்த உரை-மாதவி கூறிய சொல். காவிரிப்பூம் பட்டினத்தில் நடைபெறும் இந்திரவிழாக் காலத்தில் மணிமேகலையும் மாதவியும் நடனம் செய்வது வழக்கம். அவர்கள் அவ்வாறு வாராதபடியால், சித்திராபதி என்னும் மாதவியின் தாய், வயந்தமாலையை அழைத்து, "அவர்கள் விழாவிற்கு வாராதிருத்தல் பற்றி ஊரார் கூறும் பழிமொழியை மாதவியிடம் சொல்லிவா" என்று ஏவினள். அவள் அவ்வாறே சென்று சொல்லக் கேட்ட மாதவி, "கணவன் கொலையுண்டதற்குப் பொருளாய்ச் சினந்து மதுரையை எரித்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் மகள் மணிமேகலை தவ வழியிற் செல்லுதற்கு உரியவளே யன்றி, இழிந்த பரத்தமைத் தொழிலிற்கு உரியவள் அல்லள்; ஆதலின், அவள் அங்கே வாராள். அறவணவடிகளிடம் பஞ்ச சீலம் உபதேசம் பெற்ற நானும் அங்கே வாரேன். இச் செய்தியை என் தாய் சித்திராபதிக்குச் சொல்" என்று கூறினள். இதுவே, வயந்தமாலைக்கு மாதவி கூறிய சொல். இதன் விரிவு முன் காதையில் கூறப்பட்டுள்ளது. இவ்வுரையைக் கேட்டுக்கொண்டிருந்த மாதவியின் மகள் மணிமேகலைக்கு, எல்லையில்லா வருத்தம் ஏற்பட்டது. இதுவே 'உயங்கு நோய் வருத்தம்' எனப்பட்டது. வருத்தத்து உரை - வருத்தத்தை உண்டாக்குவதற்குக் காரணமாகிய சொல். உயங்குதல் - வருந்துதல்.

3. மாமலர் நாற்றம் போல் - பெரிய தாமரை மலரிலிருந்து, அது வாய்விரிந்ததும் வாசனை வெளிப்படுவதுபோல.

4. ஏது நிகழ்ச்சி : கர்மங்களாகிய காரணங்கள் தம் தம் பயனைக் கொடுப்பதற்குத் தோற்றுதலை '**ஏது நிகழ்ச்சி**' என்று பௌத்த நூலார் கூறுவர். எதிர்ந்துளது - தோன்றியுள்ளது.

மணிமேகலைக்கு, மலர் நாற்றம்போல், ஏது நிகழ்ச்சி எதிர்ந்துள தாதலின் எனக் கூட்டுக.

5. தந்தையும் தாயும் - கோவலனும், கண்ணகியும். மாதவியே மணிமேகலையின் பெற்ற தாய் என்றாலும், ஒழுக்கச் சிறப்பைப் பின்

பற்றுதற்கு உரிய உரிமை பற்றிக் கண்ணகியே மணிமேகலையின் தாய் எனப்பட்டாள். நனி உழந்த - மிகவும் வருந்திய.

6. வெதுப்ப - சுட.

7. காரிகை - அழகி ; மணிமேகலை.

8. மாதர் - காதல்: உரிச்சொல். வரி வனப்பு அழித்து - மை எழுதிய அழகைச் சிதைத்து.

9. புலம்பு நீர் உருட்டி - வருத்தத்தால் உண்டாகிய கண்ணீரை உதிர்த்து. 'புலம்பே தனிமை' யாதலால், தனித் தனி முத்துப்போல் உருண்டு வீழ்கின்ற கண்ணீர்த்துளி எனலுமாம். பொதி அவிழ் நறு மலர் - கட்டுவிட்டு அவிழும் பருவமுடைய வாசனை உடைய மலர்.

10. இலங்கு - விளங்கும். இட்டு நீராட்ட - சொரிந்து நீராட்ட. ஈண்டு, மாலை என்றது, தொடுத்துக்கொண்டிருந்த மாலை. காரிகை, வனப்பு அழித்து மாலையை நீராட்ட என்க.

12. தாமரை தண்மதி சேர்ந்ததுபோல - தாமரை மலரானது குளிர்ந்த சந்திரனைச் சேர்ந்ததுபோல. தாமரை மலர், மாதவியின் செங் கைக்கும், மதி, மணிமேகலையின் ஒளி முகத்திற்கும் உவமை.

13. காமர் - அழகு.

14. தூ நீர் மாலை - தூய தன்மையையுடைய மாலை. தூத்தகை இழந்தது - கண்ணீரில் நனைந்து தன் தூய தன்மையை இழந்தது.

15. நிகர் மலர் - ஒளியையுடைய மலர். கொணர்வாய் - கொண்டு வருவாயாக.

16. மது மலர்க் குழலி - தேன் பொருந்திய மலர் மாலையை முன் பெல்லாம் அணிந்திருந்த கூந்தலையுடையவளான மணிமேகலை.

18. குரவர் - தாய் தந்தையரான கண்ணகியும் கோவலனும்.

19. தலைத்தலை - மேல்மேல்.

20. மதிமுகம் - சந்திரன் போன்ற முகம்.

21. நீலத்து ஆய் மலர் ஒட்டிய - ஆராய்ந்தெடுத்த குவளை மலரைத் தம் அழகால் வென்ற நீல மலர் கண்களுக்கு உவமை.

22. கடைமணி - கண்மணியின் கடை,

23. படையிட்டு நடுங்குங் காமன் - காமன் தன் படையாகிய மலரம்புகளையும் கரும்பு வில்லையும் எறிந்து விட்டு நடுங்குவான்.

24. ஆடவர்- ஆண் மக்கள். உண்டோ - இல்லை ; ஓகாரம் எதிர் மறை.

25. பெற்றியின் நின்றிடின் - தம் இயற்கை திரியாமல் இவளை விரும்பாது நிற்பாராயின்.

26. அணியிழை - விளி.

28. பாராவாரம் - கடல். பழுநிய - முதிர்ந்த.

29. காராளர் - பூவைசியர். சண்பை - ஒரு நகரம்.

30. இருபிறப்பாளன் - அந்தணன்.

31. ஒரு தனி-ஒப்பில்லாத,தனி, மிக மிக்கதனிமை: தன்னந்தனியளாய் என்க. ஓரா நெஞ்சம் - ஆராயாத நெஞ்சம்.

32. ஆராமம் - உபவனம் ; மலர்ச்சோலை.

33. விஞ்சையன் - வித்தியாதரன்.

34. மூதூர் - பழைய ஊர் ; காவிரிப்பூம்பட்டினம்.

34-35. தேவர்கோற்கு எடுத்த பெருவிழா - இந்திர விழா.

36. தாரன் - பூமாலையை யுடையவன். மாலையன்-மணிமாலையை உடையவன். தமனியப் பூணினன்-பொன் ஆபரணங்களையுடையவன்.

37. பாரோர் காணா - மக்கள் கண்ணிற்குப் புலப்படாத. பலர் தொழு படிமையன் - தேவர் பலரும் தொழும் தெய்வ வடிவை உடையவன்.

38. எடுத்தனன் - எடுத்து ; முற்றெச்சம். எற்கொண்டு - என்னைத் தூக்கிக் கொண்டு.

39. படுத்தனன் - அகப்படுத்திக் கொண்டான். அவன் பான்மையேன் ஆயினேன் - அவன் உரிமை ஆயினேன்.

40. ஈங்கு - இந் நகரத்தில். கண்மாறி - விழித்த கண் இமைக்குமளவில் மறைந்து.

41. நெட்டிடை - நெடு இடை - நீண்ட தொலைவில்.

42. மணிப் பூங் கொம்பர் மணிமேகலை - மாணிக்கப் பூங்கொம்பு போலும் மணிமேகலை : எழுவாய்.

43. அலர் கொய்யும் - மலர் பறிக்கும்.

44-81. பூக்கொய்தற்குரிய இடம் கூறுகின்றுள் :

44. மரப் பந்தர் - மலர்ச் சோலை.

45. இலவந்திகை - எந்திர வாவி. எயிற்புறம் - மதிலின் புறம்.

46. உலகமன்னவன் - சோழன். உழையோர் - பக்கத்தில் உள்ளவர்.

48. விழையார் - விரும்பமாட்டார்.

49. இமிரா-ஒலிக்க மாட்டா ; மூசா. தேவர்கள் விரும்பினமையால் மரங்களில் வண்டுகள் இமிராவாயின.

50. வாடா மாமலர் மாலைகள் தூக்கலின் - வாடாத பெரிய மலர்களால் ஆகிய மாலைகள் தொங்கவிட்டபடியினுல். வாடா மாலைகள் தேவர்களால் தூக்கப்பட்டன.

51. கை பெய் பாசம் - கையில் கொண்ட பாசம். மரங்கள் வாடா மாமலர் தூக்கப்பட்டபடியால் பூதம் காத்தல் கூறப்பட்டது.

52. உய்யானம் - அரசர் விளையாடும் காவற் சோலை.

54. சம்பாதி - சடாயுவினுடன் பிறந்தவன். காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் உள்ளதும், சம்பாதி புரம் என்று வழங்கப்படுவதுமாகிய புள்ளிருக்கு வேளூரோ, அதைச் சார்ந்த இடமோ சம்பாதி வனமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

55. தவா - கெடாத. காவிரிப் பாவை தாதை - கவேரன்.

57. முதுமைய - முதிய தன்மையையுடைய. தாக்கணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம்.

சம்பாதி வனமும் கவேர வனமும் தாக்கணங் குடையன என்க.

58. யாப்பு - உறுதி.

59. அருள் - தொடர்பு இல்லாதவரிடத்தும் தோன்றும் அளி அல்லது கருணை. அன்பு - தொடர்பு உடையவரிடத்தில் தோன்றுவதாகி அருட்கு அடிப்படையாயிருக்கும் மனநேயம்.

60. பூட்கை - மேற்கோள்.

61. பகவனது ஆணை - புத்தனது கட்டளை.

62. அதன் உள்ளது - அதன் உள்ளிடத்தது.

63-64. விளிப்பு அறை போகாது - ஓசை வெளியே செல்லாமல். மெய் புறத்து இடூஉம் - தன்னைச் சார்ந்தவருடைய உடலுருவத்தை மட்டும் வெளியே தோற்றுவிக்கும். பளிக்கறை மண்டபம் - பளிங்கால் ஆன அறையாகிய மண்டபம்.

65-66. தூநிற மா மணிச் சுடரொளி விரிந்த தாமரைப் பீடிகை - தூய நிறமுடைய சிறந்த மாணிக்கச் சோதி பரந்த பதுமபீடம். இது புத்தனது பாதபீடம். புத்தன்பாதத்தை மணிபத்மம் என்றும், அவனை வழிபடுவோர் அதுபற்றி, 'ஓம் மணி பத்மேஹூம்' என்ற மந்திரத்தை ஜபிப்பர் என்றும் கூறுவர். இவ் வழக்குப் பௌத்தமரபைப் பற்றியது. ஆங்கு இடின் - அப்பதும பீடத்தில் இட்டால்.

67. அவிழ்செய்யும் - மலரும்.

70. கடம் பூண்டு - கடமையால் மேற்கொண்டு.

71. அவர் அடிக்கு இடின் - அத்தேவர் அடியின் பொருட்டு இட்டால்.

75. நோன்பிகள் - விரதிகள். விழுமம் - இடும்பை ; வருத்தம்.

77. ஏதுவாகவும் - கருவியாகவும்.

78. பயம் - பயன்.

79. அது - அப் பீடிகை.

81. செவ்வனம் செல்லும் - நேராகச் செல்லும் ; செம்மையாகச் செல்லும்.

84 அணிப் பூங் கொம்பர் அவளொடும் - அழகிய பூங்கொம்பு போல்வாளாகிய மணிமேகலையுடன்.

86. சிமிலிக் கரண்டையன் - உறியில் வைத்த குண்டிகையை உடையவன். நுழைகோல் பிரம்பினன் - நுண்ணிதாகத் திரண்ட பிரம்பையுடையவன்.

87. தவலருஞ் சிறப்பின் அராந்தாணத்துளோன் - கேடில்லாத சிறப்பினையுடைய அராந்தாணத்தில் உள்ளவன். அராந்தாணம் என்றது அருகத்தானம் ; அருகன் கோயில் ; ஜிநாலயம்.

89. காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி - நுண்ணிய உடம்பையுடைய உயிர்கட்கும் நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல் முதலிய தன் தொழில்களால் துன்பம் நிகழுமோ என்று செயலற்று வருந்தி.

90. உயவல் - வருந்துதலையுடைய.

91. மண்ணு மேனியன் - கழுவாத அல்லது நீராடாத உடம்பை யுடையவன். வருவோன் தன்னை என்பதன்பின் 'நோக்கி' என ஒரு சொல் வருவிக்க.

93. கேண்மோ - கேளும் : ஓ - அசை.

95. புழுக்கறைப்பட்டோர் - புழுங்கச் செய்யும் அறையில் அகப்பட்டோர். வருந்தாது - வருந்தாத வண்ணம்.

96-97. இம்மைப்பயன் முதலிய மூன்றும் தரும் தேறல் எனவும், தலைமகன் உரைத்த தாகிய தேறல் எனவும் இயைக்க. தரூஉம் தலை மகன் என இயைப்பினும் அமையும். தேறல் - தெளிந்த கள்.

100. யோகம் - மருந்து ; சேர்க்கையும் ஆம்.

101. எம்மையும் கையுதிர்க் கொண்மென - தேறலை யன்றி எம்மையும் அகற்றிவிடு மென்று. சீலமில்லாதவரைக் கண்டால், அவரோடு பேசாமல் அவரைப் போகும்படி கையசைத்துக் குறிப்பித் தல் சைன முனிவர்க்கு இயல்பு.

102. உண்ணு நோன்பி - பௌர்ணமி,அமாவாசை என்ற இரண்டு உவாவிலும், அட்டமி நாளிலும், முட்டுப் பாட்டிலும் பட்டினி விட்டு உண்ணும் விரதி ; என்றது சைன முனிவனை. சூளுற்று- சபதம் செய்து.

103. உண்ம் என் - உண்ணும் என்று. ஓர் களிமகன் பின்னரும்- ஒரு கட்குடியன் பின்னே நிற்போரும்.

104. கணவிர மாலை - அலரி மாலை.

106. சிதவல் துணி - கந்தைத் துணி. சினை - கிளை.

107. சினை ததர் வீழ்பு - கிளைகளிலுள்ள செறிந்த சுள்ளிகள். வீழ்பு : சுள்ளிகளுக்கு ஆகுபெயர். ததர் - கொத்துமாம்.

108. வெண்பலி - வெண்ணீறு. சாந்தம் - சந்தனம். உரீஇ - உருவி ; பூசி.

111. சுழலலும் சுழலும் - சுழலுதலையும் செய்வன்.

112. ஒரு சிறை - ஒரு பக்கம்.

113. மறலும் - கோபிக்கும்.

114. மையலுற்ற மகன் - பித்தன்.

116. தாடி - மோவாய்.

118. வெள்ளி வெண் தோடு - சங்கினுல் செய்த காதணி.

119. கருங்கொடிப் புருவம் - கரிய ஒழுங்காகிய புருவம்.

121. மருங்குல் - இடை.

122. வட்டுடை - முழந்தாள் அளவாக உடுக்கும் உடை வகை. எழுது வரிக்கோலம் - மார்பு முதலியவற்றில் எழுதும் பத்திக் கீற்று.

123. வாணன் - ஓர் அசுரன். ஊர் - சோநகரம். மறுகு - தெரு. நீள் நிலம் அளந்தோன் - கண்ணன். மகன் - காமன் ; பிரத்யும்நன்.

125. பேடு - ஒருவகை ஆடல் அல்லது கூத்து. இது, வாணன் மகள் உழை காரணமாக அவ் வாணனுல் சிறை வைக்கப்பட்ட தன் மகன் அநிருத்தனைச் சிறை மீட்டுக் காமன் சோநகரத்து ஆடிய ஆடல்.

126. வம்ப மாக்கள் - புதியோர். கம்பலை - முழக்கம்.

127. சுடுமண் ஓங்கிய - செங்கல்லால் செய்யப்பட்டு உயர்ந்த.

128. மையறு - குற்ற மற்ற. படிவம் - தெய்வ வடிவம்.

130. வெண் சுதை - வெண்மை நிறம் பொருந்திய சுண்ணச் சாந்து. வித்தகர் - சிற்பாசாரிகள்.

132. விழவு ஆற்றுப்படுத்த - விழாவை வழிப்படுத்தின ; நடத்தின. கழிபெரு வீதி - மிக்க பெரிய தெரு.

134. ஐயவி அப்பிய நெய் அணி முச்சி - வெண் சிறு கடுகை அப்பின நெய்யை அணிந்த மயிர் முடி. முச்சி - மயிர்முடி ; உச்சி. பேய் தீண்டி வருத்தா வண்ணம் குழந்தைகளின் மயிர் முடி உச்சியில் நெய் யணிந்து வெண்சிறு கடுகை அப்புதல் மரபு. இதனுல் வெண்சிறு கடுகிற்குக் கடிப்பகை என்னும் பெயர் வந்தது. கடி - பேய்.

135-136. கயிற் கடை - கொக்கு ' வாய் ; கோக்கும் வாயுமாம் ; (கொக்கி என இக்காலத்தில் வழங்குவது). முக்காழ் - மூன்று கோவையாகிய முத்துவடம். பொலம் பிறைச் சென்னி - பொற் பிறை வடிவமாகிய ஆபரணத்தின் இரண்டு கோடுகளில் முக்காழ் தாழ என்க.

137. மெய் பெருு மழலை - எழுத்து வடிவம் நிறைந்து தோன்ருத மழலை மொழி.

138. ஐம்படை - ஐம்படைத்தாலி; காத்தற் கடவுளான திருமாலின் சங்கு, சக்கரம், கதை, கட்கம், வில் என்னும் ஐந்து ஆயு

தங்களின் வடிவமாக அமைப்பது. இதனைப் பஞ்சாயுதம் என்றும், குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் இதனை அணிதல் மரபு என்றும் கூறுவர்.

141. கிளர் பூண் - விளங்குகின்ற ஆபரணம்.

141 - 43. புதல்வரைப் பொற்றேரின் மீதுள்ள யானைமேல் ஏற்றி என்க.

144. ஆலமர் செல்வன் - கல்லாலின் கீழ்க் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான். மகன் - முருகக் கடவுள். விழாக் கால்கோள் - விழாவின் தொடக்கம்.

145. என - என்று கூற. நிற்குநர் - நிற்பவர்.

132 - 145. வீதியில் நல்லார் சிலர், கோவையையும், முச்சியையும், குதலையையும், மழலையையும், பூணையுமுடைய புதல்வரை, வேழத்து, முக்காழ் தாழச் சின்னீர் நனைப்பத் துகில் துயல்வர ஏற்றிக் காண்மினோ என்று கூற, அதனைக் கண்டு நிற்பவர்களும் என்க.

146. பேரூர் - பேரூரில். விசயனும் பேடியை - அருச்சுனனாகிய பேடியை.

147. காணிய - காண. கம்பலை மாக்கள் - வேறுசில காட்சிகள் கண்டு ஆரவாரம் செய்து திரியுமவர்.

148. வந்து புறஞ் சுற்றி - வந்து நாற்புறமும் சூழ்ந்து. பின்னரும் (103), கண்டு நிற்குநரும் (115), காண்குநரும் (125), கண்டு நிற்குநரும் (131), கண்டு நிற்குநரும் (145) வந்து புறஞ் சுற்றி (148) எனக் கூட்டுக.

149-150. அணி அமை தோற்றத்து - ஆபரணங்கள் இல்லாத தோற்றத்தையுடைய. அருந்தவப்படுத்திய - அரிய தவநெறியிற் சேர்த்த. தாயோ - மாதவியோ. இவள் - இந்த மணிமேகலை.

152 - 153. ஆங்குள அன்னம் நாணுது மடந்தை தன் நடை வல்லுந கொல்லோ என இயைக்க.

157. இசையுந அல்ல - ஒப்பன ஆகா.

158. இனைந்து உக - வருந்திச் சிந்த.

159. சேவடி நிலம் வடுவுறுமல் - சேவடியும் நிலமும் வடு அடையாதபடி, மெல்ல நடந்தாள் என்பதாம்.

160. குரவம் - குராமரம். மரவம் - வெண்கடப்ப மரம்.

161. திலகம் - மஞ்சாடி மரம். வகுளம் - மகிழ மரம்.

162. நரந்தம் - நாரத்தை. நாகம் - சுரபுன்னே.

163. பிடவம் - குட்டிப்பிடவம். தளவம் - செம்முல்லே. முடம் - வளேந்த.

164. குடசம் - வெட்பாலே. வெதிரம் - மூங்கில்.

166. எரிமலர் இலவம் - நெருப்பைப் போலச் சிவந்த பூவை யுடைய இலவமரம்.

168. சித்திரச் செய்கைப் படாம் - சித்திரத் தொழில் அமைந்த விரிப்புத் துணி.

170. தொழுதனள் காட்டிய - வன தேவதையைத் தொழுது உவ வனத்தைக் காட்டிய. புத்தன் பாத பீடிகையுள்ள வனமாதலால் அதனேத் தொழுதனள் எனலுமாம்.

3. கம்ப ராமாயணம்

கைகேசி சூழ்வினைப் படலம்

1. கங்குல் - இரவு. நள் - நடு. பின்றை - பின்பு. ஏழை - அறியாமை உடையவள் ; கைகேயி. கோயில் - மாளிகை. அயில் - வேல். துன்ன - சூழ்ந்துவர. ஆழி - ஆஞ்ஞா சக்கரம். மடங்கல் ஆளி - ஆண் சிங்கம்.

2. வாயல் - வாசல் ; வாயில். ஏயின - ஏவினபணி. பாயல் - படுக்கை. தட கண் - பெரிய கண். ஆய் இழை - ஆராய்ந்து அணிந்த நகைகளை உடையவள் ; கைகேயி.

3. அவண் - அவ்விடம். அரந்தை - துன்பம். கொல் - அசை. தழீஇ - தழுவி.

4. இயம்பலள் - பேசாதவளாய் நீடு உயிர்க்கலுற்ருள் - பெரு மூச்சு விடத் தொடங்கினாள். மன்றல் - வாசனை. தொடை - மாலை. ஆவி - உயிர்.

5. அலங்கல் - மாலை. ஞாலம் - உலகம். மாள்வர் - இறப்பர். காண்டி - பார்.

6. தார் - மாலை. வாய்மை - சொல். ஆலி - நீர்த் துளிகள். பண்டைய - முன்னே கொடுத்தவற்றை. பரிந்து - விரும்பி. அளித்தி - கொடுப்பாயாக.

7. கள் - தேன். கோதை - கூந்தலையுடையவள் ; கைகேயி. வெள்ளம் நெடு சுடர் - மிகுந்த பெரிய ஒளி. நக்கான் - சிரித்து. லோவேன் - உலோபம் செய்யேன் ; ஈயாமல் இருக்கமாட்டேன்.

8. ஆன்றவன் - சான்றவன் ; கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்கள் நிறைந்த தசரதன். அவலம் - துன்பம். துடைப்பது - போக்குவது. ஏன்ற - ஏற்ற ; கொடுப்பதாக உடன்பட்ட. ஈதி - தருவாயாக.

9. பரம் - பாரம். பகர்ந்திடு - சொல். உரம் - வலிமை. ஓர்கிலாதான் - அறியாதவன்.

10. சேய் - மகன். கொண்கன் - கணவன். புகன்று - கூறி.

11. சோக விடம் - துன்பத்தை உண்டாக்குகின்ற விஷம். துணுக்கம் - நடுக்கம். எய்தா - அடைந்து. ஆகம் - உடல். அடங்கலும் - முழுதும். அரா - பாம்பு வேழம் - யானை.

12. பூ தலம் - பூமி ; தரை. வேதனை - துன்பம் கொல்லன் - கருமான். உலை - உலைக்களம். கனல் - நெருப்பு. வெய்து உயிர்த்தான் - பெருமூச்சு விட்டான்.

13. பொங்கு - மிக்க. சோரி - இரத்தம். சலம் - கவலை. தலை மிக்கது - பெருகிற்று. அலம் தலையுற்ற - சஞ்சலம் மிக்கன. புலன்கள் ஐந்தும் - மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும்.

14. ஓவியம் - சித்திரம். உயிர்ப்பு - மூச்சு. எற்ற - மோத. அலக்கண் - துன்பம்.

15. உண்ணிறை - உள் நிறை - உள்ளே நிறைந்த, வெப்பு - கொதிப்பு. உழக்கும் - வருந்தும்.

16. களி - மதம். உம்பர் - தேவர். அன்னதே - அவ்வாறாகவே இருந்தது. ஆல் - அசை.

17. நஞ்சிலள் - இரங்கவில்லை. நஞ்சு என்பது நைந்து என்பதன் போலி. தஞ்சு : தஞ்சம் என்பதன் விகாரம். உள்ளலார்கள் - நினையார்கள்.

18. நிலை வேல் - அழியாத வேல். திசைத்தது - திகைத்தது.

19. குசை - கடிவாளம். பரி - குதிரை. மாள்வென் - இறப்பேன்.

20. சிந்தை திரிந்து - மனம் தடுமாறி. திகைத்து - மதி மயங்கி.

21. ஆவி காலும் - பெரு மூச்சு விடுவான். மெய் - உடம்பு. தளாடி - தள்ளாடி - அசைந்து. மாகம் - மேல் உலகம். நாகம் - கீழ் உலகம்.

22. நாரியர் - பெண்கள். ஞாலம் - உலகம். பூரியர் - கீழ்மக்கள். வீரியர் - வீரமுடையவர்.

23. புடைக்கும் - தட்டுவான். வாய் கடிக்கும் - உதட்டைக் கடிப்பான். வையகம் - உலகம்.

24. ஒறுப்பினும் - தண்டித்தாலும். அந்தரம் - தீமை. ஓவா - காவாமல். போகிலாளை - விலகாதவளை. இறுப்பினும் - கொல்லுதலினும். ஆவது - பொருந்துவது.

25. கோல் - செங்கோல். குறி - கருத்து. பொறை - பொறுமை. கந்து - கட்டுத் தறி. மிடை - நெருங்கும்.

26. நானிலம் - நால் நிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு பகுதிகள் கொண்ட உலகம் : ஈண்டு உலகில் உள்ளவர். ஓத - சொல்ல. எள்ளா நிற்கும் - நிந்திக்கும்.

27. உய்யார் - பிழைத்திரார். ஏனோர் - மற்றவர். நல்கும் - தருவான்.

28. ஆவி - உயிர். வண்மை - வரையாது கொடுக்கும் தன்மை. கைகயன் மான் - கேகயத்தரசன் மகள்.

29. வாய் தந்தேன் - வாயால் கொடுத்துவிட்டேன். நோய் தந்து - வருத்தத்தைக் கொடுத்து. நுவலாதே - சொல்லாதே. தாய் தந்தென்ன - தாய் கொடுத்தாற்போல ; தாயே, தந்தையே என்று கூறி இரக்க எனினும் ஆம். தழல் - நெருப்பு. தந்தீயும் - தரும் ; திரிசொல்.

30. இன்னே இன்னே - இவ்வாறாக. பன்னி - பலகால் சொல்லி. இகல் - வலிமை. முனிவாயேல் - வெறுப்பாயானால். யார் உளர் - எவர் இருக்கின்றனர் ?

31. கேளா - கேட்டு. ஆவி புழுங்கா - உயிர் வெதும்பி (அயர்கின்றான்). பொறை கூர - பொறுமை மிக. முச்சு - மூச்சு என்பதன் விகாரம்.

32. ஆளுதி - ஆள்வாயாக. உரை குன்றேன் - சொன்ன சொல் தவறேன். இறவாமை - நீங்காமை. நய-விரும்பியருள்வாய்.

33. நூறும் - அழிக்கின்ற. நையா நின்றேன் - வாடுகின்றேன். நளினம் - தாமரை. கழிவானேல் - நீங்குவானானால்.

34. முனிவு - கோபம். எஞ்சாள் - தணியாள். வசை - பழி. சரம் - அம்பு. தா - தாவும். தவிர்கென்றல் - தவிர்க என்றல் - கேளாது ஒழிக என்று கூறுதல். உரம் - வலிமை.

35. பரல் - பருக்கைக் கற்கள். மொய் - நெருங்கிய. இடி ஏறு - பேரிடி. மால்வரை - பெரிய மலை. மண்ணிடை - தரையில்.

36. வீழா - விழுந்து. ஆழா - அழுந்தி. கரை காணான் - எல்லை காணாதவனாய். போழ்ந்தாள் - பிளந்தாள். புன்மை - இழிவு. புலர்கின்றான் - தளர்கின்றான்.

37. ஒன்றா நின்ற - ஒன்றிய ; சேர்ந்த. உயர் கேள்வர் - சிறந்த கணவர். பொன்றா முன்னம் - இறப்பதற்கு முன்பு. பொன்றினர்- இறந்தனர். இன்றோர் காறும் - இன்று வரையில் : ஓர் : அசை. கொல்லுதியோ - கொல்கின்றாயோ ?

38. ஏவம் - குற்றம். ஆ - அந்தோ. ஙா அம்பால்- சொல்லாகிய அம்பினால் : உருவகம்.

39. ஏண் - பெருமை. பால் - பகுதி. ஓவா - நீங்காத. பூண் - ஆபரணம். நல்லார் - மகளிர். அடைவு - ஒப்பாவது.

40. வலம் - பலம். இகல் - வலிமை. விண்ணோர் - தேவர் அந்தரம் - தீமை ; மரணம்.

41. உன்னும் - நினைப்பான். இடர் தோயும் - துன்பக் கடலுள் மூழ்குவான். இன்னல் - துன்பம். இடியும் - நெஞ்சம் உடைவான். குவி தோள் - திரண்ட தோள்.

42. அயர்வு - தளர்ச்சி. பூழி - புழுதி. ஊழ் - முறைமை. பாழி - வலிமை. பசை - ஈரம் ; உள்ளன்பு.

43. அரிந்தான் - அறுத்துக் கொடுத்தான். ஓர் மன்னவன் - ஓர் அரசன் : புறுவைக் காக்கப் பருந்திற்குத் தன் உடலை அறுத்தளித்த சிபி என்னும் அரசன். மேனி - உடல். வரிந்து - இறுக்கி. ஆர் - கட்டப்பட்ட. பரிந்தால் - வருந்தினால். எரி - நெருப்பு. ' எரிந் தாருதே இன்னுயிர் உண்ணும் எரி' என்பதில் வேற்றுமை அணி காண்க.

44. வீந்தாளே - இறந்தவளே யாவாள். வெய்யவள் - கொடியவள். மிடல் - வலிமை.

45. வாளின் ஏறு - சிறந்த வாள். ஆகம் - மனம்.

46. சேண் உலாவிய - மிகுதி பொருந்திய. ஏண் - வலிமை. ஒன்றும் - சிறிதும். வாள் - ஒளி. நளிர் - குளிர்ந்த. கங்குல் - இரவு. முதல் ஐந்து பாடல்களில் தற்குறிப்பேற்ற அணி காண்க.

47. எண் தரும் - எண்ணப்படுகின்ற. கடை சென்ற யாமம் - கடைசியாய் வந்த யாமத்தில். சிறை - சிறகு. காமர் - அழகிய. துணை கரம் - இரண்டு கைகள். எற்றி எற்றி - பல முறை அடித்துக் கொண்டு. விளிப்ப போன்றன - அழுவன போன்றன.

48. கயம் - குளம். மருங்குல் - இடை. சிலம்புவ - ஒலிப்பவை. கயத்தி - கீழ்மகள்.

49. சேமம் - காவல் வீடு. வாமம் - அழகிய. மேகலை - இடையணி. இறத்தும் - கடந்து செல்வோம்.

50. பங்கயம் - தாமரை. கரிக்கரம் - யானையின் துதிக்கை பொரு - ஒத்த. வரித்த - கட்டின. தண் - குளிர்ந்த. நிழற்ற - நிழலைச் செய்ய. மீன் - நட்சத்திரம்.

51. நாமம் - அச்சம். காம வில் - காமனுடைய வில்லிலிருந்து எய்யப்படும் மலரம்பு. குடை - துளைக்கின்ற. கற்பியா - தெரிவித்து. தழங்கல் ஆ (க) - ஒலி போலாக. மயில் குலம் - மயில்களின் கூட்டம்.

52. பூவைமார் - நாகணவாய்ப் பறவை போன்ற மகளிர். அனுக்கம் - வருத்தம். கள்ளம் - வஞ்சம்.

53. சாய் - பெருமை; சாயல் என்பதன் விகாரமுமாம். அடங்க - அழிய. குமுதம் - ஆம்பல் மலர்கள்.

54. அராகம் - வேட்கை. முருங்கு தீ - எரிகின்ற நெருப்பு. வை - கூர்மை. மாரன் - மன்மதன். வாளி - அம்பு. வாடை - (ஈண்டுத்) தென்றல். பை அரா - படம் உடைய பாம்பு. பண் - இசை.

55. இடை ஆன - நடுவில் வந்த. எண் தவம் - எண்ணத் தக்க தவம். என - என்று. மஞ்சுதோய் புயம் - மேகத்தை ஒத்த (ஈகைத் தன்மையுடைய) கைகள். மஞ்சர்; மைந்தர் என்பதன் போலி.

56. ஐ - வியப்பு. எழில் - அழகு. குல மாமலர் - சிறந்த பெரிய மலர்கள். குவை - தொகுதி; ஈண்டு மலர்க் குவையுள்ள படுக்கை. முகிழ்த்து - மூடிக்கொண்டு. பொம் என விம்ம - பொம் என்று ஒலியா நிற்க.

57. ஆடகம் தரு பூண் - பொன்னால் செய்த ஆபரணங்கள். வஞ்சி - வஞ்சிக் கொடி போன்ற இடை. அனந்தர் - மனத்தளர்வு. ஏடு அகம் பொதிதார் - புற இதழ்களும் அக இதழ்களும் பொருந்திய மாலை. பேரி - முரசம். சேடகம் - சிறப்பு.

58. தழை ஒலித்தன - பீலிக் குஞ்சங்கள் விளங்கின. வண்டு ஒலித்தன - வண்டுகள் ரீங்காரம் செய்தன. தார் ஒலித்தன - பூ மாலைகள் விளங்கின. இழை - ஆபரணம். புள் - பறவை. வாசி - குதிரை. ஒலித்தன என்னும் சொல் பலகால் வருதலால், சொற்பின் வருநிலையணி காண்க.

59. வையம் - உலகம். நைய நைய - மிகவும் வருந்த. சேயொளி செவ்விய ஒளி. மழுங்கின - ஒளி குறைந்தன.

60. வங்கியம் - இசைக் குழல்கள். தேன் விளம்பின - தேன் வண்டுகள் போல் ஒலித்தன. வாணி - வாழ்த்துரைகள். பாணியின் பங்கி - பாட்டுக்களின் வகைகள். அம்பரம் - ஆகாயம். இயம் - வாச்சியம். கறங்கின - ஒலித்தன. நுபுரங்கள் - காற்சிலம்புகள். அலம்பின - ஒலித்தன.

61. தூபம் முற்றிய - புகையைப் போலக் (கரியதாகி) முதிர்ந்த. வெய்யவன் - சூரியன். குண(க்)குன்று - கிழக்கு மலை; உதய பர்வதம். இப் பாட்டில் தற்குறிப்பேற்ற அணி காண்க.

62. மூவர் - அரன், அரி, அயன். மூலம் - காரணம். தேவ தேவர் - தேவர்களுக்குத் தலைவராகிய சிவபெருமான். கூர் - மிக்க. பங்கயராசி - தாமரை மலர்களின் கூட்டம். முகமென்ன மலர்ந்த பங்கயராசி என்பதில விபரீத உவமையணி காண்க.

63. வேலை - பொழுது. ஏழு வேலை - ஏழு கடல். வைகல் - நாள். துரப்ப - செலுத்த. உன்னல் - நினைத்தல்.

64. குஞ்சரம் - யானை. இளையார் - இளமங்கையர். பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. அஞ்சனம் - மை. வாள் அம்புகள் - வாளும் அம்பும் போன்ற கண்கள். நாள் மலர் - புதிய மலர்.

65. சங்கை - குற்றம். நறவம் - மது. மாந்தி - குடித்து. சுவடு - அடையாளம். குவவு - திரண்ட.

66. திரு - இலக்குமி. சாதுகை மாந்தர் - நல்லொழுக்கம் பொருந்திய் ஆடவர்.

67. இமிழ் திரை - ஒலிக்கும்அலைகள். பரவை - கடல். வறுமை கூர - வெறுமை மிகும்படி. உமிழ்வது - வெளிப்படுவது. கொண்கன் - கணவன். கோமுடி - அரசிற்குரிய கிரீடம். புனைதல் - சூட்டிக்கொள்ளுதல். குழுவுகின்ற - கூடுகின்ற. அமரர் - தேவர்.

68. பாகு - சர்க்கரைப்பாகு. தோகையர் - மகளிர். சும்மை - கூட்டம். துவன்றி - நெருங்கி. பொன் நகர் - அழகிய நகரம்.

69. வேந்தர் - மன்னர் கூட்டம்.பெரிது - மிகுதி.

70. தீட்டி - பூசி. தவளம் - வெண்மை. தட கண் - பெரிய கண்கள். தோகை - மயில். இப் பாடலில் இல்பொருளுவமை அணியும் உருவக அணியும் காண்க.

71. அலங்கல் - மாலை. நிருதர் - அரக்கர். விலங்கல் - மலை. ஆசை - திசை. மத விலங்கல் - மதத்தையுடைய மலை போன்ற யானைகள். ஆல் : அசை.

72. கோடி - பலர். கவிகை - குடை. அந்தரம் - ஆகாயம். ஆர்ந்த - நிறைந்தன. கவரி - வெண்சாமரம். நிலக் கிழவர் - அரசுரிமையை யுடைய மன்னர். மௌலி - முடி. புக்கார் - புகுந்தார்.

73. இல் பயன் சிறப்பிப்பார் - மணம் செய்விப்பவர். ஈண்டிய - மிக்க. திரு - அரசு திருமகள். நான் மறைக் கிழவர் - அந்தணர்.

74. விண்ணவர் - தேவர். விசும்பு – ஆகாயம். தூர்த்தார் - நிரப்பினர். விரி திரை - கடல். ஓதை - ஒலி. கனகம் - பொன்.

75. மகுடம் - முடி. சுடர் - சூரியன். அளக்கர் - கடல். மூரல் - பற்கள். முறுவல் - புன்னகை. சோதி - ஒளி.

76. ஏயும் - பொருந்திய. வேத பாரகர் - அந்தணர். தொல்லை - பழைய. வாயில்கள் - வாயிலில் உள்ளார். மாதவக் கிழவன் - மிக்க தவத்துரிமையையுடைய வசிட்டன்.

77. கன்னி - குமரியாறு. ஈறு - இறுதி. புனல் - நீர். வாரி - கடல். பூரித்து - நிறைத்து. அங்கி - அக்கினி. வினை - ஓமம் முதலான தொழில்கள்.

78. கணித நூல் உணர்ந்த மாந்தர் - சோதிட நூலைப் பயின்றவர். பிணி - தளை; பந்தம். பெரியவன் - வசிட்டன். வல்லை - விரைவு. கொணர்தி - கொண்டுவா. பரிவு - அன்பு.

79. விண் - ஆகாயம் விண் தொட நிவந்த கோயில்: உயர்வு நவிற்சி யணி காண்க. கோயில் - அரண்மனை. தொண்டை - தொண்டைக்கனி ; கொவ்வைக் கனியும் ஆம். கூற்றம் - யமன்.

80. பொருக்கென - விரைவாக. குன்று - மலை.

81. குவலயம் - பூமி. சிற்றவை - சிறிய தாயான கைகேயி. போதுதி - வருவாயாக.

82. ஆயிரம் மௌலியான் - ஆயிரம் திருமுடிகளையுடைய திருமால். அரச வெள்ளம் - மன்னர் கூட்டம். தார் அணி தேர் - மாலைகளால் அலங்காரம் செய்த தேர்.

83. இருகையும் - இரண்டு பக்கங்களிலும். இரைத்து - ஆரவாரம் செய்து. மொய்த்தார் - நெருங்கினர்.

84. துண் எனும் சொல்லாள் - அஞ்சத்தக்க சொல்லினை யுடையவளான கைகேயி. பணைத்த வேய் - பருத்த மூங்கில். கால வேல் - யமனை ஒத்த வேல். கண் எனும் வேல் மிடை கானம்: சிலேடையோடு சேர்ந்து வந்த உருவக அணி. வேல் - வேல மரத்திற்கும், வேற்படைக்கும் சிலேடை. மிடை - நெருங்கிய.

85. சுண்ணம் - கந்தப் பொடி. சாந்து - சந்தனம். வாளி - அம்பு. புழைத்த - துளைத்த.

86. அம் கணன் - அழகிய கண்களையுடையவன். உள்ளம் தள்ளுற - மனம் தடுமாறுதலால் நைவார் - தளர்வார். எனைவர் - எத்தனை பேர்.

87. இனையர் - இத்தன்மையர். நிரைத்து - கூட்டமாகி. முனைவர் - முனிவர். மூதூர் - பழைய ஊர். எல்லை - அளவு.

88. உய்ந்தது- பிழைத்தது. ஊழி - யுகமுடிவு. கோடி - கொள்வாயாக. ஐந்து அவித்து - புலன்களிற் செல்லும் ஐந்து அவாக் களையும் அடக்கி.

89. புயல் - மழை. கைம்மாறு - பதிலுதவி. இப் பாட்டில், விபரீத உவமையணி காண்க.

90. வாரணம் - யானை ; ஈண்டுக் கஜேந்திரன். கரா உயிர் - முதலையின் உயிர். ஆரணம் - வேதம். கலுழ - சிந்த. ஆதிமூலமே என்று அழைக்க, முதலையின் வாயிலிருந்து கஜேந்திரன் என்னும் யானையைத் திருமால் காத்த செய்தி ஈண்டு அறிதற்குரியது.

91. முகில் - மேகம். 'ஆர்க்கு' என்னும் வினா இன்மை குறித்து வந்தது. 'கெட்டேன்' என்றது துயரமிகுதியாலே கைந் நெரித்துச் சொல்லும் சொல். முன்பன் - முதல்வன்.

92. ஆர்கலி - கடல், ஆர்கலி அகழ்ந்தோர் - சகர புத்திரர். கங்கை அவனியிற் கொணர்ந்தோர் - பகீரதன். புலவர் - தேவர். அசு ரரை வென்றவர் - ககுத்தன், முசுகுந்தன் முதலியோர். நிற்பது- நிலைத் திருப்பது.

93. சந்தம் - சந்தனங்கள். தா இல் - குற்றம் இல்லாத. சிந் தூரம் - திலகம். பந்திகள் - வரிசைகள். வய - வலி : உரிச்சொல். வெறுக்கை - செல்வம். நிரைப்பார் - வரிசையாய் வைப்பவர்.

94. பொருவு - ஒத்த. ஆ - பசு. நஞ்சு : நைந்து என்பதன் போலி. ஈற்றடியில் உருகி என்ற சொல் ஒரே பொருளில் பலகால் வருதல் சொற் பொருட்பின் வருநிலை அணியாம்,

95. சத்திரம் - குடை. நிழற்ற - நிழலைச் செய்ய. அத்திரம் - படை. நிழற்ற - ஒளி செய்ய. புல்லிது - சிறுமையை உடையது.

96. கார் மின் - கார் காலத்து மின்னல். கனலும் – விளங்கும். கனக ராசி - பொற் குவியல், தூர்மின் - நிரப்புங்கள்.

97. கிளர் - விளங்குகின்ற. தோகை - மயில் போன்றவளாகிய கைகேயி : ஆகு பெயர்.

98. வேர்பறியும் - அடியோடு கெடும். தெறும் - அழிப்பான் யாவது கொல் - எத் தன்மையதோ ?

99. ஆண்டு - அப்பொழுது. இனையர் - இத்தன்மையர். புரவி - குதிரை. சுந்தரம் - அழகு. நிரை - ஒழுங்கு. உறை - வசிக்கும்.

100. பூங் குழல் மகளிர் - பூவை முடித்த கூந்தலையுடைய பெண்கள். வீங்கு - வளரும். இரு - மிக்க. காணுன் - காணுதவனுய்.

101. வேத்தவை - வேந்து அவை : வலித்தல் விகாரம். மெய்ம் மை ஏத்து - உண்மையாகிய புகழ். ஓத்து - வேதம்.

102. புரவலர் - அரசர். சரணம் - அடி. விழுமிது - மேலான து; சிறந்தது.

103. சூழல் - இடம். துருவினன் வருதல் - தேடி வருதல்.

104. சென்னி - தலை. தானை - ஆடை. அந்தி - மாலை. ஆன் கன்று - பசுவின் கன்று.

105. ஏயது - ஏவியது என்பதன் விகாரம் ; அரசன் கட்டளை யிட்டது. உந்தை - உன் தந்தை : மரூஉமொழி.

106. எந்தை - என் தந்தை : மரூஉமொழி. உய்ந்தனன் - ஈடேறி னேன். வாழி - அசை. பணிமின் - கட்டளை இடுங்கள்.

107. பூழி - புழுதி. நண்ணி - அடைந்து.

108. செவ்வி - அழகு : முன்பு வெறுஞ் செந்தாமரையை ஒத் தது ; அவ்வாசகம் கேட்ட பின்பு அப்பொழுதுதான் அலர்ந்த செந் தாமரை மலரை வென்றது என்க.

109. தெருள் - அறிவின் தெளிவு. திறம்ப - பிறழ. இன்னல் - துன்பம். சகடம் - வண்டி. உடையவன் - சொந்தக்காரன். பிணி - தளை.

110. பின்னவன் - தம்பி. தலைமேற் கொண்டேன் - பயபக்தி யோ டேற்றுக்கொண்டேன்.

4. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

வருகைப் பருவம் : பத்துப் பருவங்களுள் இஃது ஆருவது. தளர் நடையிட்டு வரும் குழந்தையை 'வா' என்று அழைப்பதாகக் கூறு வது இப் பருவச் செய்தி.

1. அம் சிலம்பு - அழகிய சிலம்பு. ஒலிட - ஒலிக்க. அரிக்குரல் - தவளைபோன்ற குரலையுடைய. கிண்கிணி - குழந்தையின் ஒருவகைக் காலணி. அரற்று - ஒலிக்கும். சீறடி - சிறிய அடி. அலத்தகச் சுவடு - செம்பஞ்சுக் குழம்பின் அடையாளம். மஞ்சு - மேகம். அளகத்து இளம்பிறை - கூந்தலில் அணியும் பிறை என்னும் ஆபரணம். எந்தை- எம் தந்தையாகிய சிவபெருமான். நாற - தோன்ற. மீனாட்சியின் திரு வடிகளில், பக்தியினால்வணங்கிய அரம்பையர்தலையணியாலும், ஊடலை நீக்கும் பொருட்டு வணங்கிய சிவபெருமான் திருமுடியிலுள்ள பிறை யாலும் உண்டான அடையாளங்கள் அடிச் சுவட்டிலும் தோன்றின என்க. நூபுரம் - சிலம்பு. சிலம் பொலிக்கு அன்னத்தின் ஒலியை உவமை கொள்வர். அன்னம், சிலம் பொலியைத் தன் இனத்தின் ஒலி யென்று நினைத்தும், அம்பிகையின் நடையைக்கற்பதற் கெண்ணி யும் தொடர்ந்தது என்க. குழாம் - கூட்டம். ஓதிமம் - அன்னம். கஞ்சம் - தாமரை. கற்பகாடவியின் - கற்பகச் சோலையில் இருத்தலைப் போல. கடம்பாடவி - மதுரை. அம்பிகை அமிர்தக் கடலின் இடை யேயுள்ள மணித் தீவில் கற்பகச் சோலையில் திருக்கோயில் கொண்டுள் ளாள் என்பது நூற்றுணிபு. கயற்கண் நாயகி - மீனாட்சி.

அம்புவியில், பிறை இரண்டும் நாற, தெய்வக் குழாத்தினெடு ஓதிமம் பின் செல, மேகலை இரங்க வருக எனக் கூட்டுக.

2. குண்டு - பள்ளம். குண்டுபடு - ஆழமான. பேரகழி - பெரிய அகழி : இங்கே பாற்கடல். உளைந்து - வருந்தி. ஈன்ற - பெற்ற. பைங்கோதை - திருமகள். தமிழ்ப்பனுவல் துறைப் படியும் பிடி - கலைமகள். பனுவல் - நூல். பிடி - பெண் யானை. முண்டகம் - தாமரை. முண்டக மனை - செந்தாமரையும் வெண்டாமரையுமாகிய வீடுகள். விண்ட - மலர்ந்த. தொண்டர் - அடியார். மானதத் தட மலர்ப் பொற்கோயில் - மனமாகிய பெரிய தாமரை மலராகிய அழகிய கோயில். திருமகளும் கலைமகளும் வெறுந்தாமரை மலரில் குடிபுக, நீ சிவமணம் கமழும் அடியார் மனமாகிய தாமரை மலரில் குடி புகுவாய் என்று பாராட்டினர். மாணிக்கவல்லி - மாணிக்கக் கொடி : விளி. வில் வேள் - கரும்பு வில்லையுடைய காமன். துண்டுபடு மதிநுதல். எட்டாம் பிறைச் சந்திரனை ஒத்த நெற்றி. தோகை - இரதி. சிலை -

வில். ககனம் - ஆகாயம். முகடு - உச்சி. பூந்துணர் - பூங் கொத்து கண்டு படு கன்னல் - கற்கண்டு உண்டாவதற்குக் காரணமான கரும்பு. காடு படு - சோலை பொருந்திய ; காடுபோல் உண்டாகும் எனலுமாம்.

மதுரையிலுள்ள கருப்பங்காடு, மன்மதன் பல் வேறு உருவங் கொண்டு, இரதியுடன் சேர்ந்து அமர் செய்வதற்கு உதவும் விற்களைப் போல வளர்ந்து வணங்கி நிற்கும் என்றார்.

3. முயல்பாய் மதி - முயற்களங்கத்தையுடைய சந்திரன். சூல் - கருப்பம். சூல் அடிப்பலவு - ஈரப்பலா. குடக்கனி - குடம் போன்ற பழம். முடவு - வளைவு. தாழை - தென்னை. தாழை முப்புடைக் கனி - தேங்காய். புயல் - மேகம் ; மழை. படப்பை - தோட்டக் கூறு. தட பொழில் - பெரிய சோலை. ஏழ் பொழில் - ஏழு தீவு ; ஏழு சோலையுமாம். அண்டச் சுவர்த்தலம் - வானமாகிய சுவர். அப்புறக் கடல் - பெரும்புறக் கடல். உழக்கி - கலக்கி. தானை - படை. செங்களம் கொள - உதிரத்தால் சிறந்த போர்க்களத்தைத் தனதாக்கிக் கொள்ள. விசயம் - வெற்றி. கயற்கொடிகள் - மீன் எழுதிய கொடிகள். எடுத்தென - தூக்கினாற் போல. வெடி போய் - துள்ளிச் சென்று. குரம்பு அணை - கரைகள் பொருந்திய. பெரும்பணை - பெரிய வயல். மதுரை காவலன் - பாண்டியன் ; மலயத் துவசன்.

கயல், சிந்த மோதி அலைத்து இடித்து மடுத்து உழக்கி வெடி போய்ப் பாயும் பணை எனக் கூட்டுக.

4. வடம்பட்ட - முத்து வடமாகிய கச்சணிந்த. துணை - இரண்டு. மதுர அமுது - இனிய பால். கிம்புரி - தந்தத்தில் அணியப்படும் பூண். மருப்பு - தந்தம். பொருப்பு - மலை. சலராசி - கடல். தானநீர் - மதநீர். முடம்பட்ட மதி - பிறைச்சந்திரன். மதியை அங்குசமென எண்ணி என்க. மேகத்திற்கு முகபடாமும், நட்சத்திரங்களுக்கு அதிற் பதித்த முத்துக்களும் உவமை. களிறு - ஆண்யானை; விநாயகர். பிடி - பெண்யானை ; மீநாட்சி. களிறு பிடி என்பன உருவகங்கள். விநாயகராகிய களிறு, மீநாட்சியாகிய பிடி என்க. இப்பாடலில் விநாயகர் திருவிளையாடலின் புனைந்துரை கண்டு மகிழ்க.

5. சிவபெருமான் தேவியின் ஊடலை நீக்குவதற்கு அவள் காலில் விழுந்து வணங்கும்போது அவள் திருவடியிலுள்ள செம்பஞ்சுக் குழம்பு பட்டு இறைவன் திருமுடியிலுள்ள பிறையும் கங்கையும் செந்நிறத்தை அடைதல் இப்பாடலில் முதல் முதல் கூறப்படுகிறது காண்க.

கஞ்சம் பொலன் சீறடி - தாமரை மலர் போன்ற அழகிய சிறு அடி. பொலன் - பொன் ; அழகு. திங்கள் - சந்திரன் ; பிறை. செக்கர் மதி - சிவந்த நிறமுடைய சந்திரன். துங்கம் - சிறந்த ; மேலான.

தரங்கம் - அலை. வாணி நதி செந்நிறமுடையது. மகுட கோடீரம் - மகுடமாகிய சடை. மரகதக் கொம்பு : விளி. மா இரு விசும்பு - மிகப் பெரிய ஆகாயம். கடவுள் வேழம் - ஐராவதம். சேயிழை - செவ்விய ஆபரணங்கள் அணிந்த இந்திராணி : அன்மொழித் தொகை. வெண் கவரி வீசும் - தன் பாளைகளால் வெண் சாமரம் வீசும். ஆகாயத்தை அளாவும் கமுகமரம் என்க. கவுரியன் - பாண்டியன்.

ஊசற்பருவம் : பத்துப் பருவங்களுள் இது, பத்தாவது. ஊசலாடி யருளே எனப் பாடுவது இப்பருவச் செய்தி. ஊசல் என்பது இக் காலத் தில் ஊஞ்சல் என வழங்கும்.

1. அம்பிகை மாணிக்க ஊசலில் ஆடுதல் கூறுவது :

ஒள்ளொளிய - மிக்க ஒளியை உடைய. பவளக் கொழுங்கால்- பவளத்தால் ஆனவளம் பொருந்திய தூண். வயிர விட்டம் - வயிரத் தால் ஆகிய விட்டம். கால் விழுந்தனைய - ஒழுகிறுற் போல. தரள வடம் - முத்துவடம். வீக்கி - கட்டி. அருண ரத்நப் பலகை - செம் மாணிக்கப் பலகை. அருணம் - சிவப்பு. பருதி மண்டலம் - சூரிய மண்டலம். சிவ பெருமான் சூரிய மண்டலத்தில் எழுந்தருளியிருப் பர். அரும் பெருஞ்சுடர் - சிவபெருமான். ஆநந்தத் திரைக்கடல்- ஆநந்தமாகிய அலை வீசும் கடல். செல்வம் - சிவஞானமாகிய செல்வம். செருக்கர்கள் - இறுமாப்புடையவர்கள். மனக் கமலம் - நெஞ்சத் தாமரை. பூஞ்சேக்கை - தாமரையாகிய பீடம். பழைய பாடல் - வேதம் ; தேவார திருவாசகமுமாம். புள் - வண்டு. கமலம் என்றதற் கேற்பப் புள்ளொலி கூறப்பட்டது. சேக்கையிற் புகுந்த சுந்தரவல்லி எனக் கூட்டுக.

2. அம்பிகை முத்தாலாகிய ஊசலில் ஆடுதல் கூறுவது :

வில் - ஒளி. நித்திலம் - முத்து. மழகதிர் - இளங்கதிர். தரளம் - முத்து. ஊசலின் மிசை - ஊசலின் மேல். பொலிவ - விளங்குதல். புண்டரிகம் - வெண்டாமரை. பழம் பாடல் சொல்லுகின்றவள் - கலைமகள். கலைமகளை அம்பிகையின் ஒரு கூறு என்பர். இளநிலாத் தோற்று மதிமண்டலத் தமுத மயமா யம்மை தோன்றுகின்றது - அம்பிகை சந்திர மண்டலத்தில் இருத்தல் கூறப்படுகின்றது. எல் - ஒளி. மாணிக்க மணி முகப்பு - மாணிக்கம் பதித்த அழகிய வாயில் மாடம். சுடர்க்கடவுள் - சூரியன். மடமகள் - யமுனை நதி; அது நீல நிறமுடையது. மாணிக்க மாடத்துக்குச் சூரியனும் அதில் தவழும் மேகத்துக்கு யமுனையும் உவமைகள்.

3. அம்பிகை பொன்னூசலில் ஆடுதல் கூறுவது :

அசும்ப - துளிப்ப. நறவு - தேன். மகளிர் தம் காலால் உதைத்த லால் அசோகு மலரும் என்பர். அவ் வழக்குப் பற்றி, அம்பிகை அடிச்

O-,12
H57

சுவடுற அசோகு மலர் பூத்துதிர்தல் கூறினர். இடம் - சமயம். செஞ்சிலைக் கள்வன் - மன்மதன். மலர்பூத் துதிர்வது, செஞ்சிலைக் கள்வன் கணைகள் சொரிவதை ஒக்கும் என்றார், அசோகமலரும் மன்மதன் அம்புகளில் ஒன்றாதல் பற்றி. எரி மணி - நெருப்பைப் போன்ற மாணிக்கம். குயின்ற - பதித்த. இமைப்பது விளங்குவது. எழுநாத்தலை அக்கினியில். அவன் - சந்திரன்.

4. அம்பிகையாடும் ஊசலுக்கும் சிவபெருமான் திருவுள்ளத்திற்கும் ஒப்புமை கூறுவது :

கங்கை முடி மகிழ்நர் - சிவபெருமான். நோக்கத்து - பார்வையினால். நெக்குருகியிட - அவர் கண்களுள் ஒன்று அக்கினியாதலின் பொன்னூசல் நெக்குவிட்டு உருகிப்போக. விடர் - பிளப்பு. குடக்கனி - குடம்போலும் பழம். பிலம் ஏழும் - கீழ் உலகங்கள் ஏழினையும்.

5. பாடல் பாடி ஊசல் ஆட என்க. திருமுடி அசைப்ப - மகிழ்ச்சியால் திருமுடியை அசைக்க. செங்கண் அரவரசு - சிவந்த கண்களையுடைய பாம்புகளின் அரசாகிய ஆதிசேடன். அகிலம் - உலகம். பணாடவி - படங்களின் தொகுதி. சராசரம் - அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய எல்லாம். அம்மனே - தாயாகிய நீ. அகண்ட பகிரண்டமும் - வெளியிலுள்ள அண்டங்கள் எல்லாம். கார்க் கொந்தளக் கோதை மடவியர் - மேகம் போலும் கூந்தலில் மாலையை அணிந்த மகளிர். குழற்கு - கூந்தலுக்கு. ரவி மண்டலம் - சூரிய மண்டலம். இருட்படலம் - இருளின் பரப்பு. புகைக்கு இருட் படலம் உவமை. மடக்கிள்ளை - இளங்கிளி : உருவகம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
112029
MADRAS

22A
8·63